விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஐப்பசி 27 வெள்ளிக்கிழமை (13.11.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 329

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

O/L Exam
கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான மேல்மாகாண மாதிரி வினாத்தாள் உள்ளே...

## அரசியல் கைதிகளின் விடுதலையை கோரி

# இன்று ஹர்த்தால்

## வடக்கு -கிழக்கில் பூரணமாக அனுஷ்டிக்க கட்சிகள், பொது அமைப்புகள் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

**சிறைகளில் உண்ணாவிரதமிருந்து போராடி வரும் அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் எவ்வித நிபந்தனையுமின்றி பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யக்கோரி இன்றைய தினம் வடக்கு - கிழக்கில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.**

அரசியல் கைதிகளின் நிபந்தனையின்றிய விடுதலையை வலியுறுத்தி வடக்கு-கிழக்கு மாகாணம் முழுவதிலும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட உள்ளதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழர் விடுதலை கூட்டணி மற்றும் யாழ்.பல்கலைக் கழக ஆசிரியர் மாணவர் ஒன்றியங்கள் என்பன உட்பட பல அமைப்புக்கள் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்துள்ளன.

யாழ்.நகரில் உள்ள கடைகள் எவையும் திறக்கப்பட மாட்டாது என யாழ்.வணிகர் கழகமும் பேருந்துகள் எவையும் சேவையில் ஈடுபட மாட்டாது என வடக்கு மாகாண போக்குவரத்துத் துறை அமைச்சும் அறிவித்துள்ளது.

பாடசாலை மாணவர்கள் மற்றும்

23ஆம் பக்கம் பார்க்க....

## முதலமைச்சர் பூரண ஆதரவு

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில், வடக்கு கிழக்கு மக்களால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள ஹர்த்தாலுக்கு வடமாகாண முதல்வர் விக்னேஸ்வரன் பூரண ஆதரவு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நாளை (இன்று) வடக்கு கிழக்கு பகுதிகளில்தமிழ்அரசியல்கைதிகளை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி, தமிழ் மக்கள் ஒற்றுமையாக நின்று ஹர்த்தாலை அனுஷ்டிப்பது தமது

04ஆம் பக்கம் பார்க்க....

## 2000 பேருக்கு இரட்டை குடியுரிமை!

(கொழும்பு)

அரசாங்கம் 2000 பேருக்கு இரட்டை குடியுரிமை வழங்க தீர்மானித்துள்ளதாக உள்நாட்டு விவகார, வடமேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் எஸ்.பி.நாவின்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரட்டை குடியுரிமை தொடரபில

24ஆம் பக்கம் பார்க்க....

## பொது இடங்களிலுள்ள இராணுவத்தை அகற்ற ஜனாதிபதி இணக்கம்

(குருமன்காடு)

வட மாகாணத்தின் பொது இடங்களிலுள்ள இராணுவத்தை படிப்படியாக விலக்க ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக வவுனியா குடியிருப்பு கலாசார மண்டபம் மற்றும் பூந்தோட்டம் கூட்டுறவு பயிற்சிப் பாடசாலை என்பவற்றிலுள்ள இராணுவத்தை விலக்க இணக்கம்

24ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவமே கடத்தியது!

### ஐ.நா செயற்பாட்டு குழுவிடம் முறைப்பாடுகள் பதிவு



(யாழ்ப்பாணம்)

இராணுவமே தமது பிள்ளைகளை பலவந்தமாக கடத்தியதாக

23ஆம் பக்கம் பார்க்க....

## கைதிகளின் விடுதலை தொடர்பில் திங்களன்று முடிவை அறிவிக்கிறேன்

### வடக்கு முதல்வரிடம் ஜனாதிபதி உறுதியளிப்பு

(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு தன்னுடைய முடிவை எதிர்வரும் திங்கட்கிழமை

24ஆம் பக்கம் பார்க்க....



## தொடர்ந்து போராடுங்கள் மாற்றம்வரும் - ஐ.நா

(கொழும்பு)

நம்பிக்கையை கைவிடாது தொடர்ந்து போராடுங்கள், எங்களால் முடிந்த நடவடிக்கைகளை நாங்கள் நிச்சயம் எடுப்போம் என காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளிடம் ஐ.நா செயற்குழு அங்கத்தவர்களில் ஒருவரான ரியூக பெய்ங் தெரிவித்துள்ளார்.

காணாமல் போனவர்கள் தொடர்பில் ஆராயும் ஐ.நா செயற்குழு

04ஆம் பக்கம் பார்க்க....

## தொடர்கிறது உணவு தவிர்ப்பு; 12 கைதிகள் உடற்சோர்வு!

### மருத்துவ உதவி பெறவும் மறுப்பு

(கொழும்பு)

தம்மை பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்க கோரி தமிழ் அரசியல் கைதிகளினால் முன்னெடுக்கப்பட்டு வரும் உண்ணாவிரத போராட்டம் நேற்று ஐந்தாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதனால் பன்னிரண்டு கைதிகள் உடற்சோர்வு காரணமாக மயக்கமடைந்துள்ளனர்.

24ஆம் பக்கம் பார்க்க....

## 31 பிணைக் கைதிகளில் ஒருவரே விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகளில் 31 பேர் நேற்று முன்தினம் பிணையில் செல்ல அனுமதிக்கப் பட்டிருந்தனர்.

இவர்களை தலா 10 இலட்சம்

23ஆம் பக்கம் பார்க்க...

## சோபித தேரரின் உடல் நேற்று தீயுடன் சங்கமம்



(கொழும்பு)

சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் தேசிய அமைப்பாளர் வண.

24ஆம் பக்கம் பார்க்க....

## வங்கக்கடலில் காற்றழுத்தம்

(கொழும்பு)

தெற்கு வங்கக்கடலில் புதிதாக உருவாகியுள்ள காற்றழுத்தம் காரணமாக, இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் வெள்ள ஆபத்து ஏறபடலாம் என்று காலநிலை தொடர்பான இணையத்தளம் முன்னெச்சரிக்கை விடுத்துள்ளது.

வங்கக் கடலில் இலங்கைக்கு

04ஆம் பக்கம் பார்க்க....

## புதுடில்லி சென்ற சம்பந்தன் உடன் நாடு திரும்ப வேண்டும்

### கைதிகளை முதலில் கவனியுங்கள் - சுரேஷ்

(கொழும்பு)

அரசியல் கைதிகள் தமது விடுதலையை வலியுறுத்தி மீண்டும் உண்ணாவிரதமிருக்கும் நிலையில் அவர்களை கடந்த 7ஆம் திகதிக்கு முன்னர் விடுவிப்பதாக ஜனாதிபதியின் உறுதிமொழியை அவர்களிடம கூறிய எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தற்போது புதுடில்லியில் இரு

24ஆம் பக்கம் பார்க்க....



# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை , பளை

## வேலைக்கான கேள்வி அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்வி பச்சிலைப்பள்ளி பிரதேச சபையால் இக்ராட் (ICTAD) பதிவுச்சான்றிதழ் வைத்திருப்போர்களிடமிருந்து கோரப்படுகின்றது. கீழே காட்டப்பட்டவாறு கேள்விப்பத்திர கட்டணத்தையும். கேள்வி வைப்புப் பணத்தினையும் அலுவலக நேரத்தில் செலுத்துவதன் மூலம் கேள்விப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 13.11.2015 தொடக்கம் 24.11.2015 நண்பகல 12.00 மணிவரையான அலுவலக நேரம்
கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி :- 24.11.2015 பிற்பகல் 1.00 மணி வரை.
கேள்வி திறக்கப்படும் திகதி :- 24.11.2015 பிற்பகல் 2.00 மணி.

நிபந்தனைகள

1. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவிலுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்.
2. கேள்வியை ஏற்கவோ. மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு.
3. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு. அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையிலிட்டு "செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புவதன் மூலமோ அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடுவதன் மூலமோ குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கச் செய்வதுடன். மறுபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி " என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்..

மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

| இல | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர கட்டணம் | குறைந்த அளவு இக்ராட் (ICTAD) பதிவு |
|---|---|---|---|---|
| 01. | புலோப்பளை ஆயுர்வேதக் கட்டடம் அமைத்தல் | 35,000.00 | 2,000.00 | C9 |

மா.மகாதேவன்,
செயலாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.

(C-2704)
திகதி : - 12-11-2015

# விடுதலைக்கு ஆர்ப்பரித்தார்கள் ஆனால் பிணை எடுக்க ஆளில்லை

## அமைச்சரவையில் ராஜித கிண்டல்

(கொழும்பு)

அரசியல் கைதிகளை விடுதலைசெய்ய வேண்டும் என்று பெரிதாக கோஷமெழுப்பியவர்கள் எவரும் அவர்களுக்கு நீதிமன்றத்தால் பிணைவழங்கப்பட்டபோது பிணையெடுப்பதற்கு அங்கிருக்கவில்லை என அமைச்சரவை இணைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் மாநாட்டின் போது எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

12ஆயிரம் முன்னாள் விடுதலைப்புலிகள் அங்கத்தவர்களை விடுதலை செய்ததாக அடிக்கடிக் கூறி தம்பட்டமடித்துக்கொள்ளும் அரசாங்கம் எதற்காக 200 வரையான அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு இத்தனை இழுபறிப்படுகின்றது என கேட்கப்பட்ட கேள்விக்கு அமைச்சர் ராஜித சேனாரத்ன பதிலளிக்கையில். இவர்கள் அரசியல் கைதிகள் அல்லர். மாறாக இவர்கள் குற்றஞ்சாட்டுச் சுமத்தப்பட்ட கைதிகள். அந்த வகையில் நீதிமன்ற செயன்முறை இவர்கள் தொடர்பில் முன்னெடுக்கப்படுகின்றது. நேற்றுமுன்தினம் அவர்களுக்கு பிணைவழங்கப்பட்டது. அவர்களை விடுதலை செய்யுமாறு பெரிதாக ஆர்ப்பரித்தவர்கள் எவருமே அவரகளுக்கு பிணை வழங்கியபோது பிணையெடுப்பதற்கு அங்கு இருக்கவில்லை. அரசாங்கம அவர்களை பிணையெடுக்கும் என நீங்கள் எதிர்பார்க்க முடியாதல்லவா என அமைச்சரவைப் பேச்சாளர் கிண்டல் செய்தார். (செ-12)

# சட்ட ஒழுங்கை மீறாத வகையில் ஹர்த்தாலை அனுஷ்டியுங்கள் - பொலிஸ்

## கலகம் விளைவித்தால் கைது செய்யப்படுவர்

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறவுள்ள ஹர்த்தால். சட்டம் ஒழுங்கினை மீறாத வகையில் இடம் பெற வேண்டும் என தெரிவித்துள்ள யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வி.கே ஜயுலத், சட்ட விரோத செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்கள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படுவார்கள் என தெரிவித்தார்.

அரசியல் கைதிகளின் நிபந்தனையற்ற விடுதலையை வலியுறுத்தி வடக்கு கிழக்கில் பூரண ஹர்த்தாலுக்கு வடக்கு கிழக்கினை சேர்ந்த அரசியல் கட்சிகள். பொது அமைப்புக்கள் என்பன அழைப்பு விடுத்துள்ளன. இந்நிலையில் இன்றைய தினம் போக்குவரத்துதுறை மற்றும் வர்த்தக துறை உட்பட அனைத்து துறைகளும் முடங்கும் அபாயம் காணப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் ஹர்த்தால் பாதுகாப்பு விடயங்கள் குறித்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜயலத்திடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்றைய தினம் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில். வீதிகளில் சட்ட விரோதமான செயற்பாடுகளில் ஈடுபடும் இளைஞர்கள் மற்றும் பல தரப்பினர் களை. சட்ட விரோத செயல்களில் ஈடுபட வேண்டாமென்றும். அவ்வாறு ஈடுபடும் நபர்களை கைதுசெய்வதற்கான அனுமதி பொலிஸாருக்கு வழங்கியுள்ளதாகவும் கூறினார்

அதேநேரம். வீதிகளில் பொலிஸார் பாதுகாப்பு கடமையில் அமர்த்தப்பட்டு, பாதுகாப்பு வழங்கப்படுமென்றும் . அநாம தேய முறையில் சட்ட விரோத செயல்களில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும். கைது செய்யப்படுவார்கள் என்றும். கைதுசெய்யப்படும் நபர்கள் நீதிமன்றங்களில் ஆஜர்ப்படுத்தப்படுவார்கள் என்றும் யாழ்.பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேலும் கூறினார்.

மேலும் வீதிகளில் டயர் எரித்தல். அடி தடியல் ஈடுபடுதல் போன்ற அமைதியை சீர் குலைகக்கும் எந்த நடவடிக்கைகளில் யார் ஈடுபட்டாலும் முதலில் அவர்கள் கைது செய்யப்படுவர். அதன் பின்னரே விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (செ-4)

# பச்சிலைப் பள்ளி பிரதேச சபை-பளை

## பளை நகரத்தில் அமைந்துள்ள

## மூன்று கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்-2015

பளை பிரதேச எல்லைக்குட்பட்ட பளை நகரத்தில் அமைந்துள்ள கடைத்தொகுதியின் கீழ்வரும் கடைகளினை 01.12.2015ஆம் திகதியிலிருந்து நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கு எம்மால் கேள்விகள் கோரப்படுகின்றன. குறித்த கடைகளில் தேநீர்ச்சாலை. உணவுக்கடை. பழக்கடை. கருவாட்டுக்கடை. சிகை அலங்கரிப்பு நிலையம். வெற்றிலைக்கடை என்பன நடத்துவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

கேள்விபத்திரம் வழங்கும் திகதி:-13.11.2015 தொடக்கம் 24.11.2015 நண்பகல் 12.00 மணி வரையான அலுவலகநேரம்
கேள்விபத்திரம் ஏற்கும் கடைசித் திகதி:-24.11.2015பிற்பகல்1.00மணி
கேள்விபத்திரம் திறக்கப்படும் திகதி :-24.11.2015பிற்பகல்02.00மணி
கேள்விதிறக்கப்படும் இடம் :-பச்சிலைப்பள்ளிபிரதேச சபை

| இல | குத்தகைவிபரம் | இடம் | ஆகக்குறைந்த கேள்விதொகை | கேள்விவைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விபடிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | கடை இலக்கம் -06 | பளைநகரம் | 2,88,000.00 | 20,000.00 | 2000.00 |
| 02 | கடை இலக்கம் - 07 | பளைநகரம் | 1,92,000.00 | 20,000.00 | 2000.00 |
| 03 | கடை இலக்கம் - 08 | பளைநகரம் | 1,92,000.00 | 20,000.00 | 2000.00 |

**நிபந்தனைகள்:-**

01. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. விண்ணப்பிக்க விரும்புவோர் குறித்த 13/11/2015 தொடக்கம் 24/11/2015 நண்பகல் 12.00 மணி வரையான காலப் பகுதிக்குள் படிவத்தினை பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தலைமைபணிமனையில் அலுவலகநேரத்தில் பெற்றுக்கொண்டு குறித்தொதுக்கப்பட்ட திகதிக்குள் மீளவும் ஒப்படைக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடனும் தமது ஆளடையாளத்தை உறுதிபடுத்துவதற்காக தே.அ.அட்டை/ செல்லுபடியான கடவுச்சீட்டு/செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமுகமளித்தல் வேண்டும்.
04. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசபை, பளை" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டுபதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி" என்ற முகவரிக்கு 24.11.2015ஆம் திகதி பிற்பகல் 1.00மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
05. ஒருவர் ஒருகடைக்கு மாத்திரமே விண்ணப்பிக்கமுடியும்.
06. மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்துதல் வேண்டும். முதல் மாத வாடகைப் பணத்தினை அடுத்துவரும் (ஒவ்வொருமாதமும்) 10 ஆம் திகதிக்குள் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளவேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான தாமதக் கட்டணப்பணமாக 10% அறவிடப்படும் என்பதனையும் கவனத்தில் கொள்ளவும்.
07. கேள்விச் சித்திகரராகத் தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையினை முழுமையாகச் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினையும் மேற்கொள்ளவேண்டும்.
08. சித்திகரகுத்தகைகாரர் பாதுகாப்பு வைப்பு பணமாக மூன்று மாத கடைவாடகைத் தொகையினை முற்பணமாக செலுத்தவேண்டும்.
09. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிமக் கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமச் சான்றிதழினையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.
10. சித்திகரகுத்தகைக்காரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கு இணங்கநடந்துகொள்ளவேண்டும்.
11. மேலதிகவிரங்களைபச்சிலைப்பள்ளிபிரதேசசபையின் தலைமைஅலுவலகத்தில் கடமைநேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

மா.மகாதேவன்
செயலாளர். பச்சிலைப்பள்ளிபிரதேச சபை, பளை. (சி-2704) திகதி:-12.11.2015


## ஏல விற்பனை

யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையின் முற்றத்தில் 26/11/2015 காலை 10 மணியளவில் பொருட்களை விற்பதற்கான ஏலவிற்பனை நடைபெறவுள்ளது என்பதை அறியத் தருகின்றேன் (2290)

அதிபர்

## கணக்கீட்டு கணக்காய்வு சேவை

சகலவிதமான வாணிப நிறுவனங்களுக்குமான கணக்கீட்டு கணக்காய்வு சேவைகள் ஒழுங்கு செய்து தரப்படும். (2291)

T.P - 0779068605

## சிறிய தங்க நகை கண்டெடுப்பு

தீபாவளி தினத்தன்று நல்லூர் கோவில் வீதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் சரியான தகவலை கூறி பெறலாம். (2292)

0779266415

## தேவை

மிக்சர் கொம்பனிக்கு ஆட்கள் தேவை. பெண்கள் மட்டும். (2289)

021 222 1504
நல்லூர்

## பழுது பார்த்தல்

அனைத்து விதமான தையல் மெசின்களும் வீடுகளுக்கும் கடைகளுக்கும் வந்து திருத்திக் கொடுக்கப்படும்.

சூரியன்:-0770258694 (2294)

## ஏல விற்பனை

இடம் :- யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
காலம் :- 27-11-2015 மு.ப 10.00 மணி

பொருட்கள்
1. நூல் நிலைய மேசை - 01
2. நூல் நிலைய கதிரை - 06
3. ஸ்பீக்கர் - 01
4. பாலர் தனி மேசை - 11
5. பாலர் தனி கதிரை - 10
6. மாணவர் மேசை (நீளம்) - 15
7. மாணவர் வாங்கு - 14
8. மர அலுமாரி - 02
9. மறைப்புத்தட்டி - 06
10. மாணவர் கதிரை - 05
11. ஆசிரியர் வரவுப் பலகை - 01
12. மாணவர் வரவுப் பலகை - 01

மேற்படி பொருட்கள் ஏலத்தில் விடப்படும் என்பதை அறித்தருகின்றேன்.

அதிபர் (2288)

# காணாமற்போகச் செய்யப்பட்டோரை கண்டறிக; நல்லூரில் ஐ.நா.அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம்






படங்கள்:- உ.சாளின்







(யாழ்ப்பாணம்)

**காணாமற்போகச் செய்யப்பட்டோரினை கண்டறியக் கோரி நலலூரில் அமைந்துள்ள ஐ.நா. அலுவலகம் முன்பாக உறவினர்கள் நேற்றுக்காலை ஆர்ப்பாட்டமொன்றினை முன்னெடுத்திருந்தனர்.**

பலவந்தமாக அல்லது தன்னிச்சையற்ற வகையில் காணாமற் போகச் செய்யப்படுகின்றமை மீதான ஐக்கிய நாடுகள் செயற்பாட்டுக்குழு நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தது.

இவர்கள் நல்லூரில் அமைந்துள்ள ஐ.நா. அலுவலகத்திற்கும் சென்றிருந்தனர். இதன்போதே காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

காலை 9 மணியளவில் ஆரம்பமாகிய இப்போராட்டத்தினை வடக்கு, கிழக்கைச் சேர்ந்த 13 மனிதவுரிமை அமைப்புக்கள் இணைந்த ஒருங்கிணைப்புக் குழு ஏற்பாடு செய்திருந்தது.

இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்த காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள், தமது உறவுகளைக் கண்டு பிடித்துத் தருமாறு கதறியழுதனர்.

மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் எமது பிள்ளைகள், உறவினர்கள் கடத்தப்பட்டனர். ஆனால் தற்போதுள்ள புதிய அரசாங்கம் மௌனமாகவே இருந்து வருகின்றது.

கடந்த காலத்தில் நடைபெற்ற ஊழல்களை குழு அமைத்து விசாரணை செய்பவர்கள் எங்களது பிள்ளைகள் கடத்தப்பட்டதனை கண்டும் காணாதது போல் நடிக்கின்றனர்.

புதிய அரசு எமக்கு புதிய விடியலைத்தருமென எதிர்பார்த்தோம். ஆனால் அந்த அரசும எமக்கு இருள் படிந்த வாழ்க்கையினையே தருகின்றது.

எங்கள் உறவுகள் எங்கு உள்ளனர் என்று சொல்லுங்கள். அல்லது எம்மையும் கொன்று விடுங்கள் என அந்த உறவுகள் கதறியழுதமை எல்லோர் கண்ணையும் கலங்க வைத்தது குறிப்பிடத்தக்கது. (இ-4)

## உள்ளூராட்சித் தேர்தலில் பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கையை 25 வீதமாக உயர்த்த தீர்மானம்

உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உயர்த்தும் நோக்கில் வேட்பாளர் பட்டியலில் 25 வீதமான இடத்தை பெண்களுக்கு ஒதுக்கீடு செய்ய அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வேட்பாளர்களில் 25 வீதமானவர்கள் பெண்கள் நிறுத்தப்பட வேண்டியது கட்டாயப்படுத்தப்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், எதிர்வரும் மார்ச் மாதம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொகுதிவாரி மற்றும் விகிதாசார அடிப்படையில் நடத்தப்பட வேண்டுமென அமைச்சரவையில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. 70 வீதமான உறுப்பினர்கள் தொகுதிவாரி அடிப்படையிலும் 30 வீதமான உறுப்பினர்கள் விகிதாசார அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட வேண்டுமென யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

உத்தேசிக்கப்பட்டுள்ள முறையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை எதிர்வரும் மார்ச் மாதம் நடத்தப்பட வேண்டுமென யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7-10)

## குத்துச்சண்டையால் மாணவி உயிரிழப்பு

பாடசாலைகளுக்கிடையிலான குத்துச்சண்டை போட்டியில் எதிர் அணி போட்டியாளரால் தாக்கப்பட்ட மாணவி சிகிச்சை பலனின்றி நேற்று முன தினம் உயிரிழந்துள்ளார்.

கடந்த மாதம் 30 ஆம் திகதி கண்டி - பல்லேகல உள்ளக விளையாட்டரங்கில இடம் பெற்ற குத்துச் சண்டை போட்டியின் போதே மாணவி தாக்கப்பட்டுள்ளார். இச் சம்பவத்தில் இரத்தினபுரி சீவிலி மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்ற 17 வயதுடைய மாணவியே உயிரிழந்தவராவார். (இ-7-10)

## இலங்கை,சேர்பியா இடையே விமான சேவைக்கு அனுமதி

(கொழும்பு)

இலங்கை மற்றும் சேர்பியா ஆகிய நாடுகளுக்கு இடையில் புதிய விமான சேவை ஒன்றை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இரு நாடுகளுக்கு இடையில் விமான சேவையை ஆரம்பிப்பது தொடர்பில் இரு நாடுகளின் உயர் அதிகாரிகளுக்கு இடையில் பேச்சுவார்த்தையில் இணக்கம் ஏற்பட்டது.

இந்நிலையில் குறித்த தீர்மானம் தொடர்பில் அமைச்சரவையில் அங்கீகாரத்தை பெறுவதற்கு போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை மேற்படி அங்கீகாரம் வழங்கியுள்ளது. (இ-7-10)

## பிணைமுறி மோசடி குறித்தும் விசாரணை நடத்த வேண்டும்

### டலஸ் அழகப்பெரும வலியுறுத்து

அவன்கார்ட் போன்றே மத்திய வங்கி பிணைமுறி மோசடி குறித்தும் விசாரணை நடத்தப்பட வேண்டுமென முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

என்.எம். பெரேரா கேந்திர நிலையத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தா. அவன்கார்ட் பிரச்சினை நாட்டின் ஏனைய பிரச்சினைகளை மறக்கடிக்கச் செய்துள்ளது.

மோசடி இடம்பெற்றிருந்தால் அது குறித்து விசாரணை நடத்தி அவற்றை வெளிப்படுத்துவது அரசாங்கத்தின் கடமையாகும்.

துறைசார் அமைச்சர்கள் சிலர் இவ்வாறு மோசடி இடம் பெறவில்லை எனக் கூறுகின்றனர். எனினும், நாட்டுக்கு உண்மையை வெளிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

அவன்கார்ட் பிரச்சினையை ஓர் போர்வையாக பயன்படுத்தி ஏனைய பிரச்சினைகளை மூடி மறைக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## கசிப்பு விற்பனை; சந்தேகநபர் கைது

தீபாவளி தினத்தன்று கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட நபர் ஒருவர் நெல்லியடிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் கசிப்பு போத்தலும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

வடமராட்சி துன்னாலை வேம்படிப் பகுதியில் உள்ள நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

நெல்லியடிப்பொலிஸ்நிலையத்திற்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பொலிஸார் மேற்படி நபரை கைது செய்துள்ளனர். குறித்தநபர்தற்போது பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் எனவும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-5-60)

## கே.பி.தொடர்பில் பயங்கரவாத விசாரணைப் பிரிவு விசாரணை

விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச பொறுப்பாளர் குமரன் பதமநாதன் எனப்படும் கே.பி. தொடர்பில் பொலிஸ் பயங்கரவாத விசாரணைப் பிரிவின் ஊடாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர். விஜித ஹேரத்தினால் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த சந்தர்ப்பத்திலே இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

கே.பியை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு இந்த மனு மூலம் கேட்டு கொள்ளப்பட்டுள்ளது.

அவருக்கு எதிரான 193 குற்றச்சாட்டுகள் தொடர்பில் குறித்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீதிமன்றில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் அனைத்து மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் அறிக்கை பெற்றுக் கொண்டதாக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த குற்றச் சாட்டு தொடர்பில் கே.பியை சந்தேக நபராக கருதி இதுவரையில் எவ்வித விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை என சட்டமா அதிபர் திணைக்களம் மேலும தெரிவித்துள்ளது. (இ-7-10)

# டி வில்லியர்ஸுக்கு கிடைத்த தீபாவளிப் பரிசு




தென்னாபிரிக்க அணியின் அதிரடி வீரரான டிவில்லியர்ஸ் நேற்று முன்தினம் தனது அணி வீரர்களுடன் பட்டாசு வெடித்து தீபாவளி கொண்டாடினார்.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது.

இந்த நிலையில் தென்னாபிரிக்க அணி வீரர்கள் மத்தாப்பு கொளுத்தி தீபாவளியை கொண்டாடியுள்ளனர்.

தற்போது தென்னாபிரிக்க டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் மொகாலியில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் இந்தியா 108 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இந்நிலையில் 2-வது டெஸ்ட் போட்டி எதிர் வரும் 14ஆம் திகதி பெங்களூரில் நடக்கிறது. இந்தப் போட்டி டிவில்லியர்சுக்கு 100-வது டெஸ்ட் போட்டியாகும்.

இந்நிலையில் பெங்களூர் கால்பந்து கிளப் அணியின் முதன்மை இயக்கு அலுவலரான முஸ்தபா கோஸ், டி வில்லியர்சுக்கு பெங்களூர் கால்பந்து அணியின் ஜெர்சியையும், வாழ்நாள் உறுப்பினர் அட்டையையும் தீபாவளி பரிசாக வழங்கியுள்ளார். (க)

## முதலமைச்சர்...

உணர்வினையும், தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கையினையும் ஒற்றுமையாக நின்று உலகிற்கு பலமாக எடுத்துக் காட்டுவதற்கு உதவும். இக் ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவினை வழங்குகிறேன். இதே வேளை, என் சார்ந்த நிலைப்பாட்டிலேயே வட மாகாண அமைச்சர்களும் உள்ளனர்.

எனவே, தமிழ் அரசியல் கைதிகள் விரைவில விடுலை பெற இறைவனைப் பிரார்த்திக்கிறேன என மிகவும் உருக்கமாக குறிப்பிட்டார். (செ-12)

## தொடர்ந்து...

யாழிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் கிளை அலுவலகத்திற்கு காணாமல்போனவர்களின் உறவினர்களிடம் வாக்கு மூலத்தை பெற்றுவதற்காக வந்திருந்தனர்.

இதன்போது அவர்களின் கவனத்தை ஈர்க்கும் முகமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்ட போதே ஐ.நா செயற்குழு அங்கத்தவர்களில் ஒருவரான ரியூக் பெய்ங் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், நீங்கள் உங்கள் உறவுகளை தேடி வருகின்றீர்கள் அவர்களுக்காக போராடுகின்றீர்கள், உங்கள் நம்பிக்கையை தளரவிடாது தொடர்ந்து போராடுங்கள், நல்ல மாற்றம் வரும் என நாங்கள் நம்புகின்றோம். அதற்காக நாங்கள் எங்களால் முடிந்த நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என தெரிவித்துள்ளார். (செ-12)

## வங்கக்கடலில்...

கிழக்கே உருவாகியிருக்கும் இந்த காற்றழுத்தம், தீவிரம் பெற்று, இலங்கை மற்றும் தென்னிந்தியாவை நோக்கி நகரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால், இலங்கையிலும், தென்னிந்தியாவிலும், இந்தவார இறுதியில் அல்லது அடுத்த வார தொடக்கத்தில் வெள்ள ஆபத்து ஏற்படக்கூடும். இந்த காற்றழுத்தம் காரணமாக இலங்கை முழுவதும் கடும் மழை மற்றும் சூறாவளிக் காற்றின் தாக்கம் இருக்கும் என்றும் கருதப்படுகிறது. (செ-12)

# மரண அறிவித்தல்

## திருமதி மகாலிங்கம் நாகேஸ்வரி
(கனடா)



பரவிப்பாஞ்சான் கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும் வசிப்படமாகவும் கொண்ட திருமதி மகாலிங்கம் நாகேஸ்வரி *10-11-2015* அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலம் சென்ற மகாலிங்கத்தின் (கரைச்சி பிரதேச சபை- முரசுமோட்டை முன்னாள் மருந்தாளர்) அன்பு மனைவியும், யோகேந்திரன் (ஜேர்மனி), இரவீந்திரன் (கனடா), இராஜேஸ்வரி, தேவராசா (ஜேர்மனி), ரஜினி சண்முகநாதன் (பிரான்ஸ்), வதனி சயம்புநாதன் (இலங்கை), கலாவதி-நமுனகுலன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் கலைச்செல்வி, காந்திமதி ஆகியோரின் மாமியாரும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :-
சயம்புநாதன் வதனி
கால்நடை வைத்திய பணிமனை
கணேசபுரம்
கிளிநொச்சி.

(C-2707)

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி
# கேள்வி அறிவித்தல்-2016

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட சந்தைகள் இறைச்சிக் கடைகளுக்கு 01/01/2016-31/12/2016ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதி திகதி :-27/11/2015 பி.ப 3.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் திகதி :-30/11/2015. காலை 10.00 மணி வரை
கேள்வி திறக்கும் திகதி :-30/11/2015 பி.ப 10.30 மணி

கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு , மூலப்பிரதியை செயலாளர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடதுபக்க மேல்மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம எனும் முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

01. கேள்விப் பத்திரம் பெறுவோர் அடையாள அட்டையையும், அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் தாம் வதியும் இடத்தின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
02. ஆகக் குறைந்த கேள்வித் தொகையை விட குறைந்த கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன், கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்பட மாட்டாது.
03. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம வழங்கப்பட மாட்டாது. படிவம் வழங்கப்பட்டிருப்பின், அது அறியவருமிடத்து அவரது கேள்விகள் நிராகரிக்கப்படும்.
04. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
05. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
06. சந்தையிலிருந்து ஒரு கிலோ மீற்றர் சுற்றாடலில் மீன், மரக்கறிகள் விற்பது தடை செய்யப்பட்டுள்ளது.
07. இறைச்சிக் கடைக்கு விண்ணப்பப் படிவங்கள் பெறுபவர்கள் தங்களது முன் அனுபவத்தை நிரூபிக்கும் கடிதமும், கடை நடாத்திய பிரதேச சபையிடமிருந்து எந்த வித நிலுவையும் இல்லை என உறுதிப்படுத்திய கடிதமும் சமர்ப்பித்தல் வேண்டும்.
08. இறைச்சிக் கடைகள் குத்தகைக்கு பெறபவர்கள் இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகளை 24 மணித்தியாலயத்திற்கு முன்பு பிரதேச சபையின் மாட்டுத்தொழுவத்தில் கட்டுதல் வேண்டும்.
09. சந்தையை குத்தகைக்குப் பெறுபவர்கள் விற்பனைக்காக கொண்டு வரும் பொருட்களுக்கு விற்பனை விலையில் 04% வரி அறவிடப்படுவதுடன் அதற்கான பற்றுச் சீட்டும் வழங்கப்பட வேண்டும்.
10. துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்புடன் சந்தையை குத்தகைக்குப் பெறுபவர்கள் துவிச் சக்கரவண்டி பாதுகாப்பு கட்டணமாக ரூபா 5.00 இனையும் மோட்டார் சைக்கிள் பாதுகாப்பு கட்டணமாக ரூபா 10.00 இனையும் ஏனைய வாகனங்களுக்கு ரூபா 20.00 இனையும் அறவிடலாம் மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் அறவிடமுடியாது.
11. உற்பத்தியாளர்களால் விற்பனைக்காக சந்தைக்கு கொண்டு வரும் நிலக்கீழ் விவசாய உற்பத்திப் பொருட்கள் சில தவிர்ந்த ஏனைய பொருட்களுக்கு வியாபாரிகளால் கழிவுகள் விதிக்கப்படக் கூடாது. தரத்திற்கு ஏற்ப விலைகளை நிர்ணயம் செய்து வியாபாரிகளால் கொள்வனவு செய்யப்படுதல் வேண்டும்.
12. மேலதிக விபரங்களை அந்தந்த உப அலுவலகங்களிலும், தலைமை அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

## கேள்வி அறிவித்தல் அட்டவணை

| தொ. இல | குத்தகை விபரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| | நெல்லியடி உப அலுவலகம் | | | | |
| 01 | நெல்லியடி மரக்கறிச் சந்தை- துவிச் சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் உட்பட (அங்காடி நீங்கலாக) . | 7105000.00 | 72000.00 | 1000.00 | - |
| 02 | கோயிற் சந்தை (துவிச்சக்கர வண்டி பா.நி.உட்பட) | 72000.00 | 720.00 | 500.00 | - |
| 03 | கொட்டடிச்சந்தை | 5500.00 | 500.00 | 500.00 | 100.00 |
| 04 | நெல்லியடி மாட்டிறைச்சிக்கடை | 787000.00 | 8000.00 | 500.00 | 100.00 |
| 05 | கோயிற்சந்தை மாட்டிறைச்சிக் கடை | 450000.00 | 4500.00 | 500.00 | 100.00 |
| 06 | நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை | 67000.00 | 700.00 | 500.00 | 100.00 |
| 07 | கோயிற் சந்தை கோழியிறைச்சிக் கடை | 250500.00 | 2550.00 | 500.00 | 100.00 |
| 08 | கொட்டடி ஆட்டிறைச்சிக்கடை | 54000.00 | 550.00 | 500.00 | 100.00 |
| 09 | நெல்லியடிச் சந்தை கோழிக்கடை | 531000.00 | 5500.00 | 500.00 | 100.00 |
| 10 | நெல்லியடி மீன் சந்தை | 714000.00 | 7200.00 | 500.00 | - |
| | உடுப்பிட்டி உப அலுவலகம் | | | | |
| 11 | உடுப்பிட்டி சந்தை | 850000.00 | 8500.00 | 500.00 | - |
| 12 | அந்திரான் சந்தை | 62000.00 | 650.00 | 500.00 | - |
| 13 | நவிண்டில் சந்தை | 8500.00 | 500.00 | 500.00 | - |
| 14 | மண்டான் சந்தை | 18000.00 | 500.00 | 500.00 | - |
| 15 | உடுப்பிட்டிச் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 518000.00 | 5200.00 | 500.00 | 100.00 |
| 16 | உடுப்பிட்டிச் சந்தை கோழி இறைச்சிக்கடை | 244000.00 | 2500.00 | 500.00 | 100.00 |
| 17 | உடுப்பிட்டிச்சந்தை துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் | 106000.00 | 1100.00 | 500.00 | - |
| 18 | அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 810000.00 | 8100.00 | 500.00 | 100.00 |
| 19 | சாண்டா சந்தை மாட்டிறைச்சிக் கடை | 140000.00 | 1400.00 | 500.00 | 100.00 |
| 20 | சாண்டா சந்தை கோழிக்கடை | 66000.00 | 700.00 | 500.00 | 100.00 |
| | கட்டைவேலி உப அலுவலகம் | | | | |
| 21 | துன்னாலை வடக்கு ஆட்டிறைச்சிக கடை | 47000.00 | 500.00 | 500.00 | 100.00 |
| 22 | துன்னாலை வடக்குச் சந்தை | 28000.00 | 500.00 | 500.00 | 100.00 |

**க.கனகதுரை**
செயலாளர்
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி.
12/11/2015.

# ALUMNI ASSOCIATION

## JAFFNA ADVANCED TECHNOLOGICAL INSTITUTE

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

SLIATE



அனிஸ்ரெனா தார்சியஸ்
அருட்செல்வி நந்தகுமார்
சந்திரிக்கா சுப்பிரமணியம்
டிலானி அம்பலவாணர்
கஜேந்தினி பரராஜசிங்கம்
கோபிகா சுப்பிரமணியம்
குணரத்தினம் யுகெந்திரா
ஜனனி சற்குருநாதன்
யசிரோசி தர்மரட்ணம்
யூடித்க்ஷாலினி சாள்ஸ்போல்ராஜா



கலைச்செல்வி கருணாநிதி
கவிதா கங்காதரன்
லாவண்யாவதி விக்னராஜா
லியோணிக்ஸ் நிக்ஷன் பிளாவியோ
லக்சிகா வெற்றிவேல்நாதன்
மகாலிங்கம் மயூரன்
மயில்வாகனம் ஜெயரூபன்
மகிழினி கெங்காதரன்
மஞ்சுளா தில்லைநடராசா
மேரி ஜோதினி கபிலஸ்



மதுவந்தி பரராஜசிங்கம்
நீரஜா பாரதிதாசன்
நிசாந்தினி சதாசிவம்
பிரியதர்சினி பூபாலசிங்கம்
இராஜலக்ஸ்மி நவரட்ணம்
இராசன் ஞானசீலன்
இராசையா குருபரன்
ரவீந்திரன் ரமணன்
றெக்சலா இருதயசீலன்
சத்தியநாதன் நிதிபன்



சயந்தினி தவராஜசிங்கம்
செபஸ்ரியாம்பிள்ளை ஜெயதீபன்
செல்வரத்தினம் தினேஸ்
சண்முகானந்தன் நிசாந்தன்
சிந்துஜா சிவானந்தன்
சிந்துஜா பரராஜசிங்கம்
வேலாயுதம் உதயராஜ்
சுபாசினி துரைராசா
சுகன்யா கனகலிங்கம்
சுகன்யா தவவிநாயகம்



தாரங்கனி ஜோசப் வின்சன் பிறிட்டோ
தேனுகா ஜெறோமியாஸ்
துர்க்கா யோகேஸ்வரன்
துசுஷிக்கா பேரின்பநாதன்

இன்று ( 13.11.2015 ) வெள்ளிக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இலங்கை உயர் தொழில் நுட்பவியல் நிறுவன 12 வது பட்டமளிப்பு வைபவத்தில் HNDA, HNDM, HNDIT, HNDE, HNDTHM பட்டம் பெறும் யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களையும் பட்டம் பெறும் ஏனைய மாணவர்களையும் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

ALUMNI ASSOCIATION
JAFFNA ADVANCED TECHNOLOGICAL INSTITUTE,
No.665/2, BEACH ROAD, JAFFNA
Tele.:- 021 3206542 E-mail :-jatialumni@gmail.com



உஷாலினி விக்னேஸ்வரன்
உஷாந்தினி சோமசுந்தரம்
வாசுகி வாசுதேவன்




யோகவேல் வேலும்மயிலும்
விசாளினி கறுப்பையா
ரகுநாதன் இளவரசன்
காந்தராஜா அனோஜன்
விமலேந்திரன் முகுந்தன்
குமாரசாமி சுஜிதன்
பேரானந்தசிவம் வஜீவன்
நடராசா செந்தில்குமரன்
அன்ரனி யசிக்கா அந்தோனிப்பிள்ளை



காயத்ரி சுப்பிரமணியம்
கோபிகா யோகநாதன்
கோசலரூபினி சஞ்சிவ்காந்
திருமதி. கௌசல்யா திவாகரன்
நிஷாலினி முத்துக்கிருஷ்ணன்
நிஷானி ராஜேந்திரன்
நிவேகா சுப்பிரமணியம்
பிரசாந்தி பாலசுப்பிரமணியம்
இரவீந்திரராசா பிரதீபன்
சாயிதமிழினி ஞானசூரியம்



திருமதி. செல்வரஞ்சனி சதானந்தன்
சியாமினி ரவீந்திரா
சிவகௌரி குலசேகரம்
ஸ்ரனிஸ்லோஸ் அஞ்சலோ
சுமித்திரா கனகரத்தினம்
உலகநாதன் ஜெயகாந்
உமாலினி சுபஸ்ரீ
விஜயதர்சினி கணேசராஜா
திருமதி. விஜிதா ஜெயநாயகி இரட்ணராஜ்
யோகலிங்கம் வாசுதேவன்




ஜெயராமநாதன் பிறேம்லால்
மருதையினான் சிறிடரன்
நிலானி பாக்கியராசா
பிரசாந்தி கனகலிங்கம்
சத்தியமூர்த்தி சுபகீதன்
விவேதிகா இரத்தினசேகர்
யோகராசா யாதவன்
அஸெம்ரா அருள்பிரகாசம்



லட்சுமணன் பானுரேகா
நிரோச்சினி விக்ராக்குமார்
ரமணி பொன்னையா
சஜிதா யோகநாதன்
சரண்யா கந்தையா
சுசிகலா அமுர்தலிங்கம்
சோபிகா லோகேஸ்வரன்
தர்சிகா ஜெகநாதன்
தர்சுஜா புலேந்திரராஜா
தெய்வேந்திரம் சரண்ராஜ்




துஸ்யந்தி முருகேசு
வனிதா சிவலிங்கம்
வராகி தம்பிராசா
யோகவேணி வேலும்மயிலும்
கீர்த்திகா சிவபாதசுந்தரம்
இராமதாஸ் அஜன்
சுவேதிகா இராஜேஸ்வரன்
விநுஷகா மயில்வாகனம்

# அனைத்து அரசியல் கைதிகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய்க

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

அனைத்து அரசியல் கைதிகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ள புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி, இன்று வடக்கு கிழக்கில் இடம்பெறும் ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவையும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அக் கட்சியின் வட பிரதேச செயலாளர் செல்வம் கதிர்காமநாதன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இலங்கையில் நடைபெற்று வந்த யுத்தம் முடிவுக்கு வந்து ஆறு ஆண்டுகள் கழிந்துள்ள நிலையிலும் அரசியல் கைதிகள் எவரும் விடுதலை செய்யப்படவில்லை. அவர்களின் விடுதலை பற்றி ஆட்சியில் இருப்பவர்களுக்கு எந்த அக்கறையும் இருப்பதாக கூறிவிட முடியாது.

இந்த நிலையில் தங்களின் விடுதலையை வலியுறுத்தி சிறைகளில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள். அவர்களின் விடுதலை நியாயமானது. அவர்களின் போராட்டத்தை நிறுத்தி பொது மன்னிப்பு அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும் என எமது புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி வேண்டுகோள் விடுத்து பல இடங்களில் கவனயீர்ப்பு போராட்டங்களை நடத்தியுள்ளது.

இந் நிலையில் கடந்த 7 ஆம் திகதிக்கு முன்னர் கைதிகளை விடுதலை செய்வதாகக கூறி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதிமொழி வழங்கியிருந்தார். அதனை நம்பிய கைதிகள் தற்காலிகமாக உண்ணாவிரதத்தை நிறுத்தி விடுதலைக்காக காத்திருந்தார்கள். எதுவும் நடைபெறவில்லை என்பதால் மறுநாள் 8 ஆம் திகதி மீண்டும் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள். இதனை அறிந்த அரசாங்கம் பகுதி பகுதியாக விடுதலை செய்வதாகவும் முதற்கட்டமாக 30 பேரை விடுதலை செய்வதாகவும் கூறினார்கள். எந்த பயனும் கிடைக்கவில்லை.

குறிப்பிட்ட சிலரை மட்டும விடுதலை நிபந்தனை அடிப்படையில் விடுதலை செய்வதன் மூலம் பிரச்சினை தீர்ந்து போவதில்லை. மாறாக இது அரசியல் கைதிகளின் போராட்டத்தை பலவீனப்படுத்தி முடக்குவதாக அமையும். அரசியல் கைதிகள் அனைவரும் முழுமையாக விடுதலை செயயப்படவேண்டும்.

இவ்விடயத்தை அரசும் ஜனாதிபதியும் கவனமெடுக்க வேண்டும். இதன் மூலம் இனங்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்த முடியும் என நம்புகிறோம்.

சிறைகளில் நடைபெறும் நியாயமான கைதிகளின் போராட்டத்திற்கு எமது புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி ஆதரவு தெரிவிக்கின்றது. அவர்களின் விடுதலையை வலியுறுத்தி வடக்கு,கிழக்கு மாவட்டங்களில் இன்று கடைஅடைப்பு ஹர்த்தால் நடவடிக்கைகளுக்கு எமது கட்சியும் தனது பூரண ஆதரவை தெரிவிக்கின்றது.

கைதிகளின் நியாயமான போராட்டத்திற்கு அனைத்து மக்களும் ஒத்துழைக்குமாறு எமது புதிய மாக்சிச லெனினிச கட்சியின் வட பிரதேச செயலாளர் செல்வம் கதிர்காமநாதன் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ். பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் க.நித்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பிரதம செயலாளர், செயலக கணக்காளர் ந.ஜெயகணேசன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். இதன்போது நிறுவுநர்தினப் பேருரையினை மூத்த எழுத்தாளர் து.குலசிங்கம் நிகழ்த்தவுள்ளார்.

பரிசில்களை கிளிநொச்சி மத்திய கல்லூரி ஆசிரியை திருமதி. தவதாரணி ஜெயகணேஸ் வழங்கவுள்ளார். (இ-5)




# கூட்டுறவு தின விழாவும் கௌரவித்தல் நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால நடத்தப்படும் 93 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவும் 2015 ஆம்ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளை கௌரவித்தல் நிகழ்வும் நாளை சனிக்கிழமை யாழ். வீரசிங்கம் கூட்டுறவாளர் மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருமான மதுமதி வசந்தகுமார் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சு.கணேசு, மக்கள் வங்கி வட வலய பிராந்திய முகாமையாளர் க.சுஜீந்திரன், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆரம்ப பாடசாலை அதிபர் சி.சிவறதீஸ், அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை அதிபர் வீ.இந்திரலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வின் போது விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளுக்கு பரிசில் வழங்குதல், முதிர்ந்த கூட்டுறவாளாகள் கௌரவிப்பு என்பன இடம்பெறும். (இ-5)

# தொழில்நுட்ப பீடம் திறப்பு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.சித்தங்கேணி வட்டு இந்துக் கல்லூரியில் இன்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படவிருந்த தொழில்நுட்ப பீடம் தவிர்க்க முடியாத காரணங்களால் நாளை சனிக்கிழமை திறந்து வைக்கப்படுமென அதிபர் நா.தனபாலசிங்கம் அறிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமையில் இந் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி.விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைசசின் செயலாளர் இ.ரவீந்திரன் கலந்துகொள்வதுடன் கௌரவ விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பணிப்பாளர் செ.சந்திரராசா கலந்து கொள்ளவுள்ளார். இதன்போது ஆச யுரையினை சித்தங்கேணி சிவன்தேவஸ்தான குருக்கள் பிரம்மஸ்ரீ சபா வாசுதேவக் குருக்கள் நிகழ்த்தவுள்ள்துடன் வரவேற்புரையினை பழைய மாணவர் சங்கத் தலைவர் பா.சுதா கரன் நிகழ்த்தவுள்ளார். (இ-5)

## மாணவர்கள் கௌரவிப்பு

உடுவில் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 150 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 108 மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நாளை மறுதினம் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சுன்னாகம், கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் ந.தயாரூபன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு, லயன்ஸ் கழக பிராந்திய இணைப்பாளரும் நீர்கொழும்பு கோல்டன் ஸ்ரார் பீச் ஹோட்டல் நிர்வாக இயக்குநருமாகிய லயன் தேவா பீற்றர் மற்றும் லயன் சீமாட்டி ஜசிந்தா தம்பதியினர் பிரதம விருந்தினர்களாகவும், சிறப்பு விருந்தினர்களாக லயன்ஸ் கழக மாவட்டத் தலைவர் லயன் த.இரவீந்திரனும் உடுவில் கல்விக் கோட்ட, கோட்டக் கல்வி அலுவலர் சு.சண்முககுலகுமாரும் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

# அகக்கண்கள் தந்த ஆனந்த வெற்றிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம் பார்வையற்றவர்களுக்கு சேவையாற்றும் நிறுவனங்களை ஒருங்கிணைத்து நடத்தும் அககண்கள் தந்த ஆனந்த வெற்றிகள் அரங்கேற்றும் இலவச அனுமதியுடனான கலை விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக உலகத் தமிழர்களின் அன்புக்குரிய மூத்த அறிவிப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக சக்தி எப்.எம்.வானொலிப் பணிப்பாளர் பா.காண்டீபன் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினராக ஓய்வு நிலை இசை ஆசிரியர் பொன். சிறீ வாமதேவன் கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது வரவேற்புரையினை யாழ்.பல்கலைக் கழக மாணவி த.மரியதுஸ்யந்தி நிகழ்த்தவுள்ளதுடன், வாழ்த்துரையினை ஓய்வு நிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர். கலாபூஷணம் திருமதி. கோகிலா மகேந்திரன் நிகழ்த்தவுள்ளார்.

தொடர்ந்து தலைமையுரையினை யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் சட்டத்தரணி ஏ.எஸ் அற்புதராஜ் நிகழ்த்தவுள்ளார்.

கலைநிகழ்வுகளாக நவீல்ட பாடசாலை வழங்கும் தனி நடனம் மற்றும் குழுப்பாடல் யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம் நடத்தும் நாட்டார் பாடல் மற்றும் வில்லிசை, வன்னி விழிப்புலனற்றோர் சங்கம் நடத்தும் தனி நடனம், மற்றும் "வாழ்வின் வழிகாட்டி" எனும் தாளலயம் கருவி நிறுவனம் வழங்கும் "காலமழை" எனும் கவியரங்கம் என்பனவும் இடம்பெறும். (இ-5)

## வீணாகான குருபீடத்தின் ஏற்பாட்டில் காவடியும் ஆசீர்வாத நிகழ்வும்

முன்பள்ளி சிறார்களின் நலன்வேண்டி வீணாகான குருபீடத்தின் ஏற்பாட்டில் காவடியும் ஆசீர்வாத நிகழ்வும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வு சித்தன்கேணி சிவாலயத்தில் இருந்து பண்ணாகம் முருகமூர்த்தி ஆலயம் வரை சென்றடையவுள்ளது.

சந்நிதச்சாரியார் சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விரல் யாழ். இந்தியத் துணைத்தூதர் ஆ.நடராஜன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினராக யாழ்.இந்திய பிரதித் துணைத்தூதுவர் ஸ்ரீ.சு.தட்சணாமூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார். இந்நிகழ்வில் குழந்தைகளுக்கு ஆசீர்வாதமும் முருகன திருவருட்பிரசாதகாப்பு நூல்அணுவித்தலும் இடம்பெறும்.(இ-5)

# சாவகச்சேரி சந்தைக்கட்டட தொகுதியை உத்தியோகபூர்வமாகக் கையளியுங்கள்

(சாவகச்சேரி)


சாவகச்சேரி பொதுச்சந்தையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சந்தைக் கட்டடத்தை உத்தியோக பூர்வமாக கையளிககுமாறுமரக்கறி வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். சந்தைக் கட்டடத் தொகுதியானது நாடு நகர அபிவிருத்தி சபையால் சுமார் 6 கோடி செலவில் அண்மையில் அமைககப்பட்டது.

இச் சந்தைக்கட்டடத் தொகுதியை வியாபாரிகளிடம் இவ்வாண்டு தை மாதம் அளவில் கையளிக்கபபடும் எனத் தெரிவிக்கபபட்டது. ஆனால் இது வரைக்கும் குறித்த சந்தைத் தொகுதி வியாபாரிகளிடம் கையளிக் கப்படவில்லை. இதனால் வியாபாரிகள் அக் கட்டடத் தொகுதியில் தற்காலிகமாக வியாபாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் கட்டடத்தின் சாய்வு பொருத்தமாக அமைக்கபபடவில்லை.இச் சந்தைத் தொகுதியின் பிரச்சினைகளை கருத் திற் கொண்ட சில மரக்கறி வியாபாரிகள் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் விளை யாட்டு மைதானத்தில் தமது வியா பாரங்களை தற்காலிகமாக மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் மழைக்காலங்களில் மைதானத்தில் வியாபாரங்களை மேற்கொள்ள முடியாத நிலையும் ஏற்பட்டு ள்ளது.

இதனால் சாவகச்சேரி பொதுச்சந்தையில் அமைக்கப்பட்ட புதிய சந்தைக்கட்டடத் தொகுதி விரைவில் வியாபாரிகளிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தால் இது போன்ற பிரச்சினைக்கு வியாபாரிகள் முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படாது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுத்து குறித்த சந்தைத் தொகுதியின் கட்டடத்தை உத்தியோகபூர்வமாக கையளிக்குமாறு வியாபாரிகள் கேட்டுள்ளனர். (இ-5-29)



கொழும்பு சுகவாழ்க்கைப் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஆரோக்கிய வாழ்வு என்கின்ற கட்டுரைப் போட்டியில் பங்கு பற்றி வெற்றியீட்டிய வட மாகாண மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தி ல் இடம்பெற்றது. இதன்போது கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் வி.ஞானகாந்தன் தலைமையுரை நிகழ்த்துவதையும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை பிரதம விருந்தினரிடமிருந்து ஒப்புரவாளர் விருதினைப் பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர் பட்டப்படிப்புகள் பீடம்

### புதிய அனுமதிகள்

1.கல்வியியல் முதுமாணி–2016/17, (அணி XII) யாழ்ப்பாணம்

2. தமிழில் முதுகலைமாணி– 2016/17 (அணி VI)

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

### கல்வியியல் முதுமாணி (Master of Education)

**அனுமதிக்குரிய தகைமைகள்**

★ "அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமும் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவும்"

அத்துடன்

ஒரு பாடசாலையில் அல்லது யாதேனும் கல்வி நிறுவனத்தில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் கற்பித்தல் அனுபவம் அல்லது மேற்படி கற்கைநெறிக்குப் பொருத்தமான கல்விசார் பணிகளில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் அனுபவம்.

**தெரிவு முறைமை**

★ எழுத்துத் தேர்வும் நேர்முகத் தேர்வும்

(எழுத்துத் தேர்வு கல்விசார் பொதுத் தகைமையை பரீட்சிப்பதாக அமையும்)

கற்கைக் காலம் : ஒரு வருடம்

மொழி மூலம் : தமிழ்

கற்கை நெறிக் கட்டணம் : 100,000/=

விண்ணப்பப் படிவக் கண்டம் : 1,000 /=

### தமிழில் முதுகலைமாணி (Master of Arts in Tamil)

**அனுமதிக்குரிய தகைமைகள்**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் ஏதாவது ஒரு கற்கை நெறியில் பட்டம்

குறிப்பு :- பல்கலைக்கழக மூதவையால் ஏற்கப்படக்கூடிய வேறு தகைமைகளும் அனுபவமும் பரிசீலிக்கப்படலாம்.

**தெரிவு முறைமை**

★ நேர்முகத் தேர்வு

கற்கை நெறிக் காலம்: ஒரு வருடம்

மொழி மூலம்: தமிழ்

கற்கைநெறிக் கட்டணம்: 85,000/=

விண்ணப்பப் படிவக் கட்டணம்: 1,000/=

**விண்ணப்பப் படிவம் பெறும் முறை**

1) மக்கள் வங்கியின் ஏதாவதொரு கிளையில் 162-1-001-8-0000902 எனும் கணக்கு இலக்கத்திற்கு விண்ணப்பத்திற்கான ரூபா 1000/- கட்டணத்தை செலுத்திய பற்றுச்சீட்டை உயர் பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

2) தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு விண்ணப்ப படிவத்திற்குரிய பெறுமதியான காசுக்கட்டளையுடன் 15/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரியிடப்பட்ட 23X10 செ.மீ.அளவுள்ள கடித உறையையும் இணைத்து உதவிப்பதிவாளர் உயர் பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

3) விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்கள் www.jfn.ac.lk/grad எனும் பல்கலைக்கழக வலைத்தள வசதியூடாகவும் (website) பெற்றுக்கொள்ளலாம். வலைத்தள மூலமாக தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அனுப்புபவர்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு ரூபா 1000/- பெறுமதியான காசுக்கட்டளையை அல்லது மக்கள் வங்கியில் மேற்குறிப்பிடப்பட்ட கணக்கிலக்கத்திற்கு செலுத்திய பற்றுச்சீட்டை இணைத்தல் வேண்டும்.

**விண்ணப்பப் படிவத்தினை சமர்ப்பித்தல்**

விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கற்கை நெறியின் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் 14.12.2015 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு உதவிப்பதிவாளர், உயர் பட்டப்படிப்புகள் பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

உரிய விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்கள், சரியாக பூரணப்படுத்தாத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்
12.11.2015

(சி–2700)


## ஸ்ரீ கல்கி பகவான் சரணம் சரணம்



"ஓம் சச்சிதானந்த பரப்பிரம்ம புருஷோத்தம பரமாத்மா, ஸ்ரீ பகவதி சமேத ஸ்ரீ பகவதே நமஹ"

ஸ்ரீ கல்கி விஸ்வ வித்தியாலயத்தின் ஏற்றம் மிகு சிருஷ்டி கர்த்தாக்களாகத் திகழும் ஸ்ரீ கல்கி பகவதி பகவான் கனிவோடு அருளிடும்

### வர யக்ஞம்

மனிதர்களாகிய நாம் காமதேனுவாய், கற்பக விருட்சமாய், அக்ஷய பாத்திரமாய் வாழ வாழ்விற்கான சகல சௌபாக்கியங்களையும் **வரங்க**ளாக பெற்றிடவும்

உலக வாழ்க்கையில் தவறுகள் செய்யாமல் நியாயமாக, அமைதியாக, ஆனந்தமாக, வாழவும் வழிகாட்டும்.

**ஐஸ்வர்யம் பிராப்தி, ஆரோக்கியப் பிராப்தி, குடும்ப ஷேமம், கர்ம விமோசனம், ஆத்ம ஞானம், தெய்வீக அனுபவம், நவவித முக்தி**

சம்பந்தமான யக்ஞம் பயிற்சியும் பெற்றுய்யும் வண்ணம் தங்களை பணிவன்புடன் வருகவென்று அழைக்கின்றோம்.

இடம்:- இளம் கலைஞர் மன்ற கலா மண்டபம், சட்ட நாதர் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

காலம்:- 14.11.2015, 15.11.2015 (இரு நாட்கள்)

நேரம்:- காலை 8.30 மணி முதல் மாலை 6 மணி வரை

தொடர்பாடல்:- ஸ்ரீ கல்கி மாணவ சேவா சமித்தி
நாயன்மார்கட்டு
தொலைபேசி:- 077 615 3842, 077 377 1592

(சி–2698)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 23.5<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:AAT, கணக்காளர்<br>தொ.இ: B/1404 | பிறப்பு: 1983 RC<br>நட்சத்திரம்: திருவாதிரை 4<br>கி.பா: 19 சூரி, செவ். 12 இல்<br>உயரம்: 153 cm<br>தகைமை/தொழில்: கொலன்ட் PR<br>தொ.இ: G/3036 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 18 செவ் 2இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:IT Bcs தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் முக்கியம்<br>தொ.இ: B/1415 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்:உத்தரம் 3<br>கி.பா: 19 செவ் 4ல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:B.Sc<br>தொ.இ: G/3038 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 2<br>கி.பா: 67 7ல் செவ்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில் : A/L வங்கி உதவியாளர்<br>தொ.இ: B/1450 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 2<br>கி.பா:19.5<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் : BA,MA அரச தொழில்<br>தொ.இ: G/3048 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 1<br>கி.பா: 44 செவ். 7 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:Bsc, அபிவிருத்தி உதவியாளர்(அரச)<br>தொ.இ: B/1487 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி1<br>கி.பா: 28<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:BA அரச தொழில்<br>தொ.இ: G/3051 |

## கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## ராசி பலன்

13.11.2015
(ஐப்பசி 26, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
துதியை பின்னிரவு 1.36 மணிவரை
அனுசம் பிற்பகல் 5.47 மணிவரை
இராகுகாலம் 10.37-12.07 மணிவரை
சுபநேரம் 6.07-7.37 மணிவரை

வளவன்

**மேடம்** – கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், மற்றவர்களுக்காக பொறுப்புச் சொல்வதைத் தவிர்ப்பது நல்லது, உடல்நலனில் கவனம் தேவை.

**இடபம்** – நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும், செய்தொழில் மேன்மையுண்டு.

**மிதுனம்** – உற்சாகமாகப் பணிபுரியும் நாள், வியாபார விருத்தியுண்டு, கடன்களை கொடுக்கும் சிந்தனை மேலோங்கும், அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்** – தொழிலில் புதிய முதலீடுகளைச் செய்யும் எண்ணம் மேலோங்கும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிம்மம்** – சுப தகவல்கள் வந்து சேரலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கன்னி** – உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், தொழிலில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், வழிபாடு முன்னேற்றம் தரும், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** – பொதுவாழ்வில் புகழ்கூடும் நாள், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும் நாள்.

**விருச்சிகம்** – மனதில் இனம்புரியாத கற்பனைகள் தோன்றும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், உறவினர் பகை அகலும், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**தனுசு** – கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

**மகரம்** – வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**கும்பம்** – அன்பு நண்பர்கள் ஆதரவுதர முன்வருவர், என்றோ நடக்கலாம் என நினைத்த காரியமொன்று நல்லவிதமாக நடைபெறலாம், ஆரோக்கியமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மீனம்** – திறமை மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சொத்து தகராறுகள் நல்ல முடிவுக்கு வரும், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அச்சுவினி, பரணி | | |
| | | | குரு |
| | சனி, சந்<br>புத | சூரி | ராகு<br>செவ்<br>சுக் |

## கேப்பாப்பிலவு மாதிரிக்கிராமம் கேப்பாப்புலவு கிராமமாக மாற்றம்

### வன்மையாக கண்டிக்கிறார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன்

முல்லை. கேப்பாப்பிலவு மக்கள் தமது சொந்தக்காணிகளில் குடியேறும் நாளை எதிர்பார்த்து ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

அந்த ஏக்கத்தையும் அவர்களின் கனவு களையும் நிர்மூலமாக்கும் வகையில் கேப்பாப்பிலவு மாதிரிக்கிராமம் கேப்பாப் புலவு கிராமமாக மாற்றம் செய்யப்பட்ட பெயர்ப்பலகையை நாட்டியிருப்பதை வன்மை யாக கண்டிப்பதாக வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக் கையில்,

ஜெனிவாவில் இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட ஐ.நா தீர்மானத்தில் மக்களை அவர்களின் பூர்வீக நிலங்களிலேயே மீளக்குடியேற்ற வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்தப்பரிந்துரைகள் எல்லாவற்றையும் குலைக்கும் வகையில் கேப்பாப்பிலவு மக்களை முதலில் மாதிரிக்கிராமம் என்ற பெயரில் வேறொரு இடத்தில் தங்கவைத்து பின்னர் தற்போது அவ்விடத்தையே கேப்பாப்புலவு கிராம மாக அடையாளப்படுத்துவது ஏற்புடையதல்ல.

முல்லை. கோப்பாப்பிலவு மக்கள் தங்களு டைய சொந்தக் காணிகளில் குடியேறும் நாளை எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருக்கின்றார்கள். தமது காணிகளில் குடியேறும் வரை தற்காலிக மாகவே கோப்பாப்பிலவு மாதிரிக்கிராமத்தில் வாழ்ந்துவருகிறார்கள். அவர்கள் தற்போது வாழ்ந்துவரும் இடம் அவர்களது பூர்விக இடமாகிய கேப்பாப்பிலவு அல்ல.

எமது மக்களை தங்களின் சொந்த நில ங்களில் குடியேற்ற வேண்டும். அவர் களின் நிலங்கள் அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். இதை விடுத்து வேற்றினக் குடியேற றங்களையும் இராணுவத்தளங்களையும் கட்டமைத்து மக்களை வெவ்வேறு இடங் களில் மாற்றும் வேலைகள் நிறுத்தப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான மக்களின் முறைப் பாடுகள் அனைத்தும் வடக்கு மாகாண முதலமைச்சரிடம் விரைவில் கொண்டு செல்லப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித தார். (2)

### கேப்பாப்புலவு கிராமத்தில்

## நிர்மாணிக்கப்பட்ட 39வீடுகள் பயனாளிகளிடம் கையளிப்பு




(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் ஊடாக மீள் குடியேற்ற அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின்மூலம் இராணுவத்தினரால் கேப்பாப்புலவு கிராமத்தில நிர்மாணி க்கப்பட்ட 39 வீடுகள் நேற்று முன்தினம் அதன் பயனாளிகளிற்கு உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மோகன்ராஸ, சிறப்பு விருந்தினர்களாக முல்லைத்தீவு மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியுடன் கேப்பாபிலவு பிரிவுத் தளபதியும் கலந்து கொண்டனர். இதனையொட்டி இதுவரை நாட்களும் கேப்பாபிலவு மாதிரிக் கிராமம் என பெயர் பொறிக்கப்பட்டிருந்த கல்லில் தற்போது கேப்பாப்புலவு என இராணுவத்தினரால் பெயர் மாற்றப்பட்டுள்ளது. உண்மையில் இந்த மாதிரிக் கிராமம் அமைந்துள்ள கிராமம் சீனியா மோட்டை என்னும் பெயரை யுடைய கிராமமாகும். இதனால் தமது சொந்தக் கிராமமான கேப்பாபிலவுக் கிராமம் விடுவிக்கப்படாதா என கேப்பாபிலவு மக்கள் அச்சம் கொண்டுள்ளனர். (2-302)

## பாடசாலை இலவச சீருடைக்கு பதிலாக கூப்பன் வழங்கத்திட்டம்

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப் படுகின்ற சீருடைக்கு பதிலாக 2016ஆம் ஆண்டு முதல் கூப்பன் வழங்குவதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக கல்வி அமைச்சின் செயலாளர் டபிள்யூ.பி. எம். பந்துசேன தெரிவித்துள்ளார்.

எனினும் அவற்றை எவ்வாறு வழங்கு வது என்பது தொடர்பான மேலதிக செயற்பாடுகள பற்றி இறுதி முடிவு எட்டப்படவில்லை என்று அவர் தெரிவித்தார்.

கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரிய வசமின் ஆலோசனைக்கமைய இந்த புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனூடாக தரமான துணி வகைகளை கொள்வனவு செய்து அதனை தைத்து கொள்ள முடியுமான வகையில் இந்த கூப்பன் வழங்க ப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை வழங்கப்படுகின்ற சீருடை துணிகளின் தரத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினை காரணமாகவே இந்த திட்டம் நடைமுறை ப்படுத்தப்பட உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (2-7-10)

## சிரியாவில் 200 சிறுவர்களை சுட்டுக்கொலை செய்த ஐ.எஸ்.

(டமாஸ்கஸ்)

200 சிறுவர்களை ஐ.எஸ் தீவிரவாதிகள் சுட்டுக்கொலை செய்யும் காட்சி இணையத்தள ங்களில் வெளியாகி மக்கள் மத்தியில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

ஐ.எஸ் தீவிரவாதிகள் அப்பாவி மக்களை கொலை செய்வதும் அதனை வீடியோ எடுத்து இணையத்தளங்களில் வெளியிடுவதையும் வாடிக்கையாக கொண்டுள்ளனர்.

இந்த கொடூர காட்சிகளை பார்த்து ரஷ்யா மற்றும் அமெரிக்கா தலைமையிலான கூட் டுப்படைகள் ஐ.எஸ்.தீவிரவாதிகள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், ஏமனைச் சேர்ந்த ஆர்வலர் ஒருவர் வீடியோ ஒன்றை இணையத்தளததில் வெளியிட்டுள்ளார்.

சிரியாவைச் சேர்ந்த 200 சிறுவர்களை தரையில் வரிசையாக குப்புற படுக்க வைத்து ஐ.எஸ் தீவிரவாதிகள் துப்பாக்கியால் மிருகத் தனமாக சுட்டுக்கொலை செய்யும் காட்சி வீடியோவில் காணப்படுகிறது.

அந்த வீடியோ 2014ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் சிரியாவில் உள்ள தக்பா விமானப் படை தளம் அருகே எடுக்கப்பட்டது என்று கூறப்படு கிறது.

தீவிரவாதிகள் கடந்த 2011ம் ஆண்டு மார்ச மாதம் முதல் இதுவரை 2 லட்சத்து 50 ஆயிரத திற்கும் மேற்பட்டோரை கொலை செய்துள்ள னர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (3-7)

## நாய்க்கடிக்கு இலக்கான ஐந்து பேருக்கு சிகிச்சை

### நாயையும் குட்டிகளையும் அகற்றுமாறு வேண்டுகோள்

(கிளிநொச்சி-1)

கிளிநொச்சி பழைய மாவட்ட செயலக த்திற்கு அருகாமையில் நாய்க்குட்டிகளை ஈன்ற நாயொன்று கடந்த இரண்டு நாட்களாக வழியாக பயணிக்கும் பொதுமக்கள், மாணவர்கள், ஆகியோரை விரட்டுவதுடன் கடித்தும் உள்ளது.

இந்த இரண்டு நாட்களிலும் 5 இற்கு மேற் பட்டோர் இந் நாயினால் கடியுண்டு கிளிநொ ச்சி பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற் றுள்ளதாக வைத்தியசாலை வட்டாரத் தகவல் தெரிவிக்கின்றது.

எனவே மேற்படி இடத்தில் காணப்படும் நாய் குட்டிகளையும் நாயையும் அகற்றுமாறு சம்பந்த ப்பட்டவர்களுக்கு பொது மக்கள், மாணவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-277)

## கடையில் தீக்காயங்களுக்குள்ளான 2 இளைஞர்கள் வைத்தியசாலையில்

(கரணவாய்)

மோட்டார் சைக்கிள் திருத்தும் கடை ஒன்றில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தில் இரு இளைஞர்கள் காயமடைந்துள்ளதோடு 6மோட்டார் சைக்கிள் களின் உதிரிப்பாகங்கள் எரிந்து சேதமடைந் ததுடன் ஒரு மோட்டார் சைக்கிள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. இச்சம்பவம் வடமராட்சி உடுப்பிட்டி வதிரி வீதியில் இடம்பெற்றுள்ளது. கடையின் உள்ளே ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த மூன்று இளைஞர்களில் இரு இளைஞர் களே தீக்காயங்களுக்குள்ளாகியுள்ளனர். இதில் கல்லடி கல்முனையைச் சேர்ந்த சி.நிசாந் தன் (வயது-22),மல்லந்தறை உடுப்பிட்டியைச் சேர்ந்த வி.சுயேந்திரன் (வயது-21) ஆகிய இரு இளைஞர்களே இவ்வாறு படுகாயமடைந் துள்ளனர்.

உடுப்பிட்டி கிழக்கினைச் சேர்ந்த இ.ஜெக னேஸ்வரன் என்பவருக்கு சொந்தமான கடை ஒன்றே இவ்வாறு தீப்பிடித்துள்ளது.

சம்பவ இடத்திற்கு சென்ற வல்வெட்டித் துறைப் பொலிஸார் இது தொடர்பான விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

படுகாயங்களுக்குட்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இருவரில் சி.நிசாந்தன் என்பவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலை க்கு அனுப்பப்பட்டுள்ளார் எனத் தெரியவந்து ள்ளது. (இ-5-60)

## அனைத்து கடைகளையும் பூட்டி ஒத்துழைப்பு வழங்குக

### கிளி.வர்த்தக சங்கம் அறிவிப்பு

(கிளிநொச்சி-1)

எதுவித விசாரணைகளும் இன்றி நீண்ட காலமாக சிறையில் வாடும் அரசியல் கைதி களின் நிபந்தனையற்ற விடுதலையை வலியு றுத்தி இன்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்க ப்படவுள்ள பூரண ஹர்த்தால் கிளிநொச்சி நகரி லும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க ப்பட்டுள்ளதாக கிளிநொச்சி வர்த்தக சங்கத்தின் தலைவர்,செயலாளர் அறிவித்துள்ளனர்.

இந்த ஹர்த்தாலின் போது மருத்துவ சேவைகள்,உணவகங்கள் ஆகியவை தவிர்ந்த ஏனைய அனைத்து கடைகளையும் பூட்டியும் பொதுமக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாத வாறும் எதுவித குழப்பங்கள் இன்றியும் ஹர்த் தாலை அனுஷ்டிக்குமாறு அவர்கள் கேட்டுள் ளனர். (2-277)



யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் ஆரம்பப் பிள்ளை பருவ பராமரிப்பு மற்றும் விருத்தி தொடர்பிலான செயற்றிட்டத்தின் அறிவுப் பரிமாற்றமும் படிப்பினைகளின் மீள் பார்வையும் எனும் கருத்தமர்வு நேற்றைய தினம் நாவலர் வீதியில் அமைந்துள்ள ரி.சி.ரி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்புக்கான சுவிஸ் நிறுவனம் மற்றும் ரெறேடெல் கோமெஸ் பவுண்டேசன் போஸ்கோ (Tdh) ஆகிய நிறுவனங்களின் நிதியுதவியுடன் இரண்டு வருடங்கள் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டத்தின் ஆய்வுகள் பற்றிய அறிக்கையினையும் வெளியிட்டிருந்தனர். இந்த நிகழ்வில் கல்வி மற்றும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், பாலர் பாடசாலை ஆசிரியர்கள், ஆய்வுகளை மேற்கொண்ட நிறுவனங்களின் அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (2-9)

# அரசியல் கைதிகளின் விடுதலைக்கு பொதுமன்னிப்புத்தான் தீர்க்கமான முடிபு

## கைதிகள் விடயத்தில் ஈ.பி.டி.பி. உறுதி யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தி இன்று நடைபெறவுள்ள கடையடைப்பு போராட்டம் வலிமைபெற்று கைதிகள் அனைவரும் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்கப்பட நடைபெறும் போராட்டத்திற்கு ஈழமக்கள் ஜனநாயக கட்சி தனது பூரண ஆதரவை வழங்கவுள்ளது.

ஜனநாயக வழியில் நாம் எமது இலக்கைத் தெளிவான முறையில் அடைய முடியும் என ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளர் வே.குகேந்திரன் விடுத்துள்ள ஊடகச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

விசாரணைகள் என்ற போர்வையில் நீண்டகாலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் எதுவித நிபந்தனைகளும் இன்றி பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்வதே அரசியல் கைதிகளின் பிரச்சினைக்கான நிரந்தர தீர்வாக அமையும். மாறாக அரசியல் நகர்வுகளுக்காக தமிழ் அரசியல் கைதிகளை பகடைக்காயாக்கும் செயற்பாடுகளை நீண்டகாலமாக செய்துவரும் தரப்பினர் தமது சுயநலங்களை கைவிட்டு யதார்த்தபூர்வமான செயற்பாடுகளை செய்வதற்கு அனைத்து தரப்பினருடனும் இணைந்து வெளிப்படையான செயற்பாடுகளை செய்வதற்கு முன்வரவேண்டும்.

மேலும் இன ஒற்றுமையை உருவாக்கிக்கொள்ள அரசு முயற்சிப்பதாயின் கடந்த காலத்தில் போராடிய தமிழ் போராட்ட அமைப்புகளுக்கும் 1971, 1989 காலப்பகுதியில் ஜே.வி.பியினர் செய்த கிளர்ச்சியின் பின்னர் கைதுசெய்யப்பட்ட ஜே.வி.பியினருக்கு 1990 இல் வழங்கப்பட்ட பொது மன்னிப்பு போன்றும் தற்போது இராணுவ தளபதி சரத் பொன்சேகா மற்றும் சிலருக்கும் வழங்கப்பட்டது போல தமிழ் அரசியல் கைதிகள் விடயத்திலும் பொது மன்னிப்பு வழங்கி அவர்களது வாழ்விலும் புதிய மாற்றத்தை கொண்டுவர வேண்டும் என்பதே எமது வேண்டுதலாக உள்ளது

இன்று நடைபெறவுள்ள கடையடைப்பு போராட்டம் மக்களுக்கு தேவையான மிக அத்தியாவசிய சேவைகள் பாதிக்கப்படாத வகையில் நடைபெறவேண்டும் என்பதே முக்கியமான விடயமாகும். இந்த போராட்டத்திற்கு ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் பொறுப்பாளர்கள், கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள்,நலன் விரும்பிகள் என அனைவரும் பூரண ஒத்துழைப்பை வழங்கவுள்ளனர்.

நாங்களும் ஒரு அரசியற் போராளிகள் என்ற ரீதியில் தமிழ் அரசியற் போராளிகளது விடுதலையில் பொது மன்னிப்புத்தான் தீர்க்கமான முடிவு என்பதில் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா இறுக்கமான நிலைப்பாட்டையே கொண்டுள்ளார். தமிழ் மக்களது இந்த போராட்டம் இதற்கான முடிவை தரும் என்று நாம் நம்புகின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# அரசியல் கைதிகளின் விடுதலைக்கு அனைவரும் ஆதரவு வழங்கவேண்டும்

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

தமது விடுதலையை வலியுறுத்தி சிறையில் பட்டினிப்போரை ஆரம்பித்திருக்கும் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு ஆதரவாக இன்று வெள்ளிக்கிழமை மேற் கொள்ளப்பட இருக்கும் பூரண ஹர்த்தாலுக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் தனது பூரண ஆதரவைத் தெரிவிப்பதாக யாழ். மாவட்ட இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசியல்கைதிகள் ஏற்கனவே உண்ணாவிரதம் இருந்தபோது - ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் வழங்கப்பட்ட உறுதிமொழி நிறைவேற்றப்படாத நிலையில் - மீண்டும் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பட்டினிப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குவது எமது தார்மீகக் கடமையாகும். இந்த வகையில் - அரசியல் கைதிகளின் உயிருக்குப் பாதிப்பு எதுவும் ஏற்படாத வகையில் அவர்களுக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம்.

இத்தகைய சூழ்நிலையில் - அரசியல் கைதிகளின் விடுதலையை எவரும் வெறும் அரசியலோடு நோக்காமல் - கட்சிபேதங்களைக் கடந்து அனைத்து தரப்பினரும் தார்மீக ஆதரவு வழங்கவேண்டும் .

இந்தவகையில் - கல்விச்சமூகம் பொறுப்புடன் செயற்பட்டு அரசியல் கைதிகளின் விடுதலைக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் செயற்பட அழைப்பு விடுக்கின்றோம். எனவே பாடசாலையின் அதிபர்கள், ஆசிரியர்கள் இன்றைய தினம் விடுமுறையை அறிவித்தும், மாணவர்கள் பாடசாலைக்குச் சமுகமளிக்காமல் வீடுகளில் பாதுகாப்பாக இருக்கும் வண்ணமும் கேட்டுக்கொள் கின்றோம்.

அத்துடன் - அன்றைய தினம் எவ்வித மான வன்முறைக்கும் இடம் கொடாமல் மக்கள் அவதானமாக செயற்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# வெளிநாட்டு நாணயத்தாள்களுடன் இருவர் விமான நிலையத்தில் கைது

சட்டவிரோதமாக வெளிநாட்டு நாணயத்தாள்களை நாட்டில் இருந்து கடத்திச் செல்ல முற்பட்ட இருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரும் தமது இடுப்புப்பட்டியில் மறைத்து வைத்து வெளிநாட்டு நாணயத்தாள்களை கடத்த முற்பட்டதாக விமான நிலைய சுங்கப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

இவர்களிடம் இருந்து 229,500 அமெரிக்க டொலர்களும், 50,000 யூரோக்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இலங்கை ரூபாய்படி இவற்றின் பெறுமதி 4 கோடியே 7 இலட்சத்து 52,736 ரூபாய் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பைச் சேர்ந்த 30 வயது மற்றும் 45 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர்களிடம் சுங்கப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (2)



கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் யாழ்.மாவட்டத்திலுள்ள மகளிர் அபிவிருத்தி நிலையங்களின் மாவட்ட கண்காட்சி அண்மையில் வலிகாமம் மேற்கு கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் நாடாவெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதையும் பிரதம விருந்தினர் உட்பட ஏனைய விருந்தினர்கள் கண்காட்சியை பார்வையிடுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களின் ஒரு பகுதியையும் படங்களில் காணலாம்.

# பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி கைதிகளை உடன் விடுதலை செய்க

## அனைத்து வர்த்தகர்களையும் ஒத்துழைப்பு வழங்குமாறு வலி.தெற்கு வர்த்தக சம்மேளனத் தலைவர் கோரிக்கை

சிறைகளில் தகுந்த காரணங்கள் இன்றி தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் உடன் விடுவிக்கப்படவேண்டும். அவர்களின் விடுதலைக்காக அரசியல், கட்சி பேதமின்றி அனைவரும் ஒருமித்து குரல் கொடுக்கவேண்டும். இன்று நடைபெறும் கடையடைப்பில் அனைத்து வர்த்தகர்களும் தமது கடைகளை மூடி அவர்களின் விடுதலையை வலியுறுத்தவேண்டும் என வலி.தெற்கு வர்த்தக சம்மேளனத் தலைவர் லயன் சி.ஹரிகரன் தெரிவித்துள்ளார்.

கைதிகளின் விடுதலை தொடர்பாக அவரால் விடுக்கப்பட்ட செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

அரசியல் கைதிகள் தமது விடுதலை தொடர்பாக மேற்கொண்டு வரும் போராட்டத்தை தற்போது அமைந்திருக்கும் தேசிய அரசும் கண்டும் காணாதிருப்பது மிகவும் வேதனைப்படவேண்டிய விடயமாகும்.

மகிந்தவின் கொடுங்கோல் ஆட்சியில் புலித் தலைவர்களாக இருந்து துரோகிகளாக மாறியவர்களைத் தம்முடன் கூடவே தமது கூலிப்படைகளாக்கி, அப்பாவிப் பொது மக்களை எந்தவித தகுந்த காரணங்களுமின்றி உரியவாறு அவர்களுக்கு வழக்குத் தாக்கல்செய்து சட்டத்தின்முன் நிறுத்தாது அரசியல் கைதிகள் என்ற போர்வையில் பல வருடங்களாக சிறைக்ளில் தடுத்து வைத்திருந்தார்கள்.

நல்லாட்சி என்று பெருமிதம் பேசுகின்ற தற்போதைய புதிய அரசு உடனடியாக அவர்களின் விடுதலை தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். தவறின், தமிழ்மக்களால் தேர்வுசெய்யப்பட்ட இந்த அரசையும் எமது மக்கள் தூக்கி எறிய என்றைக்கும் பின்னிற்கமாட்டார்கள்.

அமைந்திருக்கும் புதிய அரசைத் தமிழ் மக்கள் ஒன்றும் விரும்பித் தெரிவுசெய்யவில்லை. நாட்டில் ஓர் ஆட்சிமாற்றம் நிகழவேண்டும். எமது மக்களைக் கொன்றொழித்த அரக்கர்கள் நீதியின்முன் நிறுத்தப்பட்டு தண்டனை அனுபவிக்கப்பட்வேண்டும் என்பதற்காக தமிழ் மக்களால் புதிய அரசுக்கு வழங்கப்பட்ட ஆணையின் காரணமாகவே மைத்திரி - ரணில் தலைமையிலான புதிய அரசு ஆட்சிப்பீடமேறியது.

அவர்கள் ஆட்சிப்பீடமேறுகின்றபோது, தமிழ் மக்களின் நிலங்கள் விடுவிக்கப்படவேண்டும், அரசியல் கைதிகள் நிபந்தனையின்றி விடுவிக்கப்படவேண்டும், தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்கின்ற ஏதுநிலை ஏற்படுத்தப்படவேண்டும் என்று எண்ணியே தமிழ் மக்கள் இந்த அரசைத் தெரிந்தெடுத்தார்கள்.

இன்றைக்கு விடுதலைப் புலிகளின் தளபதிகளாகச் செயற்பட்ட கருணா, கே.பி போன்ற பிரபலங்கள் அரச அடிவருடிகளாக மாறி சுகபோகங்களை அனுபவித்துவருகின்ற நிலையில், புலிகளுக்கு ஆதரவு அளித்தவர்கள் அரசியல் கைதிகள் என்ற போர்வையில் சிறைகளில் வாடி வருகின்றார்கள். உண்மையில் ஒட்டுமொத்த தமிழினமுமே விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானவர்கள்தான். அவ்வாறு பார்த்தால் எமது இனம் முழுவதையும் இவர்கள் சிறையில் போடவேண்டிய நிலைமைதான் ஏற்படும்.

2016 ஆம் ஆண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு, நல்லாட்சி என்றெல்லாம் சர்வதேச த்திடமும் ஜெனிவாவிலும் தன்னை வெளிப் படுததி, சர்வதேசத்திடமிருந்து தப்பித்த பேரினவாதம் அரசியல் கைதிகளின் விடுதலையில் பின்னிற்பது ஏன்? தமிழ் மக்களுக்கு நிரந்தரத் தீர்வை வழங்குவதன் நல்லெண்ணமாக, தமது நல்லாட்சிக்கான ஓர் எடுத்துக்காட்டாக யுத்தக் கைதிகளை விடுவித்து தமது சமிக்ஞையை அரசு வெளிப்படுத்தி, அரசியல் கைதிகளின் போராட்டத்துக்கு மதிப்பளித்து தமது நல்லாட்சியை வெளிப்படுத்த வேண்டும்

மாறாக, எமது மக்களை ஈவிரக்கமின்றிக் காவுகொண்டவர்களைக் காப்பாற்றி, யாதுமறியாத அப்பாவிகளை அரசியல் கைதிகள் என்ற போர்வையில் விடுதலை செய்யாது தடுத்துவைக்கும் விதத்தில் புதிய அரசு செயற்படுமானால் அதற்கும் அழிவுக்காலம் ஆரம்பித்துவிட்டது என்றே நாம் எண்ணுவோம்.

தமிழ்மக்களுக்கு பல்வேறு விதத்திலும் இடைஞ்சலாக இருந்த அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டமை போன்று ஐ.நாவின் பரிந்துரையில் குறிப்பிடப்பட்டவற்றை நடைமுறைப்படுத்தும் முகமாக அதன் முக்கிய சரத்தாகிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி, அந்தச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட கைதிகளையும் உடன் விடுவிக்கவேண்டும். இன்று அவர்களின் விடுதலைக்காக மேற்கொள்ளப்படும் கடை அடைப்புக்கு அனைவரும் தமது பூரண ஒத்துழைப்புக்களை வழங்கவேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2)

# சூதாட்டத்தை வரையறைகளுடன் அறிமுகம் செய்தால் தவறில்லை

## அமைச்சர் அருந்திக கூறுகிறார்

(கொழும்பு)

சுற்றுலாத்துறை வளர்ச்சியுடன் கசினோ சூதாட்டத்தை உரிய வரையறைகளுடன் நாட்டில் அறிமுகம் செய்வது தவறில்லை என பிரதி சுற்றுலா அமைச்சர் அருந்திக பெர்ணாந்து தெரிவித்தார்.


இலங்கையில் சுற்றுலா துறை வளர்ச்சி அடைந்து வருவதாக குறிப்பிட்ட அவர், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த 10 மாத காலத்தில் சுற்றுலா பயணிகளின் வருகை 17 வீதத்தினால் உயர்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக மாநாடில்கருத்துத் தெரி வித்த பிரதி அமைச்சர் இந்த வருடத்தில் இதுவரை 14 இலட்சத்து 48,119 சுற்றுலா பயணிகள் இங்கு வந்துள்ளனர்.

உலகில் உள்'ள சிறந்த கடற்கரையாக உணவட்டுன கடற்பகுதி அறிவிக் கப்பட்டுள்ளது. 8 நாட்களில் பெறக் கூடிய 8 அனுபவங்களை எமது நாட்டிலே பெற முடியும். சிறிய நாடான இங்கு அதற்கான வாய்ப்புகாணப்டுகின்றது.

சுற்றுலாத்துறை வளர்ச்சியுடன் கசினோ சூதாட்டத்திற்கு இடமளிக்க முடியும். மத தலங்கள் அற்ற வரை யறுக் கப்பட்ட பகுதியில் வெளிநாட்டவர்களுக்கு மாத்திரம் இதற்கு அனுமதியளிக்கலாம்.

இவை உரிய முறையிலே நாட்டிற்குள் கொண்டு வரப்பட வேண்டும்என்றுஅவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)



# மீள்குடியேற்ற சிக்கல்களுக்குத் தீர்வுகாண யோசனைகளை சமர்ப்பிக்குமாறு பணிப்பு

## அமைச்சர்கள்,அதிகாரிகளுக்கு ஜனாதிபதி விடுத்தார்

(கொழும்பு)

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில மீள்குடியேற்றம் தொடர்பில் எழுந்துள்ள நடைமுறைச் சிக்கல்களுக்கு முக்கிய கவனம் செலுத்தி தீர்வு யோசனைகளை முன்வைக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டுள்ளார்.**



மாவட்டச் செயலாளர்களின் அறிக்கைகளை மட்டும் அடிப்படையாகக் கொள்ளாமல் மாகாண ரீதியில் எழுந்துள்ள சிக்கல்கள் மற்றும் அதற்கான யோசனைகளை மீள்குடியேற்ற அமைச்சர் தலைமையில் இடம் பெறும் தேசிய குழுவில் முன்வைத்து கலந்துரையாடி தீர்வு யோசனைகளை தமக்குக் கையளிக்குமாறு ஜனாதிபதி கேட்டுக் கொண்டுள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் ஆராயும் சிறப்புக் கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மீள்குடியேற்றம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று முன்தினம் சிறப்புக் கலந்துரையாடலொன்று இடம் பெற்றுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், றிசாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம், ராஜித சேனாரத்ன, பாட்டலி சம்பிக்க ரணவக்க, லக்ஷ்மன் கிரியெல்ல, சஜித் பிரேமதாஸ, எம்.கே. டீஎஸ் குணவர்தன, இராஜாங்க அமைச்சர் ருவன் விஜயவர்தன, பிரதியமைச்சர் துனேஷ் கன்கந்த, கிழக்கு மாகாண முதலமைச்சர் நஷீர் அகமட், வடக்கு மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர்களான எச்.எம். ஜி.எஸ். பலிகக்கார, ஒஸ்டின் பெர்னாண்டோ ஆகியோரும் இந்த சிறப்புக் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர்.

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் மீள்குடியேற்றம் தொடர்பான மீளாய்வும் எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள செயற்பாடுகள் தொடர்பிலும் இங்கு விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மாகாண ஆளுநர்களின் தலைமையிலும் மற்றும் அந்தந்த மாகாண பிரதிநிதிகளைக் கொண்ட மீள்குடியேற்ற குழு எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் கூடி அந்தந்த மாகாணங்களில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வது அவசியம்.

அத்துடன் மாவட்டச் செயலாளர்களின் அறிக்கைகள் மட்டுமன்றி மாவட்ட மட்ட மற்றும் தேசிய மட்ட குழுவில் இது தொடர்பில் ஆராயப்பட்டு தீர்வு யோசனைகளைத் தமக்குக் கையளிக்குமாறும் இங்கு ஜனாதிபதி கேட்டுக் கொண்டுள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

இது ஒரு முக்கிய பிரச்சினை என்பதோடு மீள்குடியேற்ற நடவடிக்கைகளில் எழுந்துள்ள நடைமுறைச் சிக்கல்களை ஆராய்ந்து அவற்றுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கு இந்த சிறப்புக் கலந்துரையாடலின் நோக்கமாகும்.

இக்கலந்துரையாடலில் வட மாகாண அமைச்சர் கலாநிதி பி. சத்தியலிங்கம் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# ராஜிதவினால் ரணிலுக்கு வருத்தம்

அவன்கார்ட் நிறுவனம் தொடர்பில் ஜனாதிபதியினால் நேற்று முன்தினம் மாலை மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை மிகைப்படுத்தி, ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டமை தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மிகவும் வருத்தத்தில் உள்ளார் என அரசியல் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அவன்கார்ட் நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை கடற்படையினரால் மேற்கொள்ள முடியுமா? என அறிக்கை ஒன்றினை வழங்குமாறு கடற்படை தளபதிக்கு அறிவித்த ஜனாதிபதி,

குறித்த கூட்டம் தொடர்பில் ஊடகங்களுக்கு எவ்வித தகவல்களையும் வெளியிட வேண்டாம்என கலந்து கொண்டவர்களிடம் கேட்டு கொண்டுள்ளார்.

எனினும், அவன்கார்ட் நிறுவனத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையிலுள்ள அனைத்து உடன் படிக்கைகளையும்இரத்து செய்து அதனை கடற்படையின் கீழ் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தீர்மானித்துள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

அவன்கார்ட் நிறுவனத்தை தடை செய்வதற்கு தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம் பெற்ற குறித்த கலந்துரையாடலில் பொலிஸ்மா அதிபர், சட்டமா அதிபர், பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி, கடற்படை தளபதி, ரக்னா லங்கா பிரதிநிதிகள் உட்பட அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, விஜயதாஸ ராஜபக்ஷ, பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகியோரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# ஜனவரியிலிருந்து இலத்திரனியல் அடையாள அட்டை பாவனைக்கு

இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் பாவனைக்கு விடவுள்ளதாக ஆட்பதிவு திணைக்களத்தின் உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, புதிய இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை பாவனையுடன் அடையாள அட்டையின் இலக்கமும் மாற்றமடையவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது பாவனையில் உள்ள 9 இலக்கங்களையுடைய அடையாள அட்டை 12 இலக்கமுடைய அடையாள அட்டையாக மாற்றம் பெறவுள்ளது.

புதிய முறைக்கமைய முதல் 4 இலக்கங்களும் பிறந்த வருடத்தையும் இறுதி 4 இலக்கங்களுக்கு முன் வரும் பூச்சியமும் சேர்த்து மொத்தமாக 12 இலக்கங்களுடன் புதிய இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையை வழங்க உத்தேசித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

1972 ஆம் ஆண்டு முதல் தேசிய அடையாள அட்டையானது 9 இலக்கங்களுடன் V மற்றும் X ஆகிய ஆங்கில எழுத்துக்கள் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# சிறையில் உள்ள அரசியல் கைதிகளின் விடுதலைக்காக இந்து மாமன்றம் முழுநாள் பிரார்த்தனைக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

சிறையில் வாடும் தமிழ் அரசியல்கைதிகளின் விடுதலையை வேண்டி இன்று 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வடக்கு, கிழக்கு உட்பட தமிழ பிரதேசங்களிலுள்ள ஆலயங்களில் முழுநேரப் பிரார்த்தனையிலீடுபடுமாறு சகல இந்து மக்களையும் இந்து மாமன்றம் கேட்டுக்கொள்கின்றது.

சகல இந்து ஆலயங்களிலும் "திருமுறை முற்றோதலில்" ஈடுபடுமாறும் மாமன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

எவ்வித விசாரணையோ, விடுதலையோ இன்றி வருடக்கணக்கில் தடுப்புக்காவலில் உள்ள அரசியல் கைதிகள் உடன் விடுதலை செய்யப்பட வேண்டுமெனக் காலத்திற்குக் காலம் இந்து மாமன்றத்தால் கோரிக்கை விடுக்கப் படுவதுடன்,

அவ்வப்போது ஆலயங்களில் பிரார்த்தனையில் ஈடுபடுவதன்மூலம் அவரகளது விடுதலை துரிதப்படுத்தப்பட வேண்டுமெனவும் நடவடிக்கை எடுத்து வந்துள்ளோம்.


இதன் தொடர்ச்சியாக இன்று வெள்ளிக்கிழமை ஆலயங்களில் "திருமுறை முற்றோதலை" கடைப்பிடித்து வழிபாட்டில் ஈடுபடுமாறு இந்து மாமன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.(இ-7-10)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# கடல்மாசு தரும் உடல்மாசு

இன்றைய கால கட்டத்தில் மனித சனத்தொகை ஆனது ஓர் எல்லைமீறிய பரிமாணத்தில் அதிகரித்து செல்கின்றது. அதிகரித்த சனத்தொகைக்கு நிகராக புரதமும் புரதம் சார் உணவு வேண்டுகையும் அதிகரித்துச் செல்கின்றது. எனினும் விவசாயம் ஆனது மனித சனத் தொகையின் வேண்டுகைக்கு ஏற்ற அளவிலான உணவினை நிவர்த்தி செய்கையில் பல இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றதென்பது நிதர்சனம்.

மனிதன் தனது புரதத் தேவைகளுக்காக பெரிதும் விலங்குப் புரதத்தையே நாடி வருகின்றான். இதில் பெரும் வகிபாகத்தை மீன்பிடியும் அதோடிணைந்த துறைகளும் தம்மகத்தே கொண்டுள்ளன. அந்த வகையில் இலங்கைத்தீவு ஆனது மிகவும் கடல் வளம் மிகுந்த நாடாக திகழ்



கின்றது. எனினும் தற்கால தொழில்நுட்ப வளர்ச்சியும் அதனோடு ஒன்றித்த கைத்தொழில் துறை வளர்ச்சியும் கடல் மாசடைதலில் பெரும் பங்கெடுக்கின்றது. அது மட்டுமல்லாது வேறு பல இன்னோரன்ன காரணிகளும் கடல் மாசடைவில் செல்வாக்குச் செலுத்துகின்றது. அவையாவன முறையற்ற விவசாயம், விவசாயத் துறையில் பயன்படுத்தப்படும் இரசாயனப் பிரயோகங்கள் இயற்கை நீரோட்டத்தினால் கடலை சேரும் பொழுது பெரிதும் மாசுக்குள்ளாக்குகின்றது.

எல்லையற்ற அதிகரித்த கப்பற் பயணங்கள் இதன் காரணமாக எண்ணெய் கழிவுகள் மற்றும் கப்பல் இயந்திரக் கழிவுகள், கப்பலினால் ஏற்படுத்தப்படும் மாசு என்பன கடற் சூழல் தொகுதியை பெரிதும் பாதிக்கின்றது.

மனிதனின் நேரடிக் கழிவுகள் மற்றும் தொழிற்சாலைக் கழிவுகள் கடலினுள் எதுவித பரிகரிப்புகளும் இன்றி அகற்றப்படுவதனால் கடல் மாசானது பெருமளவில் அதிகரித்து வருகின்றது. இங்கு ஓர் சுவாரஸ்யமான சம்பவத்தை குறிப்பிட்டே ஆக வேண்டும். இன்று சர்வதேச ரீதியில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த சோமாலிய கடற்கொள்ளை ஆனது ஓர் காலகட்டத்தில் பெரும் வல்லரசு நாடுகளினால் அவர்களின் கடல் எல்லைக்குட் புதைக்கப்பட்ட பெருந்திரளான கழிவுகளை அகற்றும் பொருட்டே ஆரம்பிக்கப்பட்டது என்பது உண்மை.

அது மட்டுமல்லாது முறையற்ற மீன்பிடி முறைகளும் எல்லை அற்ற கடல் வளச்சுரண்டல்களும் எமது கடல் வளத்தினை குன்றச் செய்வ்துடன் மிகவும் மாசுபடுத்தி வருகின்றது. இதில் வருந்தத்தக்க விடயம் கடல் மீது விழிப்புணர்வு காட்ட வேண்டிய மீனவர்களில் சிலர் தமது குறுகிய கால பெரு இலாபத்தை கருத்தில் கொண்டு கடல் வளங்களை எல்லைகளின்றி சுரண்டி வருவது விழிப்புணர்விற்கு உட்படுத்த வேண்டிய விடயமாகும்.

கனிய வளச்சுரண்டல், மணல் அகழ்வு என்பன எமது கடற்கரை ஓரங்கள் அரிப்புக்கு உள்ளாக காரணமாக அமைகின்றன. குறிப்பாக இலங்கையின் பல கரையோர மாவட்டங்கள் அரிப்புக்குள்ளாகி வருகின்றமை யாவரும் அறிந்த விடயமாகும், அண்மைக் காலமாக பத்திரிகை வாயிலாக அறியப்பட்ட ஒலுவில, மட்டக்களப்பு பிரதேச கடலரிப்பும் அணைக்கட்டுமானப் பணிகளும் குறிப்பிடத்தக்கன.

பல வளர்ச்சி அடைந்த நாடுகள் வளர்ச்சி அடைந்துவரும் இலங்கை போன்ற நாடுகளின் கடற்பரப்பில் தமது கப்பற்போக்குவரத்தின் மூலம் எண்ணெய் கழிவுகளை வரையறை இன்றி வெளியேற்றி வருகின்றது. எனினும் எமது நாடு இவ்வாறான விடயங்களில் பாராமுகம் காட்டி விட்டு கரையோர மக்கள் மீது சட்டச் சீர்திருத்தங்களை கடுமையாக்குவது வேடிக்கையான விடயம் ஆகும்.

இவ்வாறான ஆறறிவு படைத்த மனித வர்க்கம் எமது கடல் அன்னை மீது கட்டவிழ்த்துவிடும் மாசாக்க வழிகளைக் கூறிக் கொண்டே செல்லலாம். இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு ஜூன் 8 ஆனது சர்வதேச சமுத்திர தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணத்தினால் எமது யாழ்.பல்கலைக்கழகம் உயிரியற் பிரிவு சார் மீன்பிடியியல் விஞ்ஞானப் பிரிவு மாணவர்களினால் சர்வதேச சமுத்திர தினம் வெகுசிறப்பாக பல்வேறுபட்ட சிறப்பு விழிப்புணர்வு அம்சங்களுடன் நடைபெற்றது. இதில் 38 ஆவது அணி மீன்பிடியியல் துறை (4 ஆவது அணி) மாணவர்களினால் சிறப்பு ஆவணப் படம் வெளியிடப்பட்டது. இதனை கீழ்க் காணும் தொடலியில் (You tube- World ocean day 2015, University of Jaffna)

(https://youtu.be/qDFKED vcZmU) நீங்கள் கண்டு பயன் பெறலாம். அத்துடன் அன்றைய தினம் பல்வேறு மாணவர்களின் ஆக்கத்தினால் அமையப் பெற்ற விழிப்புணர்வு கண்காட்சியும் நடைபெற்றது.



### கேளடா மானிடா...

கார்முகில் கலந்திடும்
நீலமகள் நிறை பொழில்
சூழ்தரு நித்திலம் - ஈழம்
வேரறு நாடகம் - அதில்
பெரும் சாத்தான் மானிடன்
கூர்அறு பிளாத்திக்கு - உடன்
நீள்கொடி கனியஎண்ணெய்
பேரிடர்தான் என பெரிதுவக்கும்
விஞ்ஞான மேலோர்- பகர்ந்திடினும்
சீர்மிகு விஞ்ஞான கண்டெடுப்பு- உவந்த
ஞாலமகன் பயனீட்டும் - பலவகை
பன்னாட்டு உபகரணம் உளதாம்
ஏர் எடுத்து உழவு செய்ததெல்லாம்
மார் அடித்து மண்ணுள் புதைத்துவிட்டு
வளமாக்கி எனும் பேர் அரக்கன் பேரில்
மண் அழிக்கும் இரசாயன வளமாக்கி
போர் தொடுப்போம் என உரைத்து
பல்குழல் எறிகணைகள் வீசி
சீர் நெடுகு கட்டடம் சேர்
சீமெந்து உற்பத்திகள் சீரழிவு
தோற் பொருட்கள் அதன் -பதனில்
சேர்த்திடும் பார உலோகங்கள்,
ஊன் ஆசை பெருக உவத்திடும்
சனப்பெருக்கம் - ஆகில்
உளண் ஆசை கொண்டு
அதி உச்ச மீன்பிடியும்
பல்பயன் பொழுதுபோக்கு
பகட்டுக்கு கடல் மிருக வேட்டை
பனிபடர் மலையெல்லாம்
பாலைவனமாய் மாற்றிவிட்டு
பலன்தரு கானகத்தை பக்குவமாய்
அழித்துவிட்டு - சூழல் வெப்பநிலையாம்
சுட்டெரிக்கும் வேனிலாம்
கானகம் வேண்டாம் - காசுக்கு ஏசியாம்
கருத்துடன் மாந்தர் கூட்டம் - அனைத்தும்
ஒன்றன்மேல் ஒன்று ஒருங்கமை சுமைஏற்றி
எங்கள் வளமிகு கடல் அன்னை
வழி தெரியாது மாசடைந்து
உயிர்குடி நோய்களும் உணவுக்குப் பஞ்சமும்
மிடி தரு இன அழிவு கடைசியில்
மானிட இனஅழிவு -இது காணும்
நிறுத்திடுவீர் இழிசெயல்கள்
பெரிதாகப் போற்றிடுவீர்
இயற்கை அன்னை தெய்வமென.

க.கலைவாணன்
உயிரியல் பிரிவு
யாழ்.பல்கலைக்கழகம்

## வாரத்திற்கு ஒரு புதிர்! 147

ஈ-மெயில் ஐ கண்டுபிடித்தவர் யார்?

புதிர் 147இற்கான விடைகளை 23.11.2015 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

கு.குணாளன்
ஆசிரியர், பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
விரிவுரையாளர் (தகுதிகாண்)
மீன்பிடி விஞ்ஞானத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு
ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான சங்கம் பிரிவு A பிரிவிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

## புதிர் 146 க்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

கே.ராஜகோபால்
அடைக்கலம் தோட்டம்,
கந்தசாமி கோவிலடி,
வட்டுக்கோட்டை

புதிர் 146 க்கான கேள்வியும் விடையும்:
உலகில் அழிந்து வரும் உள்நாட்டுக் கடல் எது?
ஏரல் கடல்

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 147

சரியான விடை :-........................................
முழுப்பெயர்:-........................................
முகவரி:-........................................
தொ.பே. இல:........................................
கையொப்பம்:........................................

## நடைபெற்ற மியன்மார் தேர்தலில்

# ஆங்சான் சூகிக்கு அமோக வெற்றி 90 வீத வாக்குகள் பெற்று சாதனை

(யாங்கூன்)

**மியன்மாரில் நடந்த பாராளுமன்ற தேர்தலில் சூகி கட்சி அமோக வெற்றி பெற்று ஆட்சியைப்பிடித்துள்ளது. அமைதியான ஆட்சி மாற்றத்துக்கு ஜனாதிபதி யூ தீன் சீன் உறுதியளித்துள்ளார்.**



பர்மா என்று அழைக்கப்பட்டு வந்த மியன்மார் நாட்டில் கடந்த 8ஆம் திகதி பாராளுமன்ற தேர்தல் நடந்தது. கீழ்சபையான பிரதிநிதிகள் சபையில் 440 இடங்களில் 323 இடங்களுக்கும். மேல்சபையில் 224 இடங்களில் 168 இடங்களுக்கும் தேர்தல் நடந்தது. 10 சதவீத இடங்கள் இராணுவத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

கீழ்சபையில் எல்லைப்பகுதியில் போராளி குழுக்களுடனான சண்டை காரணமாக 7 தொகுதிகளில் தேர்தல் இரத்து செய்யப்பட்டது.

போட்டியிட்ட தொகுதிகளில். 67 சதவீத தொகுதிகளை கைப்பற்றினால் தனிப்பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி அமைக்கலாம் என்ற நிலையில், இதுவரை அறிவிக்கப்பட்ட முடிவுகளில் சூகி கட்சி 90 சதவீத இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. சூகி தனது யாங்கூன் காமு தொகுதியில் அமோக வெற்றி பெற்றுள்ளார்.

புதிய ஆட்சி எப்போது?

மியன்மார் அரசியல் சட்டத்தின்படி, அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் வரையில் புதிய அரசு பதவி ஏற்க முடியாது. நடப்பு பாராளுமன்றத்தின் ஆயுள் காலம் ஜனவரி மாதம்தான் முடிவு அடைகிறது. பெப்ரவரி மாதம் புதிய எம்.பி.க்கள். நாட்டின் ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பார்கள். புதிய ஜனாதிபதி, 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி அரசு அமைப்பார்.

ஜனாதிபதி தேர்தலில் சூகி போட்டியிட முடியாது. அந்த நாட்டின் அரசியல் சட்டப்படி. நாட்டின் ஜனாதிபதி தேர்தலில் வெளிநாட்டு பிரஜைகளை பிள்ளைகளாக கொண்டவர்கள் போட்டியிட முடியாது. சூகியின் 2 மகன்கள் இங்கிலாந்து குடிமக்கள் என்பதால். அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட இயலாது. ஆனால் அவர். "நான் ஜனாதிபதிக்கு மேலாக இருப்பேன்" என கடந்த வாரம் கூறியது குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்ற தேர்தலில் அமோக வெற்றி பெற்றுள்ள சூகி கட்சிக்கு ஜனாதிபதி யூ தீன் சீன் வாழ்த்து தெரிவித்துள்ளார். அவரது கட்சி தேர்தலில் அளித்த ஒத்துழைப்புக்காக ஜனாதிபதி நன்றியும் தெரிவித்துள்ளார். அமைதியான ஆட்சி மாற்றத்துக்கு அவர் உறுதியும் அளித்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதியின் சார்பில். தகவல்துறை அமைச்சர் யீ துத் கூறும்போது. "தேர்தல் கமிஷன் முடிவுகள் அறிவிக்கப் பட்டுள்ள நிலையில். என்.எல்.டி. கட்சியின் வெற்றிக்கு வாழ்த்துகள். மக்களின் விருப்பத்துக்கு மதிப்பளித்து. சட்டத்திற்கு உட்பட்டு அமைதியான ஆட்சி மாற்றம் நடைபெறும்" என்றார்.

தேசிய நல்லிணக்கம் குறித்து விவாதிக்க ஜனாதிபதி யூ தீன் சீன். பாராளுமன்ற சபாநாயகர் ஷ்வே மான் உள்ளிட்டவர்களுக்கு அழைப்பு விடுத்து சூகி கடிதம் எழுதி உள்ளார். இதற்கு அரசு இணக்கம் தெரிவித்துள்ளது. அதே நேரத்தில் தேர்தல் முடிவுகளை தேர்தல் ஆணையாளருக்கு முழுமையாக அறிவித்த பின்னர். இந்த கூட்டத்தை நடத்தலாம் என அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது. (3-7)

## ஆப்கானில் 7 பேர் தலை துண்டித்துக்கொலை சவப் பெட்டிகளுடன் தலைநகரில் ஆர்ப்பாட்டம்

### யுத்தக் குற்றம் என ஐ.நா.கண்டனம்




தலைநகர் காபூலில் தீவிரவாதக் குழுவைச் சேர்ந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களால் இரு பெண்கள். ஒரு பெண் குழந்தை உட்பட 7 பேர் தலையை துண்டித்து படுகொலை செய்யப்பட்டதை யடுத்து பெரும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தக் கொடூரப் படுகொலைகளுடன் தொடர்புடையவர்களை நீதியின் முன் நிறுத்தக் கோரி அந்நாட்டின் தலைநகர் காபூலில் நேற்று முன்தினம் புதன்கிழமை எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டது.

காபூல் நகரின் மேற்கே கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் கொட்டும் மழையில் நனைந்தவாறு நகரின் மத்திய பகுதியை நோக்கி ஊர்வலமாகச் சென்றுள்ளனர்.

அவர்கள் தலிபான் தீவிரவாதிகளுக்கும் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கும் எதிரான சுலோகங்களைக் கொண்ட பதாகைகளை ஏந்தியவாறு சென்றனர்.

இந்தப் படுகொலைகளுக்கு ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரப் கானி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார.

மேற்படி சம்பவத்தை யுத்தக் குற்றமொன்றாகக் கருத முடியும் என ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிட்டுள்ளது.

இந்தப் படுகொலைகள் யாரால் மேற்கொள்ளப்பட்டன என்பது இது வரை உறுதிப்படுத்தப்படாதபோதும், அவை தலிபான்கள் அல்லது ஐ.எஸ். தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

படுகொலை செய்யப்பட்ட 7 பேரும் கடந்த ஒக்டோபர் மாதம் காஸ்னி மாகாணத்திலிருந்து கடத்தப்பட்டிருந்தனர்.

அவர்களது சடலங்கள் அரசாங்கக் கட்டுப்பாட்டிலில் லாத காக்-ஈ- ஆப்கான் மாவட்டத்திலுள்ள ஸாபுல் பிராந்தியத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

மேற்படி 7 பேரின் சவப் பெட்டிகளைத் தாங்கியவாறு ஜனாதிபதியின் மாளிகையை நோக்கி ஆயிரக்கணக்கானவர்கள் முன்னேறினர். இதனைத் தடுப்பதற்கு பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 7 பேர் காயமடைந்துள்ளனர். (3-7)

## மாலைதீவில் நெருக்கடி நிலை வாபஸ் வரவேற்கிறது அமெரிக்கா

மாலைதீவின் ஜனாதிபதி அப்துல் கயூம். தனது மனைவியுடன் ஹஜ் யாத்திரை சென்று விட்டு நாடு திரும்பியபோது. அவர் பயணம் செய்த படகில் வெடிப்பு ஏற்பட்டது. இது அவரை கொல்வதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சி என கருதப்படுகிறது. இது தொடர்பான வழக்கில் அந்த நாட்டின் துணை ஜனாதிபதி அகமது அதீப் அப்துல் கபூர் கைது செய்யப்பட்டார்.

ஆனால்ஜனாதிபதியை கொல்வதறகு முயற்சி நடந்தது என்பதற்கு எந்த முகாந்திரமும் இல்லை என மத்திய புலனாய்வு அமைப்பு கூறியது. இதை மாலைதீவு அரசு நிராகரித்துவிட்டது.

இந்த குழப்பமான சூழலில் நாட்டில் ஒரு மாத காலத்துக்கு நெருக்கடி நிலையை அறிவித்து கடந்த 4 ஆம் திகதி ஜனாதிபதி அப்துல் கயூம் அறிவிப்பு வெளியிட்டார். இதற்கு அமெரிக்கா அதிருப்தி தெரிவித்திருந்தது.

ஆனால் நேற்று முன்தினம் அங்கு திடீரென நெருக்கடி நிலை, விலக்கிக்கொள்ளப்பட்டு விட்டது. இதை அமெரிக்கா வரவேற்றுள்ளது. இது தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத்துறை துணை செய்தி தொடர்பாளர் மார்க் டோனர் கருத்து தெரிவிக்கையில், "மாலைதீவில் நெருக்கடி நிலை வாபஸ் பெறப்பட்டிருப்பதை நாங்கள் வரவேற்கிறோம்" என குறிப்பிட்டார்.

நெருக்கடி நிலை திரும்பப் பெறப்பட்டிருப்பதை தொடர்ந்து அந்த நாட்டில் நிலவி வந்த பதற்ற நிலை நீங்கி சுமுகமான நிலைமை ஏற்பட வழிவகுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (3-7)

## அரச தரப்புக்கும் தீவிரவாதிகளுக்குமிடையில் லிபியாவில் கடும் மோதல்; 16 பேர் உயிரிழப்பு



(லிபியா)

லிபியாவின் பெங்காசி நகரில் அரசு தரப்புக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 16 பேர் பலியாகியுள்ளனர்.

கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் அந்நாட்டின் பெரும்பகுதியை தீவிரவாதிகள் கைப்பற்றி தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

நேற்று முன்தினம் அவர்கள் பெங்காசி நகரின் மத்தியில் அரசுப் படைகள் மீது தாக்குதல் தொடுத்தனர். அரசுப் படையினரும் பதில் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலில் 16 பேர் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. லிபியாவில் ஜனாதிபதியாக இருந்த கடாபி கொல்லப்பட்டதையடுத்து அந்நாட்டில் மோசமான தாக்குதல் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (3-7)

# இராணுவ வீரர்களுடன் தீபாவளி கொண்டாட்டத்தில் பிரதமர் மோடி



பிரதமர் நரேந்திர மோடி இந்த ஆண்டு இராணுவ வீரர்களுடன் தீபாவளி கொண்டாடுவதற்காக பஞ்சாப் எல்லைக்கு சென்றிருந்தார். அமிர்தசரஸ் அருகே காசா என்ற இடத்திற்கு சென்ற அவர் அங்குள்ள டோக்ராய் போர் நினைவு சின்னத்துக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். பின்னர் இராணுவ வீரர்களுடன் கலந்துரையாடிய பிரதமர் மோடி, அவர்களுடன் பட்டாசு வெடித்து தீபாவளியை கொண்டாடினார்.

இந்த கொண்டாட்டம் குறித்து மோடி தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள செய்தியில், 1965 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் டோக்ராயில் நடந்த போர் மிகவும் கடுமையாக இருந்தது. இராணுவ வீரர்கள் கடுமையாக போராடி வெற்றிக்கனி பறித்ததை எண்ணிப்பார்க்கிறேன். உங்கள் வீரம், அர்ப்பணிப்பு மற்றும் நற்பண்புகளால் உலகமே இந்தியாவை மதிக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.



# இந்துக்களுக்கு எதிராக அநியாயம் செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை

## பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப் உறுதி

(கராச்சி) —

**பாகிஸ்தானில் இந்துக்களுக்கு எதிராக அநியாயம் செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப் உறுதி அளித்துள்ளார்.**

பாகிஸ்தானில் சிறுபான்மையினராக உள்ள இந்துக்கள் மீது வன்முறை சம்பவங்கள் நடைபெறுவது தொடர்பாக சர்வதேச சமுதாயம் கவலையை வெளிப்படுத்திய நிலையில், கராச்சியில் தீபாவளி கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப் "இந்துக்கள் ஒடுக்கப்பட்டவர்களாகவும், இஸ்லாமியர்கள் அவர்களை ஒடுக்குபவர்களாகவும் இருப்பின் நான் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பேன. ஒடுக்குபவர்களுக்கு எதிராக நான் உங்களுடன் (இந்துக்களுடன்) நிற்பேன்" என்றும் கூறியுள்ளார்.

சாதி, சமயம் மற்றும் மத விவகாரங்களில் மற்றவர்களின் பொறுப்பற்ற செயலால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்க வேண்டியது என்னுடைய கடமை.

"பலவீனமாக மற்றும் பாதிக்கப்படக்கூடிய சமுதாயத்துடன் இணைந்து நிற்க வேண்டும் என்று என்னுடைய மதமானது எனக்கு கற்பித்து உள்ளது. உண்மையில் எல்லா மதமும் பலவீனமாக மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுடன் நிற்கவேண்டும் என்றுதான் சொல்கிறது" என்றார். இந்து தலைவர்களிடம் பேசிய நவாஸ் செரீப் சிறுபான்மை மக்களை பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாக உத்தரவாதம் அளித்தார்.

பாகிஸ்தானில் உள்ளவர்கள் ஒரே தேசத்தினர். இது நாம் ஒற்றுமையாக இருந்து, ஒருவருக்கு ஒருவர் உதவிசெய்ய வேண்டிய காலம். இஸ்லாமியர்கள் தங்களுடைய மகிழ்ச்சியை இந்துக்களுடன் பகிர்ந்து கொள்ளவேண்டும்.

பாகிஸ்தான் அனைவருக்கும் ஒரே தேசம். பாகிஸ்தானியர்கள் அனைவருக்கும் நான் பிரதமர். இதில் சாதி, சமயம் மற்றும் மதத்திற்கு இடமில்லை என்றும் நவாஸ் செரீப் கூறியுள்ளார்.

பாகிஸ்தானின் தெற்கு சிந்து மாகாணத்தில் உள்ள இந்து பெண்கள் வலுக்கட்டாயமான முறையில் மதம் மாற்றம் செய்யப்படுகின்றனர். இவ்விவகாரம் தொடர்பாக இந்து சமுதாயத்தினர் பாராளுமன்றத்திற்குள்ளும் மற்றும் பாராளுமன்றத்திற்கு வெளியேயும் போராடி வருகின்றனர்.

இந்நிலையில் நவாஸ் செரீப்பின் இக்கருத்து முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. அரசு மற்றும் பொலிஸ் அதிகாரிகள் நடவடிக்கை இல்லாத காரணத்தினால் இதுபோன்ற சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன என்று இந்து தலைவர்கள் குற்றம் சாட்டியிருந்தனர்.

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்திலும் இந்துக்கள் மற்றும் பிற சிறுபான்மையினர் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (3-7)

# கண்முன்னே வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்ட 8குடும்ப உறுப்பினர்கள்

தமிழ் நாடு கடலூர் மாவட்டத்தில ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் 35 பேர் பலியாகியுள்ளதுடன் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 8 பேர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர். தமது குடும்ப உறுப்பினர்கள் 8 பேர் தமது கண் முன்னாலேயே வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டமை தொடர்பாக குடும்பஸ்தர் வீரமணி விபரிக்கையில்,

கடந்த 9 ஆம் திகதி காலை நானும் என் மனைவி, 4 குழந்தைகள், பெற்றோர், என்னுடைய தங்கை, அவருடைய கணவர், அவர்களின் மகன் ஆகிய 11 பேர் வீட்டில் இருந்தோம். அப்போது பலத்த மழையுடன், சூறாவளி காற்று வீசத் தொடங்கியது. சிறிது நேரத்தில் என் குடிசை வீட்டுக்குள் மழை நீர் அதிகமாக வர ஆரம்பித்தது.

இதனால் மனைவி உட்பட 8 பேரையும் வீட்டின் பரண் மீது உட்கார வைத்து விட்டு, என்னுடைய தாயை நானும், மைத்துனர் சிவசங்கரும் தூக்கிக்கொண்டு பக்கத்துத் தெருவில் உள்ள மாமா வீட்டுக்கு புறப்பட்டோம். நாங்கள் வரும போதே பெரிய ஓடையில் காட்டாற்று வெள்ளம் அதிகரிக்க தொடங்கியது.

இருப்பினும் சிரமப்பட்டு பெரிய ஓடையை கடந்து எனது தாயை மாமா வீட்டில் கொண்டு சேர்த்தோம். பின்பு நானும் மைத்துனர் சிவசங்கரும் வீட்டுக்கு திரும்பினோம். அதற்குள் பெரிய ஓடையில் காட்டாற்று வெள்ளம் திடீரென 10 அடி உயரத்துக்கு வந்தது. சற்று நேரத்தில் என் வீடு வெள்ளத்தில் அடிபட்டுச்சென்றது.

இதில் எங்கள் கண் முன்னாலேயே என்னுடைய குடும்பத்தை சேர்ந்த 8 பேரும் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டு பலியானார்கள் என்று கண்ணீர் மல்க தெரிவித்துள்ளார். (3-7)

# யசீர் அரபாத்தின் இல்லம் அருங்காட்சியகமாகிறது

(ஜெருசலேம்)

பாலஸ்தீன ஜனாதிபதி யசீர் அரபாத் கடந்த 2004ஆம் ஆண்டு மரணம் அடைந்தார். அவரை தொடர்ந்து அவரது பத்தா கட்சியை சேர்ந்த முகமது அப்பாஸ் ஆட்சி பொறுப்புக்கு வந்தார்.

ஆனால் அவரது படைகளுடன் ஹமாஸ் இயக்கத்தினர் கடுமையாக சண்டையிட்டு, காசா பகுதியை கடந்த 2007 ஆம் ஆண்டு கைப்பற்றினர்.

அதைத் தொடர்ந்து, யசீர் அரபாத், ரமல்லா நகரில் வாழ்ந்து வந்த இல்லம் மூடப்பட்டு கிடக்கிறது.

அந்த இல்லத்தில் யசீர் அரபாத் நினைவு அருங்காட்சியகம் அமைக்கப்படுகிறது.

இதற்காக அந்த இல்லத்தை ஹமாஸ் ஆட்சியாளர்கள், யசீர் அரபாத் கட்சியினரிடம் முறைப்படி ஒப்படைத்தனர்.

இதையொட்டி நடந்த நிகழ்ச்சியில் பாலஸ்தீனத்தின் அனைத்து பிரிவு அதிகாரிகளும கலந்து கொண்டனர். (3-7)

# தமிழ் சினிமா வரலாறு

53

## நகைச்சுவை நடிப்பில் புகழின் சிகரத்தைத் தொட்ட என்.எஸ்.கிருஷ்ணன்

...டி.கே.எஸ். சகோதரர்களின் ஸ்ரீபால சண்முகானந்தா சபா அப்போது புகழ் பெற்று விளங்கியது. திருவனந்தபுரத்தில் அந்த நாடகக்குழு வினர் நாடகம் நடத்தியபோது, என்.எஸ். கிருஷ்ணன் அதில் சேர்ந்தார்.

கிருஷ்ணனின் நடிப்பும் பாட்டும் சண்முகத்தை வெகுவாகக் கவர்ந்தன. இருவரும் நண்பர்கள் ஆனார்கள்.

மனோகரா நாடகத்தில் வசந்தன் வேடத்தில் நடித்து வந்தவர் சொல்லிக் கொள்ளாமல் போய்விட, அதில் கிருஷ்ணன் பிரமாதமாக நடித்தார்.

அது முதல் நகைச்சுவை வேடங்களில் நடிக்கலானார். அதில் புகழ் பெற்றார்.

நகைச்சுவைக் காட்சிகளைத் தாமே அமைத்து, வசனம் எழுதி நடிக்கும் ஆற்றலையும் பெற்றார்.

### மேனகா

டி.கே.எஸ்.சகோதரர்களின் புகழ் பெற்ற நாடகங்களில் ஒன்று மேனகா. துப்பறியும் கதை.

மன்னர் வடுவூர் துரைசாமி அய்யங்கார் எழுதிய நாவல் இது. நாடகத்தைப் பார்த்த எம்.சோம சுந்தரமும் எஸ்.கே.மொகிதீனும் (பிற்காலத்தில் ஜூபிடர் அதிபர்கள்) மேனகாவைப் படமாக்க முடிவு செய்தனர்.

நாடகக் குழு முழுவதையும் சினிமாவுக்காக 14 ஆயிரத்துக்கு ஒப்பந்தம் செய்தனர்.

### கதை

மேனகா படத்தின் கதைச் சுருக்கம் வருமாறு:-

வராகசாமி, இளம் வக்கீல். இவருடைய மனைவி மேனகா.

வராக சாமியின் சகோதரிகள் மேனகாவை கொடுமைப்படுத்துகிறார்கள்.

வராகசாமிக்கு மறுமணம் செய்ய



ஏற்பாடு செய்வதுடன் மேனகாவை நைனா முகமது என்பவனுக்கு (வில்லன்) 5 ஆயிரம் ரூபாய்க்கு விற்றுவிட ஏற்பாடு செய்கிறார்கள். இதற்கு சாமா என்பவன் உதவி செய்கிறான்.

ஏமாற்றப்பட்ட மேனகா நைனா முகமதுவிடம் இருந்து தன் கற்பைக் காப்பாற்றிக் கொள்வதற்காக தற்



கொலை செய்து கொள்ள முயற்சி செய்கிறாள்.

நைனா முகமதுவின் மனைவி நூர்ஜஹான் அவளைக் காப்பாற்றுகிறாள்.

மேனகா ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகிறாள். அவள் ஒரு நடிகனுடன் ஓடிப்போய்விட்டதாக வராம சாமியின் சகோதரிகளும் சாமாவும் வதந்தி பரப்புகின்றனர். இதை வராகசாமி நம்பிவிடுகிறான்.

ஒருநாள் நூர்ஜகானுடன் மேனகா காரில் செல்லும்போது அதை வராக சாமி பார்த்துவிடுகிறான். மேனகாவை கொன்று விடவேண்டும் என்ற நோக்கத்துடன் பின்தொடர்ந்து செல்கிறான். *(தொடரும்)*

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 321

## அதிருப்தியிலிருந்து நன்றியுணர்விற்கு...

...ஏன் பதிலுக்கு நீங்கள் எனக்கு செய்யக்கூடிய மிகச் சிறந்த விடயம் நீங்கள் மலர்வதே! என்று நான் சொல்வது வழக்கம்.

அதுவே பதிலுக்கு நீங்கள் எனக்கு செய்யக்கூடிய, நான் உங்களுக்கு செய்யக்கூடிய மிகச்சிறந்த விடயமாகும். அதைப் புரிந்து கொள்ளுங்கள்.

இந்த வார்த்தைகளை நீங்கள் மனதில் புகுத்தி நன்றியுணர்வை உங்கள் இருப்புத் தன்மையாகச் செய்தால் நீங்கள் பதிலுக்கு எனக்கு நிறையச் செய்ததாகக் கொள்ளலாம்.

ஆனால், என்னால் ஒரு விடயம் சொல்ல முடியும்....

நீங்கள் பதிலுக்கு ஏதேனும் செய்ய வேண்டும் என்று எண்ணினால் சமூகத்திற்கு ஏதேனும் சேவை செய்யுங்கள்; மற்றவர்களுக்கு உதவுங்கள்.

நீங்கள் கண்டுபிடித்த மகிழ்ச்சிக்கு, மற்றவர்களும் விழிப்படைய உதவுங்கள்.

அதை அஹங்காரத்தினாலோ அல்லது உயர்வு மனப்பான்மையாலோ செய்யாதீர்கள்.

பகிர்ந்துகொள்வதை நேசிப்பதாலும் பகிர்ந்து கொள்வதன் மகிழ்ச்சிக்காகவுமே அதைச்செய்யுங்கள்.

உங்கள் முழுச் சக்தியையும் அளித்து அதைச் செய்வதில் மகிழ்ச்சி அடையுங்கள்.

அது உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான



தியானமாகவும் அவர்களுக்கு ஒரு விழிப்படைதலாகவும் இருக்கும்.

நீங்கள் ஆழமான நன்றியுணர்வை உணரும் ஒவ்வொரு முறையும் உண்மையில் தியானத்தில்தான் இருக்கிறீர்கள்.

எப்பொழுதும் நன்றியுணர்வில் இருந்தால் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள்!

நீங்கள் எப்பொழுதும் தியானத்திலேயே இருப்பீர்கள்!

பாருங்கள்... ஒரு விடயம்... நன்றியுணர்வை ஒருபோதும் கற்றுக் கொடுக்க முடியாது.

ஆனால், குழந்தைகளுக்கு அவர்கள் சிறுவர்களாக இருக்கும்பொழுதே தெரிந்து கொள்வதற்காக நன்றியுணர்வுடன் இருப்பதைப் பற்றிச் சொல்லலாம்.

ஆனால், அதுவும் வெறுமனே மற்ற விடயங்களைப் போல பெரியவர்களுக்கு மரியாதை கொடுக்கக் கற்றுக் கொடுப்பதைப் போல ஆசிரியர்களுக்கு முகமன் கூற கற்றுக் கொடுப்பதைப் போல ஒரு சமூ நெறிப்படுத்தலாகவே இருக்கும்.

இது வெறுமனே மனதின் ஒரு இயந்திரத்தனமான அமைப்பு. உங்களுக்குள்ளிருந்து வரும் ஒரு உண்மையான உணர்வு அல்ல.

பிரபஞ்ச இருப்புத் தன்மையுடனான ஒரு தொடர்பை உணர ஆரம்பித்தால் உங்களுக்குள் உண்மையான நன்றியுணர்வு எழும்.

வேறு வழியே கிடையாது. இவ்விதமாக நன்றியுணர்வு எழும்பொழுது அது குறிப்பாக எதையும் நோக்கியதாக இருக்காது. அது வெறுமனே உங்களுடைய நறுமணமாக இருக்கும்; அவ்வளவே!

இது நிகழும்பொழுது நீங்கள் தானாகவே தெரிந்து கொள்வீர்கள். நன்றியுணர்வே உங்களுடைய பிரார்த்தனைதான் என்று!

இந்தப் பிரார்த்தனை உங்களை மேலே கொண்டு செல்வதாகத்தான் இருக்கும்.

*(தொடரும்)*

பரமஹம்ஸ சுவாமி

# தனித்து போட்டியிட்டால் உள்ளூர் மன்றத்தேர்தலில் சு.க. படுதோல்வியடையும்



## பிரசன்ன ரணதுங்க சுட்டிக்காட்டு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனித்து போட்டியிட்டால் படுதோல்வியைத் தழுவும் என கூட்டு எதிர்க்கட்சியின் அழைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

உடுகம்பொல பகுதியில் நடைபெற்ற கட்சிக் கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நீண்ட காலமாக சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்பட்டு வரும் ஏனைய கட்சிகளை கைவிட்டு தனித்து செயற்படுவது சுதந்திரக் கட்சியின் எதிர்காலத்தை பாதிக்கும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வெற்றியீட்டச் செய்ய மெய்யாகவே ஜனாதிபதி விரும்பினால் முதலில் கட்சியின் ஆதரவாளர்களின் இதயங்களை அவர் வென்றெடுக்க வேண்டும்.

மைத்திரிபால சிறிசேன சுதந்திரக் கட்சியின் தலைவராக இருக்கும் வரையில் கட்சிக்கு வாக்களிக்கப் போவதில்லை என கட்சி ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

பிரதேச சபை மற்றும் நகர சபை, மாநகரசபை உறுப்பினர்கள் மைத்திரியின் தலைமையில் சுதந்திரக் கட்சியில் போட்டியிட விரும்ப வில்லை.

கூட்டமைப்பிலிருந்து விலகி சுதந்திரக் கட்சி தனித்து போட்டி யிட்டால் அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுக்கொள்ளப் போவதாக சில பிரதேச அரசியல்வாதிகள் கூறு கின்றனர்.

உள்ளூராட்சி மன்ற கட்டமைப்பினையே முதலில் நாம் வலுப்படுத்த வேண்டும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த விடயங்களில் கவனம் செலுத்த வேண்டுமென பிரசன்ன ரணதுங்க மேலும் வலியுறுத்தியுள்ளார். (இ-7-10)

# இருண்டயுகம் மீள ஏற்பட இடமளிக்கப்படக்கூடாது

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

**1988-89 ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட இருண்ட யுகம் நாட்டில் மீளவும் ஏற்பட இடமளிக்கப்படக் கூடாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

குறித்த காலப் பகுதியில் இளம் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி என்ற ரீதியில் இளைஞர், யுவதிகளுக்கு என்னால் முடிந்தளவு சேவை செய்திருந்தேன்.

நாட்டில் நிலவிய இருண்ட பயங்கரமான சூழ்நிலைகளுக்கு எதிராக நாம் பாத யாத்திரை சென்றோம், மனித சங்கிலி போராட்டம் நடத்தினோம், போராட்டங்களை நடத்தினோம், கோசங்களை எழுப்பினோம்.

இடம்பெற்ற அநீதிகளை நாட்டுக்கே வெளிப்படுத்த நடவடிக்கை எடுத்தோம்.

அன்றைய காலப்பகுதியில் இடம்பெற்ற மனித படுகொலைகள் தொடர்பில் சாட்சியங்களை திரட்ட முடியவில்லை.



மாணவர் படுகொலைகள் தொடர்பிலான சூழ்ச்சித் திட்டங்கள் அடிப்படையில் நீதவான் சந்திரதாச நாணயக்கார தண்டனை விதித்தார்.

சாட்சியங்களை திரட்ட முடியாமை குறித்து அவர் பகிரங்கமாக அறிவித்திருந்தார். இருண்ட யுகம் தொடர்பில் நாம் மன வேதனை அடைகின்றோம்.

அம்பிலிப்பிட்டி மத்திய மகா வித்தியாலயம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் மாணவர்கள் காணாமற் போன சம்பவங்கள் தொடர்பில் ஆராய்ந்து வருண பிரியங்கர அந்தோனாவ என்னும் நூலை எழுதியுள்ளார்.

இந்த நூல் மிகுந்த அர்ப்பணிப்புடன் எழுதப்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

1988-89 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அம்பிலிபிட்டி பிரதேசத்தில் இடம்பெற்ற மாணவர் மற்றும் இளைஞர் காணாமற் போதல் சம்பவங்களின் அடிப்படையில் எழுதப்பட்ட அநதோனாவ என்னும் நூல் வெளியீட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராக பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனை தெரிவித்தார். (இ-7-10)

# சுதந்திரக் கட்சியின் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படும்

## செனவிரட்ன தகவல்



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு முகம்கொடுப்பது தொடர்பான சுதந்திரக் கட்சியின் திட்டங்கள் விரைவில் ஆரம்பிக்கப்பட இருப்பதாக சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் அமைச்சர் டபிள்யூ. டி.ஜே. செனவிரத்ன தெரிவித்தார்.

ஐ. ம. சு. மு.வில் உள்ள சக கூடடுக் கட்சிகள் தனித்து செயற்பட வேண்டிய தேவை கிடையாது என்று தெரிவித்த அவர் சகல தரப்பினரையும் இணைத்து ஐ. ம. சு. மு என்ற வகையில் களமிறங்க இருப்பதாகவும் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

மார்ச் மாதத்தில் நடைபெற இருக்கும் உள்ளூராட்சி தேர்தல் ஏற்பாடுகளை விரைவில் ஆரம்பிக்க இருக்கிறோம். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சு.கவுக்கு தலைமை வகித்து கட்சியின் வெற்றிக்கு பங்களிக்க இருக்கிறார்.

கடந்த காலங்களிலும் எமது கட்சி முற்போக்கு கட்சிகளுடன் இணைந்தே கூட்டாக போட்டியிட்டது. சகல கூட்டுக் கட்சிகளுடனும் பேசி ஐ. ம. சு. மு வெற்றிலை சின்னத்தின் கீழ் போட்டியிட இருக்கிறோம்.

நாட்டின் பிரதான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காகவே நாம் தேசிய அரசாங்கத்தில் இணைந்துள்ளோம். எமது கட்சி ஆளும் தரப்பிலும் எதிர்த் தரப்பிலும் அமர்ந்துள்ள போதும் எதிர்வரும் தேர்தலில் ஒன்றாக கட்சியின் வெற்றிக்காக பாடுபட இருக்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# இன்று ஒரு தகவல்

## நம்பிக்கை

"அந்த ஆள் ரொம்ப நல்லவன் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். கடைசி நேரத்தில் இப்படி காலலை வாரி விட்டானே" என்று சொல்லி அலுத்துக் கொள்பவர்கள் உண்டு.

ஒருத்தனை 'நல்லவன்' என்று நாம் நம்பிக் கொண்டிருக்கும் போது அவன் வேறு விதமாக நடந்து கொண்டால் நமக்கு மிகவும் கஷ்டமாகிவிடும்.

அதே மாதிரியான குறை நம்மிடம் உண்டு. இந்த உலகத்தில் எதையும் நல்லவிதமாக எடுத்துக் கொள்பவர்களும் உண்டு. கெட்டவிதமாக எடுத்துக் கொள்பவர்களும் உண்டு.

நீங்கள் எந்தக் கலர்க் கண்ணாடியை மாட்டியிருக்கிறீர்களோ அதே கலராகத் தான் இந்த உலகமும் தெரியும் என்று சொல்கிறார்களல்லவா, அது இதைத்தான். புத்தருடைய சீடர் ஒருத்தர் இருந்தார்.

அந்த புத்தபிக்கு தீட்சை வாங்கிக் கொண்டு தர்ம பிரசாரத்துக்காக வெளியூர் புறப்படுவதற்காக இருந்தார். அந்த நேரத்தில் புத்தர் அந்த சீடரைக் கூப்பிட்டு விசாரித்தார்.

"நீ எந்தப் பிரதேசத்தில் தர்மயாத்திரை செய்யப் போகிறாய்?" என்றார்.

"சுவாமி நான் சூனா பராந்தகம் என்னும் பிரதேசத்தில் தர்ம பிரசாரம் செய்யப்போகிறேன்" என்றார் அவர்.

"அந்தப் பகுதியிலுள்ள ஜனங்கள் உன்னை திட்டினால் நீ என்ன செய்வாய்?" என்று கேட்டார்.

நான் சந்தோஷப்படுவேன் என்றார் அவர்.

"ஏன்?" என்று கேட்டார் புத்தர்.

"நல்லவேளை, அவர்கள் திட்டுவதோடு விட்டார்களே, அடிக்கவில்லையே, அதனால் அவர்கள் மிகவும் நல்லவர்கள் என்று நினைப்பேன்" என்றார்.

"சரி அவர்கள் உன்னை அடிக்கிறார்கள் என்ற வைத்துக் கொள். அப்பொழுது நீ என்ன செய்வாய்?" என்றார்.

"அடடா இவர்கள் எவ்வளவு நல்லவர்கள் ஆயுதத்தால் தாக்காமல் இப்படி வெறும் கையால் அடிப்பதோடு நிறுத்தி விட்டார்களே... என்று நினைத்து சந்தோஷப்படுவேன்" என்றார்.

"சரி ஆயுதத்தாலேயே உன்னை தாக்கிவிட்டார்கள் என்று வைத்துக்கொள். அப்பொழுது என்ன நினைப்பாய்?" என்று கேட்டார்.

"ஆகா! இவர்கள் எவ்வளவு நல்லவர்களாக இருக்கிறார்கள். பிறவி என்ற தளையிலிருந்து விடுபட இந்த உலகில் ஒவ்வொருவரும் என்ன பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நான் மிகவும் சுலபமாக முத்தியடைவதற்கு இவர்கள் உதவி செய்கிறார்களே. இவர்களை எவ்வளவு போற்றினாலும் போதாது என்று நினைத்து சந்தோஷப்படுவேன்" என்றார் அந்த சீடர்.

உடனே புத்தர் பார்த்தார். அந்த சீடரை மனப்பூர்வமாக வாழ்த்தி வழியனுப்பி வைத்தார். இப்பொழுது அந்தச் சீடரின் மனோ நிலையை கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்.

அவருடைய பார்வையில் இந்த உலகத்தில் எல்லோருமே நல்லவர்கள் தான். அந்த அளவுக்கு அவருக்கு பக்குவம் ஏற்பட்டு விட்டது.

சிலருடைய பார்வை வேறு மாதிரி இருக்கும். அடுத்தவர்கள் நல்லது செய்தால் கூட அதை இவர்களுக்கு நல்ல விதமாக எடுத்துக் கொள்ளத்தெரியாது.

ஒரு பெரிய மனுஷன் இருந்தார். அவருக்கு தெரிந்த ஒருத்தர் ஒருநாள் அவரைத்தேடி வந்தார். "ஒரு 50 ரூபா இருந்தால் கொடுங்கள்; அடுத்த திங்கட்கிழமை திருப்பிக் கொடுத்து விடுகிறேன்" என்றார்.

அவர் திருப்பிக் கொடுப்பார் என்று இவருக்கு நம்பிக்கை இல்லை. இருந்தாலும் கொடுத்தார்.

ஆனால் அந்த ஆள் சொன்னபடியே சரியாக அடுத்த திங்கட் கிழமை திரும்பி வந்தார். 50 ரூபா பணத்தை சொன்னபடியே திருப்பிக் கொடுத்து விட்டுப்போனார்.

ஒருமாதம் கழித்து அதே ஆள் மறுபடியும் இவரிடம் வந்தார். "ஐயா ஒரு 50 ரூபா கடன் வேண்டும்" என்றார்.

அந்த பெரியமனுஷன் பார்த்தார்; உன்னை நம்பிப் பணம் கொடுக்க முடியாது போ என்று கோபத்துடன் சொன்னார்"

"என்னங்க இது? போன தடவை கூட சொன்னபடி சொன்ன நாளில் பணத்தை திருப்பிக் கொடுத்தேனே. என்னை நம்ப முடியாது என்று சொல்கிறீர்களே" என்றார்.

"ஆமாம். போன தடவை உன்னிடம் நான் பணம் கொடுத்த போது அதை நீ திருப்பிக் கொடுக்க மாட்டாய் என்று மனப்பூர்வமாக நம்பினேன். ஆனால் நீ அந்த நம்பிக்கையை பொய்யாக்கி விட்டாய். என் நம்பிக்கையை நாசமாக்கிய உன்னை மறுபடியும் எப்படிநம்புவது? போய் வா" என்று சொல்லிவிட்டார். இப்படி ஒரு நிலைமை வந்து விடக்கூடாது என்பதற்கு தான் இந்தக் காலத்தில் பலர் ஒருத்தரிடம் ஒருதடவை கடன் வாங்கி விட்டால் அடுத்த தடவை அவர் முகத்தில் முழிப்பதேயில்லை.


*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# சோபித தேரரின் இறுதிக்கிரியைகள் நேற்று
















மறைந்த வணக்கத்திற்குரிய மாதுளுவாவே சோபித தேரரின் இறுதிக் கிரியைகள் நேற்று இடம்பெற்றன. கோட்டே ஸ்ரீ நாக விகாரையில் வைக்கப்பட்டிருந்த தேரரின் பூதவுடலுக்கு பெரும் திரளான பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர். நேற்று முற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்களே தேரரின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தியிருந்தனர். இதனிடையே தேரரின் பூதவுடலை ஏந்திய பேழை கோட்டே ஸ்ரீநாக விகாரையில் இருந்து ஊர்வலமாக நாடாளுமன்றம் வரை எடுத்துச் செல்லப்பட்டது.

# நல்லாட்சியின் குரல் ஓய்ந்தது...

ஈழ அரசியலில் பௌத்த பிக்குகளின் பங்கும் வேரோடியது. தேரர்களும் அரசியலில் நேரடித் தலையீட்டைக் கொண்டதால் இலங்கை அரசியல் பல்கோணக் களங்களைக் கண்டதென்றால் மிகையாகாது.

அவ்வாறான சூழலில்தான் 1987 ஆம் ஆண்டு பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியும் அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் செய்துகொண்ட இலங்கை-இந்திய உடன்படிக்கைக்கு எதிராக முதன்முதலில் போராட்டங்களை முன்னிறுத்தி நடத்திய தேரர் பின்நாளில் சமூக நீதிக்கான மக்கள் இயக்கத்தின் தலைவராகவும் கோட்டே நாக விகாரையின் விகாராதிபதியாகவும் அறியப்பட்ட மாதுளுவாவே சோபித தேரர் ஆவார். உலகளாவிய ரீதியில் ஒரு தேரராக பௌத்த மத வளர்ச்சியில் பங்காற்றியதுடன் நின்றுவிடாது, இலங்கை மக்களிடையே சமத்துவ சுக வாழ்விற்காகப் பாடுபட்டதுடன் ஊழல் ஆட்சிகளுக்கு எதிராக விமர்சிப்பதன் மூலம் நாட்டில் மிகுந்த பற்று உடையவராயும் இனங்காணப்பட்டார்.

குடும்ப ஆட்சியின் காலப்பகுதியில் சட்டங்களையும் அதிகாரங்களையும் தமக்கு இலகுவாக மாற்றி மனித உரிமை மீறல்களை பொருட்படுத்தி பௌத்தத்திற்குப் புறம்பாகச் செயற்பட்ட ஆட்சியாளர்களை வீட்டிற்கு அனுப்ப வேண்டும் என்று கொதித்தவர்கள், காத்திருந்து காரியம் வென்றதுதான் நல்லாட்சி எனும் ஆட்சி மாற்றம். 2015 ஜனவரி 8 இல் அந்த முடிவை மக்கள் தருவதற்கு உந்து சக்தியாக, முழுமூச்சாக செயற்பட்டவர்களை பிரதானமானவர் சோபித தேரர் என்பதில் மாற்றுக் கருத்துக்கிடமில்லை. பௌத்த நாடு என்ற தோரணையில் சிறுபான்மை இன, மத மக்களுக்கு இழைக்கப்பட்டு வந்த அநீதிகளையும் அவ் அநீதிகளுக்குப் பாராமுக அரசோச்சிய அரசாங்கத்தையும் எதிர்க்க வேண்டியது நல்லறிவு படைத்த ஆத்மார்த்த பற்றாளர்களின் கடமையாதலால் தேரரின் முயற்சி வியற்பிற்குரியதல்ல. இத்தகைய முயற்சிக்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் சார்பில் இரா.சம்பந்தனையும் இணைத்து, பொது வேட்பாளர் தொடர்பில் ஆலோசனை நடத்தியதுதான் கவனிக்க வேண்டிய ஒன்று. காலத்திற்கு காலம், சிறுபான்மை இனங்களுக்கும் குரல் கொடுக்கவல்ல சிங்களத் தலைமைகள் வந்தபோதிலும் ஒட்டுமொத்த நாடென்ற ரீதியில் அனைத்து இன மக்களையும் அவர்களது நலனிலும் அக்கறை கொண்டு நல்லாட்சிப் பயணத்தின் கால்கோளினை வென்றது மட்டுமன்றி, தொடர்ந்தும் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நல்லாட்சிக்கான அரசு நிறைவேற்ற வேண்டும் எனும் கருத்தினைத் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்தமைதான் தேரரின் சிறப்பு.

பழிவாங்கல் நடவடிக்கைகளுக்காக நாட்டின் சட்டதிட்டங்களைப் பயன்படுத்தக் கூடாது என்றும் வாக்குறுதிகளுக்கமைவாக ஊழல் கலாசாரத்திற்கு முடிவு கட்டி, குற்றங்கள் நிரூபிக்கப்பட்டவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற தேர்தலின் பின்னர் நல்லாட்சிக்கான புதிய அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டார். (ஓகஸ்ட் 19) அதுமட்டுமன்றி, இம்முறைத் தேர்தலில் நடந்த ஒரு விடயத்தை உன்னிப்பாக அவதானித்து, எதிர்கால அச்சத்தையும் தெளிவுபடுத்தியிருந்தார். அதாவது வழமையாக தேர்தல் முடிவுகளை அமைதியாக ஏற்கவும் புறக்கணிக்கப்பட்ட தரப்பினர் தமது ஆதரவாளர்களை அமைதி காக்கவும் மக்கள் தீர்ப்பிற்கு மதிப்பளிக்க வேண்டுவதும் வழக்கம். அது இம்முறை நடைபெறவில்லை என்பதனையும் சுட்டிக்காட்டி கவலை தெரிவித்திருந்தமையே இதுவாகும்.

தேரரின் தூரநோக்குச் சிந்தனையில் நல்லாட்சி என்ற பெயரில் புதிய அரசு அமைதியைப் பெற்றாலும் அதனுடைய செயற்பாடுகள் திருப்தியுற்றிருந்த்தா என்பது வினாவிற்குரியது. ஆயினும் தேரர் தொடர்ந்தும் மக்கள் வாக்குறுதியை நிறைவேற்றுங்கள். இல்லையெனில் அரசும் கவிழும் என்பதை உணர்த்தி வந்தார். அது மட்டுமன்றி சிங்கள மக்களைப் போலவே தமிழ் மக்களுக்கும் உரிமைகளை வழங்க வேண்டும் என்று நல்லாட்சியை வலியுறுத்தி வந்தார். ஆனால், தமிழர்களின் பேச்சை எடுத்தவர்கள் எல்லோருமே ஏதோ ஒரு வகையில் அதில் வெற்றியை அனுபவிக்காது போவதென்பது விதி. ஆதலினால்தானோ, இப் பூவுலக வாழ்வை முடித்து விடைபெற்றார் என்று எண்ணத் தோணுகிறது. நல்லாட்சி என்பதை அவர் கேட்டுச் செல்கின்றார்.

நிச்சயமாக நாட் டின் இப்போதைய நிலையில் அவர் அனு பவித்திருக்க மாட்டார். ஆயினும் அவருக்கு இப்புதிய அரசாங்கம் தனது செஞ்சோற்றுக் கடனை நிறைவேற்றுவதற்கு ஒரே வழிதான் உண்டு.

அது தமது வாக்கு றுதிகளை நிறைவேற்றுவதேயன்றி வேறு இல்லை. தேரரின் ஆத்ம சாந்திக்காக தமிழர்களும் பிரார்த்திப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

-தெய்வீகன்-

# உரிமைகளை வென்றெடுக்கும் வரை தொடர்ச்சியாகப் போராடுங்கள்

**தென்னாபிரிக்காவில் நவநீதம்பிள்ளை தெரிவிப்பு**



(கொழும்பு) தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்கள் தமது உரிமைக்காக தொடர்ந்து போராட வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவிலுள்ள இலங்கையில் நீதி, சமாதானத்திற்கு உதவும் தமிழர் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரண்டு நாள் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த 6,7ஆம் திகதிகளில் மேற்படி பயிற்சிப்பட்டறைநடை பெற்றது. வெளி நாடுகளிலுள்ள தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்கள், வடமாகாண சபை உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம், தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன், வடக்கு மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

முன்னாள்ஆணையாளர் நவநீதம்பிள்ளை குறிப் பிட்ட விடயங்கள் தொடர்பாக எம்.கே. சிவாஜி லிங்கம் இலங்கையில் வெளிவரும் ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்திருப்பதாவது,

உரிமைகளைவென்றெடுப்பதற்கு தொடர்ச்சியாக போராடுங்கள். 70 ஆண்டுகளாக சில நாடுகளில் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைக்கு எதிராக இன்று வரை எவ்வாறு தொடர்ச்சியாக போராட்டங்கள் முன் னெடுக்கப்பட்டனஎன்பது பற்றி அறிந்திருக்க வேண்டும்.

அந்த வகையில் உரிமைகளை வென்றெடுக்கும்வரைதொடர்ச்சியாகபோராடவேண்டும் என நவநீதம்பிள்ளை சுட்டிக் காட்டியதாக சிவாஜி லிங்கம்தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவின் ஆபிரிக்கதேசிய காங்கிரஸ் இன் கடந்தகால அனுபவங்களிலிருந்து பெறப்பட்ட படிப்பினைகள் மேற்படி பட்டறையின் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

இந்தஇரண்டு நாட்கள் கருத்தரங்கில் தமிழ்நாட்டிலிருந்தும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.(3)


கொட்டடி

**சித்தி விநாயகர் கோவில் பரிபாலனசபை**

(பெரியபிள்ளையார் கோவில்/சித்தி விநாயகர் என்பன மறுபெயர்கள்)

**வருடாந்த ஆண்டிறுதிப் பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும்-2015**

இடம்:-வசந்த மண்டபம், சித்தி விநாயகர் கோவில்

காலம்:-15.11.2015 ஞாயிற்றுக்கிழமை

நேரம்:-பி.ப 3.30 மணி

அனைத்து அடியவர்களையும் சமுகமளிக்குமாறு வேண்டிக்கொள்கின்றோம்

(சி-2751) தற்காலிக செயலாளர் நிர்வாகம்


## நாட்டில் வீதி விபத்துக்கள் அதிகரிப்பு

# 57 வீதமானவை ஆட்டோக்களினால் 34 வீதமானவை தனியார் பேருந்துகளால்

நாட்டில் இடம்பெறும் வாகன விபத்துக்களில் 57 வீதமான விபத்துக்கள் ஆட்டோக்கள் சம்பந்தப்பட்டுள்ளதாக பொலனறுவை பொது வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரிபாக்ர்ஏ.டிபிபண்டாரதெரிவித்துள்ளார்.

பொலனறுவை பொலிஸாரினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆட்டோ சாரதிகளுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,ஆட்டோக்களைச் செலுத்தும் போது கைத்தொலைபேசியில் உரையாடுதல், அதி வேகமாக வண்டியைச் செலுத்துதல், கவலையீனமாக ஓடுதல், குடிபோதையில் கண்டபடி ஆட்டோவை செலுத்துதல் போன்றவையே விபத்துக்கான பிரதான காரணிகளாக காணப்படுகின்றன.

விபத்தில் சிக்குபவர்களில் அநேகமானோர் 18 வயது தொடக்கம் 20 வயதிற்குட் பட்டவர்களே.

விபத்தில் இரண்டாவது இடத்தில் பங்கு வகிப்பது தனியார் பேருந்துகள். இவை மொத்த விபத்தில் 34 சதவீதத்தை வகிக்கின்றன. வாகன விபத்துக்களில் சம்பந்தப்பட்டவர்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் சம்பந்தப்பட்வர்கள் அநேகரிடம்தகுதியானவாகன சாரதி அனுமதிப்பத்திரம் இருப்பதில்லை. ஆட்டோ உற்பத்தியாளர்கள் ஆட்டோவின் கைபிடியை 60 பாகை வரையே திருப்பக் கூடிய வகையில் தடுப்பு செய்திருக்கிறார்கள்.

ஆனால்ஆட்டோ சாரதிகள் சந்தேகப்படாத வகையில் அதனை உடைத்து 60 பாகைக்கும் மேலாக திருப்பக்கூடிய வகையில் மாற்றியமைக்கிறார்கள். விபத்துக்களால் தமது உயிருக்கும், அதில் பயணிக்கும் பயணி களது உயிருக்கும் பாதசாரிகளின் உயிருக்கும் ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்கிறார்கள் என்று தெரிவித்தார். அங்கு கருத்துத் தெரிவித்த பொலனறுவை திஸ்ஸாவ தேரர்ஆட்டோ சாரதிகள் தமது நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தி ஒழுக்கமுடன் செயற்பட வேண்டும் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார். (3)


**கண்ணீர் அஞ்சலி**

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 18 | 07 |
| 02 | 11 |
| 1949 | 2015 |



**அமரர் தம்பிராசா கிருபானந்தராசா**


"நவஜீவன" முன்னாள் நிர்வாகியும் சமாதான நீதவானும் எமது கல்லூரியின் முன்னைநாள் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரும் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் அவர்களின் சகோதரரான அமரர் **தம்பிராசா கிருபானந்தராசா** அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த அனுதாபத்தை அன்னாரது குடும்பத்திற்கு தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்

**பாடசாலைச் சமூகம், கிளி/முருகானந்தா கல்லூரி**

(சி-2752)


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 544

கலைச்செல்வன்




தர்மா




ராகுலன்




சுஜாதா




தேவிகன்




ராகுலன் பாலா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்திற்கு விரைவில் தீர்வு

## அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு

தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்திற்கு விரைவில் நிரந்தரத் தீர்வு கிடைக்குமென தெரிவித்துள்ள அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தார்.

சிறைச்சாலைகள் விவகார அமைச்சராக நேற்றுமுன்தினம் பதவியேற்ற பின்னர் கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதாக கூறப்படுகின்றது. அவை தொடர்பில் விசேட கவனமெடுக்கப்படவுள்ளன.

நாடாளவிய ரீதியில் உள்ள சிறைச்சாலைகளில் பல்வேறு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதுதொடர்பில் எனது தலைமையில் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்டோருடன் விசேட கலந்துரையாடல்களை மேற்கொள்ளவதற்கு திட்டமிட்டுள்ளேன்.

மேலும் சிறைக்கைதிகளும் மனிதர்களே என்பதை நெஞ்சில் நிறுத்தி அவர்களின் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளித்து அவர்களின் தேவைப்பாடுகள் தொடர்பிலும் அதிகூடிய கவனமெடுக்கவுள்ளேன்.

வெலிக்கடைச் சிறைச்சாலை உட்பட தலைநகரினுள் காணப்படும் சிறைச்சாலைகளை இடமாற்றுவது குறித்து பல்வேறு யோசனைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. அவை குறித்து உரிய ஆராய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதனடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

தற்போது விடுதலையை வலியுறுத்தி உண்ணாவிரதமிருக்கும் கைதிகளை நான் நேரில் சென்று பார்வையிட்டிருந்தேன். அவர்களின விடுதலை தொடர்பாக நான் ஜனாதிபதியிடத்திலும், பிரதமரிடத்திலும் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தேன்.

அதனடிப்படையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார். குறிப்பாக அவர்களுக்கு பிணை வழங்குவதற்கான செயற்பாடுகளுக்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில் அவர்களுக்கு பிணை வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10

### வெளிநாட்டு நாணய மாற்று விகிதம் 12.11.2015
### மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 139.77 | 144.10 |
| பவுண்ட் | பிரிட்டன் | 212.06 | 220.28 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 149.50 | 156.03 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 138.33 | 144.62 |
| டொலர் | கனடா | 104.84 | 109.54 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 98.83 | 103.83 |
| டொலர் | சிங்கப்பூர் | 98.18 | 102.29 |
| யென் | ஜப்பான் | 1.1308 | 1.1795 |

#### மத்திய கிழக்கு நாடு


| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 376.7493 |
| குவைத் | டினார் | 467.1022 |
| ஓமான் | ரியால் | 368.6420 |
| கட்டார் | ரியால் | 38.9942 |
| சவுதி அரேபியா | ரியால் | 37.8462 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 38.6433 |

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | நெல்லியடி ரூபா | சுன்னாகம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா | மருதனார்மடம் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 160 | 200 | 130 | 120 | 200 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 120 | 130 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 450 | 450 | 500 | 450 | 400 | 400 |
| தக்காளி | 150 | 150 | 150 | 130 | 200 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 30 | 50 | 50 | 40 | 40 |
| கோவா | 120 | 160 | 160 | 140 | 200 | 160 |
| கரட் | 100 | 140 | 80-120 | 120 | 160 | 120 |
| பூசணி | 60 | 40 | 60 | 40 | 60 | 50 |
| புடோல் | 140 | 80 | 120 | 80 | 100 | 120 |
| வாழைக்காய் | 80 | 50 | 50 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 160 | 120-160 | 120 | 160 | 200 | 140 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 160 | 140 | 150 | 150 |
| பாகற்காய் | 300 | 300 | 200 | 250 | 300 | 300 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 120 | 100 | 120 | 140 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 80 | 90 | 120 | 70 |
| பயற்றங்காய் | 200 | 200 | 240 | 280 | 240 | 400 |
| லீக்ஸ் | 80 | 100 | 120 | 100 | 160 | 120 |
| பீற்றூட் | 60 | 40 | 50 | 50 | 100 | 50 |
| கறிமிளகாய் | 250 | 200 | 300 | 200 | 280 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 120 | 200 | 160 | 200 | 180 |
| போஞ்சி | 300 | 250 | 200 | 250 | 280 | 200 |
| கத்தரிதம்புள்ள | 150 | 90 | — | 70 | 100 | — |
| கீரை - 1 பிடி | 60 | 40 | 50 | 30 | 40 | 40 |
| தேசிக்காய் | 400 | 300-400 | 400 | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 25-60 | 50 | 40 | 40-50 | 50 |
| இராசவள்ளி | 250 | — | — | — | — | — |
| வெங்காயப்பூ | 250 | — | 200 | — | — | — |
| முள்ளங்கி | 60 | — | 80 | 80 | 120 | 60 |
| பொன்னாங்காணி | 50 | — | 30 | 30 | 20 | 40 |
| வல்லாரை | 15 | — | 10 | 20 | 20 | 30 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## யாழ்.உலகத் தமிழ் மாநாட்டில் பொலிஸ் தாக்குதல் 34



உலகத் தமிழ் நாட்டின்போது உயிர் இழந்தவர்களுக்காக அமைக்கப்பட்ட நினைவுச் சின்னம்

...அமெரிக்கா, இலங்கை, இங்கிலாந்து, சுவீடன், இத்தாலி, பிரான்ஸ், ஹாலந்து, மேற்கு ஜேர்மனி, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளைச் சேர்ந்த அறிஞர்களும், தமிழ் நாட்டைச் சேர்ந்த தமிழ் அறிஞர்களும் மாநாட்டில் தமிழிலும் ஆங்கிலத்திலும். ஆய்வுக் கட்டுரைகளைப் படித்தனர்.

**தமிழின் பெருமைகளையும் தமிழர்களின் மாண்பையும் விளக்கும் வகையில் அலங்கார வண்டிகள் அணிவகுப்பும், பண்பாட்டுக் கண்காட்சியும் நடைபெற்றன.**

**புகுந்தது பொலிஸ்**

மாநாட்டில் பங்கேற்ற வெளிநாட்டு அறிஞர்களுக்கு வழியனுப்பு விழா 10 ஆம் திகதி யாழ்ப்பாணம் திறந்த வெளி அரங்கில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதற்காக அரங்கு பதிவு செய்யப்பட்டிருந்தபோதிலும் திறந்தவெளி மேடை திறந்திருக்க மைதானத்தின் வாசல் கதவுகள் பூட்டப்பட்டிருந்தன! மாநகர மேயரிடம் கடிதம் வாங்கி வந்தால் மட்டுமே அவை திறக்கப்படும் என்று அரங்கக் காப்பாளர் அறிவித்தார்.


மேயர் ஆல்பிரட் துரையப்பாவைக் கண்டுபிடிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. எங்கு தேடியும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இதனால் வீரசிங்கம் மண்டபம் முன்னால் அவசரமாக ஒரு மேடை அமைக்கப்பட்டது. 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கூடியிருந்தார்கள். பேராசிரியர் சி.நெய்னார் முகம்மது உரையாற்றிக்கொண்டிருந்தார்.

இரவு 8.30 மணிக்குப் பொலிஸ் உதவி சூப்பிரண்டு சந்திரசேகரா, பொலிஸ் பட்டாளத்தோடு ஜீப்களில் வந்து இறங்கினார். பொலிஸார் ஜீப்களில் இருந்து இறங்கி அணிவகுத்து நின்றனர். ஜீப்களை முன்னோக்கி செலுத்துமாறு சந்திரசேகரா உத்தரவிட்டார். அதற்கும் பின்னால் பொலிஸார் நடந்து சென்றனர். கலைந்து செல்லுமாறு ஒலி பெருக்கி மூலம் சந்திரசேகரா மக்களுக்கு உத்தரவிட்டார்.

மாநாட்டுத் தொண்டர்கள் அவரிடம் சென்று கூட்டத்தில் குழப்பம் செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொண்டனர்.

**அதைச் சிறிதும் பொருட்படுத்தாமல் பொலிஸார் தாக்குதலைத் தொடுத்தனர். திரண்டிருந்த திரளான மக்கள் அங்கும் இங்கும் சிதறி ஓடினார்கள். நெரிசலில் சிக்கிப்** பலர் காயம் அடைந்தனர். அவர்களைப் பொலிஸார் ஓட ஓட விரட்டியடித்தனர். அருகே இருந்த சேறு நிறைந்த குளத்தில் பலர் விழுந்தனர். அவர்களை யாழ்ப்பாண இளைஞர்கள் காப்பாற்றிக் கரை சேர்த்தனர்.


மாநாட்டுக்கு ஏற்பாடு செய்த தனிநாயகம் அடிகளார்

**துப்பாக்கிச் சூடு**

இந்த நிலையில் பொலிஸார் கண்ணீப் புகை குண்டுகளைக் கண்மூடித்தனமாக வீசினார்கள். அதில் ஒரு குண்டு மேடைக்கு அருகே விழுந்தது. மாநாட்டுத் தலைவர் பேராசிரியர் வைத்தியநாதன் அங்கேயே மயக்கம் அடைந்தார்.

துப்பாக்கியால் வானத்தை நோக்கி பொலிஸார் சுட்டனர். அதில் இருந்து வெளியேறிய குண்டு மினசாரக் கம்பியில் பட்டு கம்பி அறுந்து விழுந்தது. இதனால் மின்சாரம் தாக்கி 7 பேர் சம்பவ இடத்திலேயே பலியானார்கள். நெரிசலில் சிக்கி 2 பேர் உயிர் இழந்தனர்.

**எங்கள் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கு முதல் மரியாதை தராமல் நடக்கும் நிகழ்ச்சி, இப்படித்தான் முடியும் என்று குமாரசூரியரும் ஆல்பிரட் துரையப்பாவும் உள்ளூர மகிழ்ந்தனர். இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவிக்க சிறிமாவோ பண்டாரநாயக்க மறுத்துவிட்டார். மாநாடு நடந்தபோது மக்கள்தான் பொலிஸாரைத் தாக்கியதாக அவர் குற்றஞ்சாட்டினார்.**

மாநாட்டில் குழப்பம் விளைவித்த பொலிஸ் அதிகாரி சந்திரசேகராவுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டது. அரசாங்கத்தில் இடம்பெற்றிருந்த ஒரே தமிழ் அமைச்சர் குமாரசூரியரும் இரங்கம் தெரிவிக்கும் அடிப்படை நாகரிகம் அற்றவராக இருந்தார்.

**விசாரணைக் கமிஷன்**

மாநாட்டுக் கலவரம் தொடர்பாக உண்மை நிலையைக் கண்டறிய அரசு சார்பற்ற அமைப்பான யாழ்ப்பாண பிரஜைகள் குழு ஒரு விசாரணைக் கமிஷனை அமைத்தது. இதன் தலைவராக ஓய்வுபெற்ற சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஓ.எல்.டி.கிரெஸ்டர் நியமிக்கப்பட்டார்.

இந்த விசாரணைக்குழு தனது அறிக்கையை 1974 ஆம் ஆண்டு பெப்ரவரி 18 ஆம் திகதி அளித்தது. அதில் எந்தவித ஆத்திரமூட்டலும் இன்றி பொலிஸார் கண்ணீர்ப்புகை பிரயோகம் செய்தனர். தேவையில்லாமல் மக்கள் மீது தாக்குதல் நடத்தியதற்குப் பொலிஸாரே பொறுப்பு என்று கூறப்பட்டிருந்தது.

இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இதன் முடிவை ஏற்க அரசு மறுத்துவிட்டது.

(தொடரும்)

# கல்வி பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை-2015
# மாதிரி வினாத்தாள்- மேல்மாகாணம்

பாடம்:-சைவநெறி

## பகுதி I

நேரம்:-1 மணித்தியாலம்

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01.“விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாற்....
1. முருகன் 2.விஷ்ணு
3.விநாயகர் 4.சிவன்

02.அன்னதானக் கந்தன் எனப்படுபவர்
1.கதிர்காமக்கந்தன் 2.செல்வச்சந்நிதி முருகன்
3.மாவிட்டபுரக்கந்தன் 4.நல்லூர்க்கந்தன்

03.சிங்கள மொழியில் எழுந்த பௌத்த இலக்கியங்களில் குயில் விடு தூது எனப்படுவது.
1.ஸஹின சந்தேஸ 2.மதுர சந்தேஸ
3.கோகில சந்தேஸ 4.பரவி சந்தேஸ

04.மறைசையந்தாதி எனும் சைவத்தமிழ் பிரபந்தம் எழுப்பப்பட்ட காலம்.
1.ஐரோப்பியர் காலம் 2.ஒல்லாந்தர் காலம்
3.ஆங்கிலேயர் காலம் 4.போர்த்துக்கேயர் காலம்

05.இராம கிருஷ்ணமிஷன் எனும் நிறுவனத்தைத் ஸ்தாபித்தவர்
1.இராம கிருஷ்ணர் 2.விபுலானந்தர்
3.விவேகானந்தர் 4.ஆறுமுக நாவலர்

06.இந்துக்களும் பௌத்தர்களும் வழிபடும் விநாயகர் ஆலயம்
1.மாமாங்கப் பிள்ளையார் 2.கட்டுக்கலை செல்வவிநாயகர்
3.வீரகத்திப்பிள்ளையார் 4.மருதடி விநாயகர்

07.கண்ணகி வழிபாட்டை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியவர்
1.விஜயபாகு மன்னன் 2.பராக்கிரமபாகு மன்னன்
3.கஜபாகு மன்னன் 4.கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்

08.ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் யாழ்ப்பாண சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவிய ஆண்டு
1.1864 2.1872
3.1848 4.1894

09.மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழைப் பாடியவர்
1.அபிராமிப்பட்டர் 2.குமரகுருபரர்
3.செந்திநாத ஐயர் 4.தாயுமானவர்

10.ஈழத்துச் சித்தர் வரிசை உள்ள தொகுதி
1.பாம்பாட்டிச் சித்தர்-சட்டைமுனி
2.நவநாத சித்தர்-குதம்பைச்சித்தர்
3.அகத்தியர்-செல்லப்பா சுவாமிகள்
4.கடையிற் சுவாமிகள்-சித்தானைக்குட்டி சுவாமி

11.தெட்சண கைலாய என அழைக்கப்படும் ஆலயம்
1.திருக்கோணேஸ்வரம் 2.முன்னேஸ்வரம்
3.திருக்கேதீஸ்வரம் 4.நகுலேஸ்வரம்

12.பலபிறவிகளில் செய்து பயன் இன்னும் அனுபவிக்கப்படாது சேர்ந்திருக்கும் வினைத்தொகுதி
1.ஆகாமியம் 2.சஞ்சிதம்
3.பிராரத்துவம் 4.கன்மம்

13.விரத மகிமை கூறும் இலக்கியம்
1.திருக்கரசைப் புராணம் 2.சிவராத்திரி புராணம்
3.காமன்தகனம் 4.காத்தவராயன் கூத்து

14.சைவபரிபாலன சபை ஸ்தாபிக்கப்பட்ட ஆண்டு
1.1818 2.1828
3.1850 4.1888

15.மும்மல காரியம் எடுத்துரைக்கும் பதிகம்
1.எடுத்தவன் தருக்கை 2.நமசிவாய வாழ்க
3.அப்பணி 4.திருக்கோயிலில்லாத

16.சூரியனும் சந்திரனும் ஒரே நேர்கோட்டில் பூமிக்கு நேராக வரும் நாளன்று அனுஷ்டிக்கப்படும் விரதம்
1.சித்திரா பௌர்ணமி 2.தைப்பூசம்
3.மகாசிவராத்திரி 4.ஆடி அமாவாசை

17.சைவசித்தாந்தம் உலகப்படைப்புக்கு நிமித்த காரணமாகக் குறிப்பிடுவது
1.பசு 2.பாசம்
3.பதி 4.தேவர்

18.குரு தன் சீடனைத் தொட்டு அளிக்கும் தீட்சை
1.நயன தீட்சை 2.பரிச தீட்சை
3.வாசக தீட்சை 4.ஔத்திரி தீட்சை

19.சைவ நாற்பாதங்களில் கனி எனப்படுவது
1.சரியை 2.கிரியை
3.யோகம் 4.ஞானம்

20.ஈழத்தில் மூத்த காவியம் எனப்படும் நூல்
1.சிலப்பதிகாரம் 2.யாழ்ப்பாண வைபவமாலை
3.கண்ணகி வழக்குரை 4.யாழ்நூல்

21.அடங்கன் முறையில் இடம்பெறும் திருமுறைகளைப் பாடியோர்
1.தேவார முதலிகள் 2.சமயகுரவர்
3.சந்தான குரவர் 4.சித்தர்கள்

22.பெற்றான் சாம்பனுக்கு தீட்சை கொடுத்து முத்தியளித்தவர்
1.மெய் கண்டர் 2.உமாபதி சிவாச்சாரியார்
3.அருணந்தி சிவாச்சாரியார் 4.மறைஞான சம்பந்தர்

23.மெய்கண்ட சாத்திர நூல்களின் எண்ணிக்கை
1.12 2.18
3.14 4.28

24.முக்குணங்கள் எனப்படுபவை
1.மனம், வாக்கு, காயம் 2.பதி, பசு, பாசம்
3.ஆணவம், கன்மம், மாயை 4.சாத்வீகம், தாமஸம், இராக்ஷதம்

25.சூரியன் மேட இராசியில் புகும்வேளையில் கொண்டாடப்படும் பண்டிகை
1.தைப்பொங்கல் 2.தீபாவளி
3.ஆடிப்பிறப்பு 4.புதுவருடப்பிறப்பு

26.வேதசாரம் எனப்படுவது
1.உபநிடதங்கள் 2.தேவாரங்கள்
3.தோத்திரங்கள் 4.பிரபந்தங்கள்

27.விசாரசருமர் என இளமைப் பெயர் கொண்டவர்
1.கண்ணப்பன் 2.சாக்கிய நாயனார்
3.வண்ணக்கர் 4.சண்டேஸ்வரர்

28.மாறி நின்று.... எனும் பதிகம் அமையும் திருமுறை ஒழுங்கு
1.3 2.8
3.9 4.12

29.சைவ வித்தியா விருத்திச் சங்கத்தை தாபித்தவர்
1.சேர்.பொன்.இராமநாதன் 2.ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
3.இந்துபோர்ட்.சு.இராசரத்தினம் 4.பெரியாழ்வார்

30.பெருமாள் திருமொழி பாடிய ஆழ்வார்
1.குலசேகர ஆழ்வார் 2.நம்மாழ்வார்
3.மதுரக்கவியாழ்வார் 4.பெரியாழ்வார்

31.கண்டிகை எனப்படுவது
1.விபூதி 2.சந்தனம்
3.உருத்திராக்கம் 4.குங்குமம்

32.தேர்த்திருவிழா குறிப்பது
1.படைத்தல் தொழில் 2.காத்தல் தொழில்
3.அழித்தல் தொழில் 4.மறைத்தல் தொழில்

33.பாலை நிலத்தை நெய்தல் நிலமாக்கியவர்
1.நாவுக்கரசர் 2.சம்பந்தர்
3.சுந்தரர் 4.மாணிக்கவாசகர்

34.யாழ்ப்பாணத்தில் ஆண்கள் பரமேஸ்வரா கல்லூரியைத் தாபித்தவர்
1.விபுலானந்தர் 2.ஆறுமுகநாவலர்
3.சிவபாத சுந்தரனார் 4.சேர்.பொன்.இராமநாதன்

35.அசத்து எனப்படுவது
1.பதி 2.பசு
3.பாசம் 4.சத்து

36.திருவருட்பயனில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை
1.05 2.10
3.15 4.20

37.குருவழிபாட்டால் முத்தியடைந்தவர்
1.இயற்பகை நாயனார் 2.பூசலார் நாயனார்
3.அப்பூதியடிகள் 4.சாக்கிய நாயனார்

38.நாட்டார் நிகழ் கலைகளுள் இடம்பெறாதது
1.பரத நாட்டியம் 2.கரகாட்டம்
3.வசந்தன் கூத்து 4.காவடியாட்டம்

39.ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வர ஆலயத்தின் தலவிருட்சம்
1.கொக்கட்டி மரம் 2.வன்னிமரம்
3.கொன்றை மரம் 4.கல்லால மரம்

40.சமயத்தையும் சமுதாயத்தையும் நிலை நிறுத்த சைவம் கூறும் கூட்டுச் செயற்பாடுகள் இடம் பெறாதது.
1.சமைத்தல் 2.கூட்டுப்பிரார்த்தனை
3.தலயாத்திரை 4.சிரமதானம்

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

1288

## வேலு வீட்டில் தங்கக்கட்டி!



மூன்று முறை கோயிலைச் சுற்றியதுமே, "அம்மா, எனக்கு கால் வலிக்குது. மரத்தடியில உட்கார்ந்திருக்கேன். நீ சுத்தி முடிச்சிட்டு வா" என்றபடி அருகிலருந்த வில்வ மரத்தடியில் உட்கார்ந்தான் வேலு.

சாயங்காலக் காற்று இதமாக இருந்தது. பழுத்து உதிர்ந்த இலை ஒன்றை எடுக்கக் குனிந்தபோது, "க்ரிச் க்ரிச்' என்ற சத்தம்.

திரும்பிப் பார்த்தான்.

அங்கே, சின்னக் கைக்குட்டையை முறுக்கிப் போட்டது போல காணப்பட்டது அந்த அணிறபிள்ளை.

ஆவலோடு அருகில் சென்றான்.

"அம்மா அணிலையும் இன்னும் 2 பிள்ளைகளையும் பூனை கவ்விட்டுப் போயிட்டுது. பாவம் இது, காலையிலருந்து கத்திட்டே இருக்குது" கிணற்றடியில் கோயில் பாத்திரங்களைத் தேய்த்துக் கொண்டிருந்த ஒரு பெரியவர் சொன்னார்.

வேலு, அந்த அணிற்பிளளையை உள்ளங்கையில் ஏந்திக்கொண்டான்.

மிளகு போன்ற அதன் கண்கள், தாள் போல மடிந்த காதுகள், நீண்ட வால், சிப்பி போல குவிந்த உதடுகள்.

அருகில் வந்த அம்மா, "ஏதுடா இது?" என்று கேட்டார்.

அணிற்பிள்ளையின் கதையைச் சொன்ன வேலு, பாவம்மா, இதை நாமே வளர்க்கலாம் என்றான்.

அவனை முறைத்துப் பார்த்த அம்மா, இந்த எடுத்துப் போய் எங்கே வெச்சுக்கிறது? என்று கேட்டார்.

தோட்டத்துல கனகாம்பரச் செடிக்குப் பக்கத்துல ஒரு சின்னப் பெட்டி வெச்சு, அதுக்குள்ள வளர்க்கலாம - ஒரு நொடிகூட யோசிக்காமல் சொன்னான் வேலு.

அம்மா புன்னகையுடன் சரி, கவனமாப் பார்த்துக்க என்றார். வீட்டுக்குச் சென்றதுமே, அதன் சத்தம் அதிகமானது.

பசிடா, கொஞ்சம் பால் ஊத்து என்றார் அம்மா. ஒரு சின்னத் தட்டில் பாலை ஊற்றி, அதன் முன்னால வைத்தான்.

அணிற்பிள்ளைக்கு பாலை அருந்தத் தெரியவில்லை. வேலு, தன் பையில் இருந்த இங்க் ஃபில்லரை எடுத்து, நன்றாகக் கழுவி விட்டு, அதன் மூலம் பாலை அணிற் பிள்ளையின் வாய்க்குள் புகட்டினான்..

பாலின் சொட்டுகள் அதன் வாயில் இறங்கியதும் கழுத்தை இன்னும் வேகமாக நீட்டியது.

ஐந்தாறு நிமிடங்களுக்குள் குடித்து முடித்த திருப்தியுடன் உறங்கத் தொடங்கியது. அதன் உடலை மெதுவாக வருடிக கொடுத்தான் வேலு.

ஒரு பிஞ்சு அவரைக் காயைப் போல அதன் வால் நுனி அழகாக இருந்தது.

அதன் பிறகான நாட் களில், பள்ளி நேரம் தவிர மற்ற நேரத்தை அணிற்பிள்ளை யோடு செலவிட்டான்வேலு.

அதற்கு, "தங்கக்கட்டி" என்று பெயர்சூட்டினான்.

"தங்கக்கட்டி" என்று ராகத்தோடு அவன் அழைக்கும் குரலைக் கேட்டதுமே, அந்த அணிற பிள்ளை ஓடிவரும்.

அவன்பாதத்தை வருடும். தனக்குத் தரப்படும் பால், போர்ன் விட்டா, சூப் எல்லாவற்றிலும் தங்ககட்டிக்கும் ஒரு பங்கைக் கொடு ப்பான் வேலு.

வீட்டில் அணிற்பிள்ளை வளர்க்கும் செய்தியைப் பள்ளியில் நண்பர்களுக்குச் சொல்லி, ஒவ் வொரு நாளும் இரண்டு, மூன்று நண்பர்களை வீட்டுக்கு அழை து வருவான்.

ஒரு மாதத்திலேயே தங்கக்கட்டி செழிப்பாக வளர்ந்துவிட்டது.

உடலில் தசை வைத்து, மினு மினுப்பாக இருந்தது.

ஒரு தோகை போல அதன் வால் காணப்பட்டது.

அந்த வாலை அடிக்கடி சுழற்றிச் சுழற்றி உதறியது.



கண்ணிமைக்கும் நேரத்தில் ஒரு விசிறி விரிந்து மடங்குவதுபோல இருந்தது.

பள்ளியிலருந்து திரும்பியதும் பெட்டி பக்கம் ஓடுவான் வேலு.

பக்கத்தில் இருக்கும் செடிகள், மரங்கள், கொடிகள், புதர்கள் எல்லா இடங்களுக்கும் அணில் ஓடி ஓடித் திரும்பி வரும்.

பள்ளிக்கூட வாசலில் விற்கும் நாவல் பழங்களை வாங்கி வருவான், தன் உள்ளங்கையில் பழத்தை வைத்து, அணில் முன் நீட்டுவான்.

ஒரு வைரத்தை எடுப்பதுபோல அந்தப் பழத்தை எடுத்து, ரசனை யோடு கொரித்துத் தின்னும்



ஒருநாள் வேலுவின் அம்மா, நான் கொடுத்தா தின்னுமாடா உன் அணில்? என்றபடி அவன் கையிலருந்த பழத்தை வாங்கி, தன் கையில் வைத்து நீட்டினார்.

ஒரு கணம் தயங்கி, அச்சத்தோடு விலகி நின்று, பிறகு நெருங்கிவந்து எடுத்துக்கொண்டது.

உருண்டையான கண்களை உருட்டி உருட்டிப் பார்க்க, அம்மா சிரித்தாள். "நீயும குழந்தையா இருக்கும் போது, இப்படித் தான் பார்ப்பே" என்றார். (தொடரும்)

---

11.2015 **13**

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



- 1002 - இங்கிலாந்தில் வசிக்கும் அனைத்து டேன் பழங்குடிகளையும் கொல்லும்படி ஆங்கிலேய மன்னன் எத்தல்ரெட் உத்தரவிட்டான் (இது சென்பிறைஸ் நாள் படுகொலைகள் என அழைக்கப்பட்டது).
- 1795 - கப்டன் புவுசர் என்பவனின் தலைமையில் பிரித்தானியப் படையினர் இலங்கையின் கற்பிட்டி பிரதேசத்தை ஒல்லாந்தரிடமிருந்து கைப்பற்றினர்.
- 1851 - வோஷிங்டனின் சியாட்டில் நகரில் முதல் ஐரோப்பியக் குடியேற்றக்காரர்களான, ஆர்தர் ஏ. டென்னி என்பவரும் அவரது குழுவினரும் வந்திறங்கினர்.
- 1887 - மத்திய லண்டன் பகுதியில் அயர்லாந்து விடுதலைப் போராட்ட ஆதரவாளர்களுக்கும் காவற்துறையினருக்கும் இடையில் மோதல் வெடித்தது.
- 1887 - நவம்பர் 11 இல் சிக்காகோவில் தூக்கிலிடப்பட்ட நான்கு தொழிலாளர் தலைவர்களின் இறுதி ஊர்வலத்தில் சுமார் 5,000 பேர் கலந்து கொண்டனர்.
- 1918 - ஒட்டோமான் பேரரசின் தலைநகர் கொன்ஸ்டண்டீனப்போல் நகரை கூட்டுப் படைகள் கைப்பற்றினர்.
- 1950 - வெனிசுவேலாவின் அதிபர் ஜெனரல் கார்லொஸ் டெல்காடோ சால்போட் படுகொலை செய்யப்பட்டார்.
- 1957 - கோர்டன் கூல்ட் என்பவரால் லேசர் கண்டு பிடிக்கப்பட்டது.
- 1965 - அமெரிக்காவின் யார்மூத் காசில் என்ற பயணிகள் கப்பல் பகாமசில் மூழ்கியதில் 90 பேர் கொல்லப்பட்டானர்.
- 1970 - போலா சூறாவளி: கிழக்குப் பாகிஸ்தானில் இடம்பெற்ற மிகப் பெரும் சூறாவளியில் 500,000 பேர் வரையில் உயிரிழந்தனர். இது 20 ஆம் நூற்றாண்டின் மிகப் பெரும் இயற்கை அழிவு எனக் கருதப்படுகிறது).
- 1971 - ஐக்கிய அமெரிக்காவின் மரைனர் 9 விண்கப்பல் செவ்வாய்க் கோளை சுற்றி வந்தது. இதுவே பூமியை விட வேறொரு கோளைச் சுற்றிவந்த முதலாவது விண்கப்பலாகும்.
- 1985 - கொலம்பியாவில் நெவாடோ டெல் ரூஸ் என்ற எரிமலை வெடித்ததில் ஏற்பட்ட மண்சரிவினால் ஆர்மேரோ நகரம் அழிந்தது. 23,000 பேர் கொல்லபட்டனர்.
- 1989 - இலங்கையின் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் ரோகண விஜேவீர இராணுவத்தினரால் முதல் நாள் கைது செய்யப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1990 - உலக வலைப் பின்னல் (WWW) ஆரம்பிக்கப்பட்டது.
- 1993 - யாழ்ப்பாணம் புனித ஜேம்ஸ் தேவாலயத்தின் மீது இலங்கை விமானங்கள் நடத்திய குண்டுத்தாக்குதலில் வணக்கத்தில் ஈடுபட்டிருந்த 9 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர்.
- 1993 - தவளை நடவடிக்கை: யாழ்ப்பாணம், பூநகரி மற்றும் நாகதேவன்துறை இராணுவ, கடற்படைக் கூட்டுத்தளங்களை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்து பல தாங்கிகளையும் விசைப்படகுகளையும் கைப்பற்றினர். மொத்தம் 4 நாட்கள் இடம்பெற்ற இத்தாக்குதலில் 469 புலிகள் இறந்தனர்.
- 1994 - ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைய சுவீடன் மக்கள் முடிவு செய்தனர்.
- 1995 - சவுதி அரேபியாவில் ரியாத் நகரில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் ஐந்து அமெரிக்கர்களும் இரண்டு இந்தியர்களும் உயிரிழுந்தனர்.

### பிறப்புக்கள்

- 354 - ஹிப்போவின் அகஸ்டீன், மெய்யியலாளர், இறையியலாளர் (இ. 430)
- 1934 - கமால் கமலேஸ்வரன், மேற்கத்திய இசைக் கலைஞர்
- 1935 - பி. சுசீலா, தென்னிந்தியத் திரைப்படப் பின்னணிப் பாடகர்
- 1969 - அயான் கேர்சி அலி, சோமாலியப் பெண்ணியவாதி

### இறப்புகள்

- 1989 - ரோகண விஜேவீர, இலங்கையின் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் (பி. 1943)
- 2002 - கணபதி கணேசன், மலேசிய இதழாசிரியர் (பி. 1955)

தனக்குத் தனக்கு என்றால் சுளகு படக்குப் படக்கு எனுமாம்
– தமிழ் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது ஜனாதிபதியின் தார்மீகக் கடமை

நீண்டகாலமாக எங்கள் பிள்ளைகள் சிறைகளில் வாடுவது குறித்து இதுவரை யாரும் கவனம் செலுத்தாத நிலைமையே இருந்து வந்துள்ளது.

தங்களின் விடுதலைக்காக தாங்களே போராட வேண்டும் என்ற துணிவோடு, சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலையை வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர். இதையடுத்து தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை பற்றி சகலரும் சிந்திக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இருந்தும் கொழும்புத் தமிழ் அரசியல் தலைமையின் நேர்மையற்ற போக்குகள் காரணமாகவே தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை என்பது இன்னமும் சாத்தியமாகவில்லை.

எதிர்க்கட்சித் தலைமையைப் பெற்றுக் கொள்வதற்காக கடும் முயற்சி செய்தவர்கள் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையில் அத்தகையதொரு முயற்சியை எடுத்திருந்தால், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை சாத்தியமாகியிருக்கும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையையும் முன்வைத்திருந்தால், மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியான கையோடு தமிழ் அரசியல் கைதிகளும் விடுதலை பெற்றிருப்பர். ஆனால் கைதிகளின் விடுதலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமைக்கு கிஞ்சித்தும் விருப்பமில்லை.

இதனால் கைதிகளின் விடுதலை பற்றி அவர்கள் எதுவும் கதைக்கவில்லை. மகிந்தவின் ஆட்சியில் சிறையில் அடைக்கப்பட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவுக்கு; மைத்திரி ஜனாதிபதியானதும் பீல்ட் மார்சல் என்ற உயர் கௌரவப் பட்டம் வழங்கப்பட்டது.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் சிறையில் அடைக்கப்பட்டு எம்.பி பதவியையும் இழந்திருந்த முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு பீல்ட் மார்சல் பட்டத்தை ஜனாதிபதி மைத்திரி வழங்கியபோது,

ஐயா! எங்கள் தமிழ் அரசியல் கைதிகளுக்கும் பொது மன்னிப்பு வழங்கி அவர்களை விடுவியுங்கள் என்று தமிழ் அரசியல் தலைமை கேட்டிருந்தால் நிச்சயமாக தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை பெற்றிருப்பர்.

சரியான காலநேரத்தை தவறவிட்டு தாமும் பதவியைப் பெற்ற பின்னர், தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குங்கள் என்றால் அதற்குச் சாட்டுதல்கள் சொல்லவே செய்வர்.

என்ன செய்வது! முற்று முழுதாக சுயநல நோக்குடைய கொழும்புத் தமிழ் அரசியல் தலைமையின் போக்கால் எங்கள் பிள்ளைகள் விடிவின்றி சிறைகளில் வாடுகின்றனர்.

கைதிகளின் விடுதலை பற்றி பேச வேண்டிய நேரத்தில் பதவி பெற்றவர்கள் நாட்டிலேயே இல்லை. சிறைகளில் வாடுகின்ற தமிழ் அரசியல் கைதிகளில் தமது பிள்ளைகளும் இருந்திருந்தால் இவர்கள் வெளிநாட்டுக்குச் செல்வார்களா என்ன?

ஆக, வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரனும் அவரின் நேர்மைக்கு ஆதரவு கொடுக்கின்ற தமிழ் அரசியல்வாதிகளுமே இன்று கைதிகளின் விடுதலை தொடர்பில் கடும் பிரயத்தனம் எடுக்கின்றனர்.

எது எப்படியாயினும் நீண்டகாலமாக சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவருக்கும் விடுதலை வழங்கப்பட வேண்டும். இதனை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செய்வது அவரின் தார்மீகக் கடமை.

கைதிகளின் விடுதலையை தாமதிப்பதென்பது நல்லாட்சியிலும் தமிழர்களுக்கு கேடுதான் என்பதாக நிலைமை முடிந்துவிடும்.

# பாடசாலை நேரத்தில் ஆசிரியர்கள் தமது கைத்தொலைபேசியை பயன்படுத்த முடியாது

## ஊவா மாகாண முதலமைச்சர் உத்தரவு

(கொழும்பு)

அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் பாடசாலை நேரத்தில் ஆசிரியர்கள் கைத்தொலைபேசியை பயன்படுத்த முடியாது என ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான புதிய சுற்று நிருபம் வலயக் கல்விப் பணிமனைகளுக்கு அனுப்பப்படும் என்றும் முதலமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலை கடமை நேரங்களில் ஆசிரியர்கள் கைத்தொலைபேசிகளை செயலிழக்கச் செய்து அவற்றைப் பாடசாலை அதிபரின் அலுவலகத்தில் ஒப்படைக்க அறிவுறுத்தல் விடுக்கப்படவுள்ளது.

பாடசாலை கடமை நேரங்களில் கைத்தொலைபேசியின் பாவனை பாடசாலை கல்விச் செயற்பாடுகளுக்கு இடையூறாக அமைந்துள்ளது.

இவற்றைத் தவிர அனுமதியில்லாமல் படமெடுக்கும் செயற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன.

இதனால் கைத்தொலைபேசிகளை பாடசாலை நேரத்தில் அதிபரின் அலுவலகத்தில் வைப்பதுடன் ஏதாவது அவசர தேவைகளின் போது பாடசாலை தொலைபேசி இலக்கத்திற்கோ அல்லது பாடசாலை அதிபருடனோ தொடர்பை ஏற்படுத்த முடியும்.

இந்த நடைமுறை இறுக்கமாகப் பின்பற்றப்படுவதற்கான சுற்றுநிருபம் விரைவில் அமுலுக்கு வரும்.

இந்த நடைமுறையைப் பின்பற்றாத ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படுவார்கள் என்றும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார். (3)

# நீர் விநியோகம் இடை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

மாநகரசபை பிரதான நீர் விநியோக நிலையத்தில் இடி, மின்னல் தாக்கமேற்பட்டு பம்பிகள் சேதமடைந்த காரணமாக நீர் விநியோகம் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாக யாழ்.மாநகரசபை அறிவித்துள்ளது.

இதற்கான திருத்தங்கள் முடிவடைந்ததும் சேவைகள் வழமைக்கு திரும்பும் எனவும் அதுவரை குடிநீர் பவுசர்கள் விநியோகிக்கும் குடிநீரையும் சிறிய நீர்விநியோகத் திட்டங்கள் மூலம் வழங்கும் குடிநீரையும் பெற்றுக்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# வளவாளர்களை இணைத்துக்கொள்ள விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் அமைச்சானது வடமராட்சி வடக்கு பிரதேசத்தில் கலைச்செயற்பாடுகளை ஊக்குவிக்கும் பொருட்டு கலாசார மத்திய நிலையத்தின் மூலமாக கலைசார் வகுப்புக்களையும் மொழிசார் வகுப்புக்களையும் நடத்தி வருவதுடன் அகில இலங்கை ரீதியாக கலை சார்ந்த போட்டிகளையும் நடத்தி வருகின்றது.

இந்த வகையில் பருத்தித்துறை கலாசார மத்திய நிலையத்தின் 2016-ம் ஆண்டுக்கான வளவாளர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

எனவே இசை, நடனம், சித்திரம், கிராமியக்கலைகள் மற்றும் ஆங்கிலம், சிங்களம் ஆகிய பயிற்சி வகுப்புக்களை நடத்துவதற்குத் தகைமை உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் வடமராட்சி வடக்கு பிரதேசத்தினுள் வசிப்பவர்களாக இருக்க வேண்டும் என்பதுடன் தமது முழுப்பெயர், பிறந்த திகதி, வயது, தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி, தொலைபேசி இலக்கம், துறை சார்ந்த தகைமை போன்ற விபரங்கள் அடங்கிய தமது விண்ணப்பத்தினை நிலையப் பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம், சி.க.கூ.சங்கக்கட்டடம், கதிரைவேற்பிள்ளை வீதி, தம்பசிட்டி, பருத்தித்துறை எனும் முகவரிக்கு எதிர்வரும் 27.11.2015 வெள்ளிக்கிழமைக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் என பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆர்.ரி.ஜெயசீலன் அறிவித்துள்ளார். (இ)

# கமராவுடன் சிறியரக விமானம்

(கரணவாய்)

வடமராட்சி மந்திகைப் பகுதியில் கமரா பொருத்தப்பட்ட றிமோட் கொன்றோலில் இயங்கும் சிறிய விமானம் ஒன்று நேற்று முன்தினம் பறந்து திரிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் 12.30 மணியளவில் மேற்படி விமானம் பறந்து திரிந்து படப்பிடிப்பிலும் ஈடுபட்டுள்ளது.

இது தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் நிலையத்தில் எவ்வித அறிவித்தலும் கிடைக்கப் பெறவில்லை என பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக மந்திகை வைத்திய சாலை, சிலையடி, சந்தை, புலோலி சந்தை போன்றவற்றை மையமாக கொண்டே இவ் விமானம் பறந்து கொண்டிருந்தது என பொதுமக்களாலும் இது தொடர்பாக தெரிவிக்கப்பட்டது.

யாழ். நகரில் அண்மையில் இவ்வாறான விமானம் ஒன்று பறந்தது எனவும் அவ் விமானத்தினை தனியார் நிறுவனம் ஒன்று உரிமை கோரியமையும் குறிப்பிடத்தக்கது. (இ-5,60)

# சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

கந்தசஷ்டி விரத நிகழ்வை முன்னிட்டு யாழ்ப்பாணம், தெய்வத் தமிழ்ச் சுடர் இராசையா ஸ்ரீதரனின் தெய்வீக சொற்பொழிவொன்று "முருகன் பெருமை" எனும்' தலைப்பில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு மாங்குளத்தில் உள்ள மல்லாவி முருகன் கோயிலில் நடைபெறும். (2)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### பெற்றோரை மகிழ்விப்போம்

★ பெரும்பாவியை குறித்து புறம் பேசுவது குற்றமாகாது. தான் மறைவாக செய்கின்ற பாவங்களை வெளியில் சொல்பவனைக் குறித்துப் புறம் பேசுவது குற்றமாகாது.

★ மனைவியைத் திருப்திப்படுத்துவ ற்காகப் பொய் சொல்லுங்கள். போர்க்களத்தில் எதிரியை (தந்திரத்தால்) வெல்வதற்காகப் பொய் சொல்லுங்கள்.

★ அல்லாஹ்வுக்கு மிக பிரியத்திற்குரிய தலம் பள்ளிவாசலாகும். அவனுக்கு மிக மிக வெறுப்புக்கு உரிய இடம் கடைவீதியாகும்.

★ சொர்க்கம் வேண்டுமா? விருப்பம் கொண்டவர் பெற்றோர்களைச் சந்தோஷப்படுத்துங்கள்.

★ உங்களுடைய குற்றங்குறைகளைப் போக்கிக் கொள்ளாத நிலையில் மற்றவர்களுடைய குற்றங்களைக் குறித்துப் பேசாதீர்கள்.

★ நீங்கள் இரவில் அதிகமாக தூங்காதீர்கள். ஏனென்றால், அதிகமாகத் தூங்கினால் கியாமநாளில் ஏழையாக எழுப்பப்படுவீர்கள்.

★ மதுபானம் அருந்துவது பாவங்கள் அனைத்திற்கும் தாயாகும். மது அருந்துபவன் தொழுகையை விட்டுவிடுவான்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2015

"குழந்தைகளற்றவர்கள் நம்பிக்கையற்ற வாழ்வை எதிர்கொள்வதைப் போல மரங்களற்ற நாடும் பெரும்பாலும் உதவிகளற்றதாகவே காணப்படும்"

*–தியோடர் ரூஸ்வெல்ற் (அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி*



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### புத்தாண்டுக் கொண்டாட்டம்

புத்தாண்டு பிறப்பு சிறப்பான கொண்டாட்டமாக இருந்தது. ஒவ்வொரு நாளும் போல்! ஒவ்வொருவரும் வழக்கத்திற்கு மாறாக ஆனந்தத்தில் மயங்கி இருந்தார்கள்... ஒவ்வொரு நாளும் போல்! ஸ்ரீ ஸ்ரீ அவர்களிடம் தான் என்னே ஒரு வசீகரம்... என்னே ஓர் ஈர்ப்பு... ஒவ்வொரு நாளும் போல்!

இருக்கையின் மேல் ஒரு கூடை நிறையச் சொக்லேட்டுக்கள் இருந்தன... ஒவ்வொரு நாளும் போல! இன்று அவை எல்லாம் தேனீக்கள் வடிவில் இருந்தன. குருஜியின் கைகளில் இருந்து அவை பறக்கத் தொடங்கின.

அப்படியே இருங்கள்

❖ ஆனந்தம் என்பது உருகிவிடுவது... உங்கள் தனித்தன்மையை களைவது

❖ அமைதி என்பது உருகுவது... உங்கள் தனித்தன்மையைக் களைவது

❖ அன்பு என்பது உருகுவது... உங்கள் தனித்தன்மையைக் களைவது

❖ 1996ஆம் ஆண்டுக்கான செய்தி... அப்படியே இருங்கள்!

❖ அதற்குச்சோம்பேறியாக இருங்கள் என்ற பொருள் இல்லை!

❖ அதி சுறுசுறுப்பாக இருங்கள்... அப்படியே இருங்கள்!

❖ நிகழ்ச்சிகள் வரும் போகும், மலர்களைப்போல் அவை அழிந்துவிடும். ஆனால் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஒவ்வொரு மனிதரிலும் மதுரம் உள்ளது.

❖ தேனீயைப்போல ஒவ்வொரு நிகழ்விலிருந்தும் ஒவ்வொரு கணமும் மதுரத்தை மட்டும் எடுத்துக்கொண்டு நகர்ந்து கொண்டே இருங்கள்.

❖ சுறுசுறுப்பான தேனீயாய் இருங்கள். உங்களுடைய ஆன்மாவில் ஒன்றியிருங்கள்.

கேள்வி: வாழ்க்கையின் அமிர்தம் எது?

ஸ்ரீ ஸ்ரீ: எல்லையற்ற தெய்வீகம்

## வாணவேடிக்கை காட்டிய சங்கா

# சச்சின் அணியை வீழ்த்தி தொடரை வென்றது வார்னே அணி



ஆல் ஸ்டார்ஸ் கிரிக்கெட் போட்டியின் 2 ஆவது இருபது-20 ஆட்டத்தில் வார்னே அணி 57 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

அமெரிக்காவில் கிரிக்கெட்டை பிரபலப்படுத்தும் முயற்சியாக முன்னாள் கிரிக்கெட் ஜாம்பவான்கள் பங்கேற்கும் ஆல் ஸ்டார்ஸ் கிரிக்கெட் போட்டி நடத்தப்படுகிறது.

இதில் சச்சின் டெண்டுல்கரின் சச்சினின்ஸ் பிளாஸ்டர்ஸ் அணியும், ஷேன் வார்னேயின் வார்னேஸ வாரியஸ் அணியும் மோதுகின்றன.

3 போட்டிகள் கொண்ட இந்த தொடரின் முதல் ஆட்டம் நியூயோரக்கில் நடைபெற்றது. இதில் 6 விக்கெட் வித்தியாசத்தில் வார்னே அணி வெற்றி பெற்றது.

இந்நிலையில் இந்த தொடரின் 2 ஆவது இருபது-20 போட்டி டெகசாஸில் உள்ள ஹெராஸ்டனில் நடைபெற்றது.

நாணய சுழற்சியில் வென்ற சச்சின் முதலில் வார்னே அணியை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தார். இதைத் தொடர்ந்து அந்த அணி களமிறங்கியது.

தொடக்க வீரர் மைக்கேல் வாகன் (30), ஹேடன் (32) அதிரடி தொடக்கம் கொடுத்து ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த காலிஸ் 23 பந்தில் 4 சிக்சர் உட்பட 45 ஓட்டங்கள் எடுத்தார்.

பொண்டிங் தன் பங்கிற்கு அதிரடியாக விளையாடி 16 பந்தில் 41 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் ருத்ரதாண்டவம் ஆடிய சங்கக்காரா 30 பந்தில் 6 சிக்சர் 6 பவுண்டரி உட்பட 70 ஓட்டங்கள் எடுத்தார்.


இதனால் 20 ஓவர்கள் முடிவில் வார்னே அணி 5 விக்கெட் இழப்பிற்கு 262 ஓட்டங்களை குவித்தது. சைமோன்ஸ் (19), ஜான்டி ரோட்ஸ் (18) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

263 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்கை நோக்கி களமிறங்கிய சச்சின் அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தது. கடந்த போட்டியில் அதிரடி காட்டிய ஷேவாக் (16) இந்தப் போட்டியில் ஏமாற்றினார். சச்சின் 33 ஓட்டங்கள எடுத்தார்.

ஜெயவர்த்தனே (5), கங்குலி (12), லாரா (19) நிலைக்கவில்லை. பொல்லாக் 7 சிக்சருடன் 55 ஓட்டங்கள் குவித்தார்.

20 ஓவர்கள் முடிவில் சச்சின் அணியால் 8 விக்கெட்டுக்கு 205 ஓட்டங்களே எடுக்க முடிந்தது. இதனால் வார்னே அணி 57 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் 3 இருபது-20 போட்டிகள கொண்ட தொடரை 2-0 என்ற கணக்கில் வார்னே அணி கைப்பற்றியது.

70 ஓட்டங்கள் குவித்த வார்னே அணியின் சங்கக்காரா ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார். (க)



# இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து கவுகாத்தி அணிக்கு 4வது வெற்றி

இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து போட்டியில் சென்னையில் நேற்று முன்தினம் கொட்டும் மழையில் நடந்த ஆட்டத்தில் கவுகாத்தி அணி 2-1 என்ற கோல் கணக்கில் சென்னையை வீழ்த்தி 4ஆவது வெற்றியை ருசித்தது.

2ஆவது இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து (ஐ.எஸ்.எல்.) தொடர் பல்வேறு நகரங்களில் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. இதில் சென்னை நேரு ஸ்டேடியத்தில் நேற்று இரவு நடந்த 35 ஆவது லீக் ஆட்டத்தில் சென்னையின் எப்.சிநார்த் ஈஸ்ட் யுனைடெட் (கவுகாத்தி) எப்.சி. அணிகள் மோதின. விறுவிறுப்பான இந்த ஆட்டம் தொடங்கிய 25 ஆவது நிமிடத்தில் மழை குறுக்கிட்டது. தொடர்ந்து இடியுடன் மழை கொட்டியதால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. சுமார் 55 நிமிட இடைவெளிக்கு பிறகு மீண்டும் ஆட்டம் தொடங்கியது.



ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்தில் (33 ஆவது நிமிடம்) சென்னை அணி கோல் அடித்தது. எலானோ இந்த கோலை அபாரமாக அடித்தார். 44 ஆவது நிமிடத்தில் கவுகாத்தி அணி பதில் கோல் திருப்பியது. கோல் கீப்பர் அபுலா எடுமா தடுத்து கையில் இருந்து எகிறிய பந்தை கண் இமைக்கும் நேரத்தில் கமரா கோலாக்கினார். முதல் பாதியில் இரு அணிகளும் 1 : 1 என்ற கோல கணக்கில் சமநிலை வகித்தன.


அகுஸ்டா அடித்த அருமையான ஷாட் மற்றும் எலானோ பிரிகிக் வாய்ப்பை பயன்படுத்தி கோலை நோக்கி அடித்த அபாரமான ஷாட்டையும் கவுகாத்தி அணியின் கோல் கீப்பர் ரெகணேஷ் அபாரமாக தடுத்தார். பின் பாதியில் பலத்த மழை கொட்டினாலும் அதனை பொருட்படுத்தாமல் இரு அணியினரும் கோல் அடிக்க முற்பட்டனர். 72 ஆவது நிமிடத்தில் கவுகாத்தி அணி 2 ஆவது கோலை அடித்து சென்னைக்கு அதிர்ச்சி அளித்தது. முதல் கோலை அடித்த கமரா கடத்தி கொடுத்த பந்தை மாற்று ஆட்டக்காரர் சிலாஸ் கோலுக்குள் திணித்தார்.

அதன் பிறகு கவுகாத்தி அணி தற்காப்பு ஆட்டத்தில் அதிக கவனம் செலுத்தியது. சென்னை அணியினர் கோல் அடிக்க தீவிரம் காட்டினாலும் கவுகாத்தியின் தடுப்பு அரணை கடைசி வரை தகர்க்க முடியவில்லை. முடிவில் கவுகாத்தி அணி 2 : 1 என்ற கோல் கணக்கில் சென்னையை வீழ்த்தி 4 ஆவது வெற்றியை பதிவு செய்தது. சென்னை அணி சந்தித்த 5 ஆவது தோல்வி இதுவாகும்.

தீபாவளி தினத்தன்று கொச்சியில் நடந்த விறுவிறுப்பான 34 ஆவது லீக் ஆட்டத்தில் அட்லெடிகோ டீ கொல்கத்தா அணி 3:2 என்ற கோல் கணக்கில் கேரளா பிளாஸ் டர்ஸ் அணியை வீழ்த்தி 4 ஆவது வெற்றியை பதிவு செய்தது. பரபரப் பான இந்த ஆட்டத்தில் கடைசி நிமிடத்தில் அரடா இசுமி அடித்த 2 ஆவது கோலால் கொல்கத்தா அணி வெற்றியை தனதாக்கியது. (க)

## இங்கிலாந்தை வீழ்த்திய பாகிஸ்தான்

பாகிஸ்தான்-இங்கிலாந்து அணிகள் இடையேயான 4 ஒரு நாள் போட்டித் தொடரில் முதல் ஆட்டம் அபுதாபியில் நேற்று நடந்தது. முதலில் விளையாடிய இங்கிலாந்து அணி பாகிஸ்தானின் அபாரமான பந்து வீச்சால் 49.4 ஓவரில் 216 ஓட்டங்களில் சுருண்டது. கப்டன மார்கன் அதிகபட்சமாக 76 ஓட்டங்களும, டெய்லர் 60 ஓட்டங்களும் எடுத்தனர். முகமது இர்பான் 3 விக்கெட்டும், அன்வர் அலி, சோயிப் மாலிக் ஆகியோர் தலா 2 விக்கெட்டும் எடுத்தனர்.



பின்னர் விளையாடிய பாகிஸ்தான் ஹபீஸ் சதத்தால் எளிதில் வெற்றி பெற்றது. அந்த அணி 43.4 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 217 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்தை தோற்கடித்தது. ஹபீஸ் 130 பந்தில் 102 ஓட்டங்களும் பாபர் ஆசம் 62 ஓட்டங்களும் எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தனர். ரீஸ்டோப்ளே 3 விக்கெட் எடுத்தார்.

இந்த வெற்றி மூலம் பாகிஸ்தான் 1 : 0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. 2 ஆவது ஆட்டம் அபுதாயில் இன்று நடக்கிறது.

பாகிஸ்தான் அணியின் முன்னாள கப்டனான யூனிஸ்கான் நேற்றைய போட்டியோடு ஒரு நாள் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்து இருந்தார். வெற்றியுடன் அவரை பாகிஸ்தான் அணி அனுப்பி வைத்தது. தனது கடைசி ஒரு நாள் ஆட்டத்தில் அவர் 9 ஓட்டங்கள் எடுத்தார்.

37 வயதான யூனிஸ்கான் 265 ஒரு நாள் போட்டியில் விளையாடி 7249 ஓட்டங்கள் எடுத்துள்ளார். சராசரி 31.257 சதவீதமும், 48 அரை சதமும் எடுத்துள்ளார். (க)

# இன்று ஹர்த்தால்...

ஆசிரியர்கள் பாடசாலை செல்வதனை தவிர்க்குமாறு இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை தமிழர ஆசிரியர் சங்கம் என்பன கோரியுள்ளன. யாழ். பல்கலைக்கழகத்திலும் மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் பணிக்கு செல்வதனை புறக்கணிக்குமாறு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது.

சிறைகளில் எவ்வித விசாரணைகளுமின்றி நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தம்மை விடுவிக்குமாறு கோரி தொடர்ச்சியான போராட்டங்களை கடந்த காலம் முதற்கொண்டு முன்னெடுத்து வருகின்றனர். இதில் இறுதியாக கடந்த மாத முற்பகுதியில் தொடர் உணவு தவிர்ப்பு போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

இப்போராட்டம் உச்சமடைந்து ஐந்து நாட்களாக முன்னெடுக்கபட்டு வந்தநிலையில் சிலரின் வெறும் வாய்மூல உறுதியளிப்பை மாத்திரம் நம்பி அத்தொடர் உண்ணாவிரத போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

இவ் உறுதியளிப்பின் பிரகாரம் கடந்த ஏழாம் திகதிக்கு முன்பாக தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

எனினும் அவ்வுறுதியளிப்பு செயலுருப்பெறாத நிலையில், கைதிகளை பிணையில் விடுவிப்பு, கட்டம் கட்டமாக விடுவிப்பு என பல அறிவிப்புகள் தற்போது வரை அரசினால் கூறப்பட்டு வருகின்றன. இதற்கு அப்பால் அரசியல் கைதிகளை பிணையில் விடுவிப்பதற்கு வடக்கு மாகாண சபை உள்ளிட்ட பல தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்த போதிலும் அவ் எதிர்ப்புக்களை மீறியும் நேற்று முன்தினம் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் தமது போராட்டத்தை கைவிடப்போவதில்லை என அறிவித்த அரசியல் கைதிகள் பிணையில் விடுவிக்கப்பட்டவர்களில் இருபத்து ஆறு கைதிகளே தமிழர்கள் எனவும் ஏனையவர்கள் சிங்களவர்கள் எனவும், பிணை அனுமதி வழங்கப்பட்டதே தவிர அவர்கள் எவரும் விடுதலை செய்யப்படவில்லை எனவும் கைதிகள் சார்பில தெரிவிக்கப்பட்டது.

தாம் கடந்த முறையின் போது ஏமாற்றப் பட்டதனை உணர்ந்த கைதிகள் மீண்டும் உணவு தவிர்ப்பு போராட்டத்தினை ஆரம்பித்து இன்று ஐந்தாவது நாளாக உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்றைய தினம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி இன்று வெள்ளிக் கிழமை (13-11-2015) இடம்பெறும் பணிப்புறக்கணிப்பு போராட்டம் வெற்றிபெற அனைத்து நிறுவனங்களையும் மூடி அனைத்து நடவடிக்கைகளையும் நிறுத்தி ஒத்துழைக்குமாறு கோருகின்றோம்.

பெருமளவான தமிழ் இளைஞர்கள் யுவதிகள் கொடிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சுமார் இருபது வருடங்கள் வரை வாடுகின்றனர். அங்கு அவர்கள் அணுவணுவாக செத்து மடிந்து கொண்டிருக்கின்றனர். அவர்களது விடுதலை தொடர்பில் அரசு இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்காது அனைவரையும் ஏமாற்றி வருகின்றது.

தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று "நல்லாட்சி" அரசை அமைத்துள்ளவர்கள்எமதுமக்களை தொடர்ந்தும் கண்ணீரோடு அலையவிட்டுள்ளனர்.

அரசியல் கைதிகளது தாய்மார, பிள்ளைகள், மனைவிமார் தமது நாளாந்த வாழ்வில் சொல்ல முடியாத துன்பங்களுடனும் துயரங்களுடனும் வாழ்ந்து வருகின்றனர். பெரும்பாலான அரசியல் கைதிகள் குடும்பத்தலைவர்களாக இருப்பதால் உழைப்பாளிகளை இழந்து குடும்பங்கள் வறுமையில் வாடுகின்றனர். மனைவி பிள்ளைகள் பாதுகாப்பற்ற சூழலில் வாழ்ந்து வருகின்றனர். குடும்பத்தலைவிகள் தாம் உழைப்பிற்கு செல்வதாயினும் பிள்ளைகளை தனியே விட்டு விட்டே உழைப்பிற்கு செல்ல வேண்டிய நிர்க்கதி நிலையில் உள்ளனர். குழந்தைகள் தந்தையரின் வரவுக்காக நாளும் ஏங்குகின்றனர். அவர்களது துன்பியல் வாழ்வுக்கும், கைதிகளது சிறை வாழ்வுக்கும் முடிவு கட்டப்படல் வேண்டும். அனைத்து அரசியல் கைதிகளும் உடனடியாக விடுதலை செய்யப்படல் வேண்டும்.

நீண்டகாலமாக விடுதலையின்றி சிறையில் வாடும் அரசியல் கைதிகள் தமது விடுதலையை வலியுறுத்தி சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் தொடர்ந்தும் ஈடுபட்டுவருகின்றனர. அவர்களது உடல்நிலை மோசமடைந்து செல்கின்றது. அவர்களது கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்படல் வேண்டும். அனைத்துக் கைதிகளும் விடுதலை செய்யப்படல் வேண்டும்.

அதற்கான அழுத்தத்தினை இலங்கை அரசு மீது ஏற்படுத்தவும் சர்வதேச சமூகத்தின் கவனத்தை கைதிகளின் விடுதலைக்கு ஆதரவாக திருப்பும் வகையிலும் இன்று வெள்ளிக்கிழமை (13.11.2015) இடம்பெறும் பணிப் புறக்கணிப்பானது வெற்றிகரமாக நடந்தேற வேண்டும்.

எனவே அனைத்து வர்த்தக நிலையங்கள், சந்தைகள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட சகல அரச நிறுவனங்கள், பொது நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் அனைத்தையும் மூடியும், போக்குவரத்துச் சேவைகளை நிறுத்தியும் முழுமையான இயல்பு நிலை தவிர்ப்பை கடைப்பிடிக்குமாறு கோருகின்றோம்.

இப்போராட்டத்தின்போது எவரும் வன்முறையில் ஈடுபடவோ வன்முறைக்கு இடமளிக்கவோ வேண்டாம் எனக் கோருவதுடன், மருத்துவ சேவைகள் போன்ற அத்தியாவசிய சேவைகள் பாதிக்கப்படக்கூடாதென்பதுடன், பொது அமைதியை பேணும் வகையில் அனைவரையும் செயற்படுமாறும் கோருகின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே போல் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், ஆசிரியர் சங்கம் என்பனவும் அறிக்கை விடுத்துள்ளன. ஈழத்தமிழ் இனத்துக்காக பாடுபட்டு சிறையில் வாடும் தமது மகன்கள், மகள்களின் விடுதலைக்காக எமது தமிழினம் போராட முன்வர வேண்டும்.

எங்களுக்காக எம்மவர்கள் போராட முன்வராவிட்டால் சிங்களவர்கள் எவ்வாறு எமக்கு தீர்வினை தருவார்கள் என காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இன்றைய ஹர்த்தாலுக்கு அனைத்து தரப்பினரும் பூரண ஆதரவினை வழங்க வேண்டுமென வடக்கு மாகாண முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (செ-4)

# இராணுவமே...

தெரிவித்து பெரும்பாலான முறைப்பாடுகள் ஐ.நா செயற்பாட்டு குழுவிடம் பதிவு செய்யப்பட்டுள்ளது. நேற்று மாலை கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் நடைபெற்ற இவ் விசாரணையில் பல நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு வாக்கு மூலங்களை வழங்கியிருந்தனர்.

தன்னிச்சையாக காணாமல் போகச செய்யப்படுகின்றமை தொடர்பான ஐக்கிய நாடுகள் செயற்பாட்டு குழு, வீதிகளில் இறங்கி போராடிய எம்மிடம் நேரடியாக விசாரணை மேற்கொண்டமை மூலம் நல்லதொரு ஒளிக்கீற்று ஒன்று தென்படுவதாக தோன்றுகின்றது என இவ்விசாரணையின் முடிவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஊடகங்களிற்கு தெரிவித்தனர்.

மேற்படி குழு விசாரணைகளுக்காக பிற்பகல் மூன்று மணியளவில் வருவதாக அறிவிக்கப்பட்டதனை தொடர்ந்து அவ்விடத்திற்கு இரண்டு மணிக்கெல்லாம் மக்கள் சாட்சியம் வழங்குவதற்காக வந்திருந்தனர். எனினும் பிற்பகல் ஐந்து மணிக்கு பின்னதாகவே செயற்பாட்டு குழுவினர் மேற்படி இடத்திற்கு வருகை தந்திருந்தனர்.

இதனால்வாக்குமூலம்வழங்க வந்த உறவுகள் மிகவும் சோர்வுற்ற நிலையிலேயே காணப்பட்டிருந்தனர். பின்பு சுமார் மாலை 6 மணியளவில் ஆரம்பமாகிய மேற்படி கூட்டம் இரவு எட்டு மணி வரை நடைபெற்றது. இதன் போது அங்கு வந்திருந்த உறவுகள் அனைவரும் தமது பிள்ளைகள், கணவன்கள் எவ்வாறு யாரால் கடத்தப்பட்டிருந்தனர் என்பது தொடர்பில் ஐ.நா செயற்பாட்டு குழுவிற்கு தெளிவுபடுத்தியிருந்தனர்.

இந்த கலந்துரையாடலின் போது இராணுவத்திற்கு எதிராகவே அதிகளவிலான முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. குறிப்பாக போரின் போதும் அதற்கு முன்னரும் இராணுவம் நமது பிள்ளைகளை அழைத்து செல்வதனை நேரடியாக கண்ணுற்றதாகவும், பின்பு இதுவரை எமது பிள்ளைகள் எங்கே என எவரும் கூறவில்லை. இதற்கு ஐ.நா தான் ஒரு முடிவினை பெற்று தர வேண்டுமென உறவினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதே போல் இங்கு போர்க்காலத்தில் இருந்த ஒட்டுக்குழுக்களும் தமது பிள்ளைகளை வெள்ளை வானில் கடத்தியதாக பெற்றோர்கள் சிலர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தனர்.

புதிய அரசு பொறுப்பேற்ற போதிலும் காணாமல் செய்யப்பட்டோர் விடயத்தில் எவ்வித முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை எனவும் ஐ.நா செயற்பாடு குழுவினருக்கு நேரடியாகவே குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

மக்கள் இது போன்ற பலதரப்பட்ட குறைபாடுகளை கூறியதன் பின்னர், காணாமல் போகச்செய்யப்பட்டவர்கள் எவ்வாறு, யாரால், என்பது போன்ற விடயங்களை ஆராய்வதிலேயே ஐ.நா அதிகாரிகள் ஈடுபட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை மேற்படி நிகழ்வு நடைபெற்ற வளாகத்திற்குள் ஊடகவியலாளர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை. இவ் அனுமதி மறுப்பிற்கான காரணத்தை அங்கு நின்றவர்களிடம் கேட்டபோது அங்கு நின்ற பெண்ணொருவர் தன்னை நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர் என அடையாளம் காட்டி இது தனிப்பட்ட நிகழ்வு அதனால் தான் ஊடகங்களுக்கு அனுமதி இல்லை என கூறியிருந்தார். (செ-4)

# 31 பிணைக் கைதிகளில்...

ரூபாய் பெறுமதியான 2 சரீர பிணையில் செல்வதற்கு கொழும்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி ஜிகான் பிலப்பிட்டிய உத்தரவு பிறப்பித்திருந்தார்.

பிணை வழங்கப்பட்ட கைதிகளில் 26 பேர் தமிழ் கைதிகளாக காணப்பட்ட நிலை யில் 5 பேர் சிங்கள கைதிகளாவார்.

அரசியல் கைதிகளில் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்ட வர்கள் தொடர்பிலான தகவல்கள் உரிய முறையில் அவர்களின் பெற்றோர்களுக்கு நேற்றுவரை தெரிவிக்கப்படவில்லை.

இதன்காரணமாக நேற்று முன்தினம் பிணையில் அனு மதிக்கப்பட்டவர்களில் ஒருவரை மாத்திரமே நேற்று அவர்களின் உறவினர்கள் சரீர பிணையில் அழைத்துச்சென்றனர்.

இவ்வாறு சரீர பிணையில் செல்ல அனுமதிப்பட்ட 31 கைதிகளின் பெயர்கள் வரு மாறு. தங்கராஜா புவனேஸ்வரன், சுந்தரலிங்கம் அகிலன், பூபாலசிங்கம் நிசாந்தன், மயில்வாகனம் ஜெசிகரன், சசிகரன் தங்கமலர், சபாரத்னம் உமாகரன், வீரசிங்கம் சுலக்சன், ஜெசுதாசன் மாயின் கல்டஸ், சுப்பிரமணியம்ரவிசந்திரன்.

விஜயகுமார் கேதீஸ்வரன், தியாகராசா ரமேஸ்வரன், சங்கர லிங்கராஜா குசாந்தன், துரைராஜா அமுதகரன், பாக்கியநாதன் ரெஜி னோல்ட், பாக்கியநாதன் ஹெலன் மேன்ரோல்ட், மகாதேவன் கிரு பாகரன், பாலசுந்தரம் சதாநந்தன்.

குமாரசாமி லிங்கேஸ்வரன், கந்தபோடி தவராசா, செல்வநாய கம் ஜோன்சன்ஸ் சுரேஸ்குமார், சிவக் கொழுந்து தங்கமணி, காளிமுத்து மகேந்திரன், கோணே சுபிள்ளை குகதாசன், பொன்னுத் துரை கணேசன், கனகரத்தினம் விஜயகுமார், கருணாநிதி காங்கா தரன், தசிதா குருதன் சலகே, லசந்த பத்மமாலா, டி.ஏ.பிரியந்த சிசிர குமாரா, ஏ.உதய சந்திமல், பி.டி.திமுது சுரத பெரேரா. (செ-11)

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை
### சந்தைகள், இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2016

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் அதிகாரத்திற்குட்பட்ட கீழக்காணும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை 01.01.2016 தொடக்கம் 31.12.2016ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் எம்மால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 13.11.2015 முதல் 24.11.2015 நண்பகல் 12.00 மணிவரையான அலுவலக நேரம்

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி :- 24.11.2015 பிற்பகல் 1.00 மணி வரை

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 24.11.2015 பிற்பகல் 2.00 மணி

நிபந்தனைகள்

கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடனும் தமது ஆளடையாளத்தை உறுதிபடுத்துவதற்காக தே.அ.அட்டை / செல்லுபடியான கடவுச்சீட்டு/ செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது
2. ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமூகமளித்தல் வேண்டும்.
கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
3. அலுவலகம், கிளிநொச்சி" என்ற முகவரிக்கு 24.11.2015ஆம் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்
4. கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் படிவம் வழங்கப்பட மாட்டாது.
5. கேள்வி நிபந்தனை அறிவுறுத்தலுக்கமையாத கேள்விக் கோரிக்கையை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும்
6. காரணம் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ செயலாளருக்கு பூரண அதிகாரமுண்டு.
கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
7. கேள்விப்பத்திரங்களை கீழ்க்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும் மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப்பணமும் செலுத்தி பிரதேசசபையின் தலைமைக்காரியாலயத்தில் மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
8. தெரிவுசெய்யப்படும் கேள்விதாரர் கேள்வித்தொகை 300.000.00 ரூபாவுக்குட்பட்ட தொகையாயின் கேள்வித் தொகையின் 1/2 பகுதியையும் 300.000.00 இற்கு மேற்பட்ட தொகையாயின் 1/3 ஒரு பகுதியையும் 26.11.2015 முன் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.
மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### குத்தகைக் கேள்வி அட்டவணை - 2016

| இல | குத்தகை விபரம் | ஏற்றுக்கொள்ளக் கூடியஆகக் குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கூடிய கேள்வி வைப்புத் தொகை | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| | புலோப்பளை உப அலுவலகம் | | | |
| 01. | மாட்டிறைச்சிக்கடை | 10,40,000.00 | 20,000.00 | 1000.00 |
| 02. | ஆட்டிறைச்சிக்கடை | 55,000.00 | 5,000.00 | 1000.00 |
| 03. | கோழியிறைச்சிக்கடை | 2,47,000.00 | 20,000.00 | 1000.00 |
| 04. | பொதுச்சந்தை (மரக்கறிச் சந்தை, மீன்சந்தை, துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம், சந்தை உட்புறம் அமைந்துள்ள கடைகள் உட்பட) | 8,81,000.00 | 20,000.00 | 1000.00 |
| | முள்ளிப்பற்று உப அலுவலகம் | | | |
| 01. | மாட்டிறைச்சிக்கடை | 1,95,000.00 | 20,000.00 | 1000.00 |
| 02. | பொதுச்சந்தை (மரக்கறி, மீன்சந்தை, து.வ.பாதுகாப்பு நிலையம் உட்பட) | 1,40,000.00 | 20,000.00 | 1000.00 |

மா.மகாதேவன்,
செயலாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
பளை.

திகதி : - 12-11-2015

(C-2704)

# சோபித தேர...

மாதுளுவாவே சோபித தேரரின் உடல் ஆயிரக்கணக்கான பௌத்த பிக்குகள், பொதுமக்களின் கண்ணீருக்கு மத்தியில் நேற்று தீயுடன் சங்கமமானது.

கோட்டை ஸ்ரீ நாகவிகாரையில் இருந்து ஊர்வலமாக எடுத்து வரப்பட்ட சோபித தேரரின் உடல் நாடாளுமன்ற வளாகத்துக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் அஞ்சலி நிகழ்வு ஆரம்பமானது.

இறுதி நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், பௌத்த பிக்குகள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

இதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பௌத்த, இந்து, கிறிஸ்தவ மத தலைவர்கள் அஞ்சலி உரைகளை நிகழ்த்தினர். (செ-12)

# 2000 பேருக்கு...

எமக்கு பெரும் எண்ணிக்கையான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் ஆலோசனைக்கு இணங்க 2 ஆயிரம் பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டவர்களுள் 90 வீதமானோர் சிங்களவர்களும், 10 வீதமானோர் தமிழ் மற்றும் முஸ்லிம் இனத்தவர்களும் அடங்குவர்.

இதில் அநேகமானோர் அமெரிக்கா, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்து ஆகிய நாடுகளுக்கு விண்ணப்பித்துள்ளனர்.

இரட்டை குடியுரிமை வழங்கும் வைபவம் எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (செ-12)

# பொது இடங்களி...

தெரிவித்துள்ளதாக வடக்கு மாகாண சுகாதார புனர்வாழ்வு அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இன்று (நேற்று) வடக்கு மாகாண முதலமைச்சர் தலைமையில் மாகாண அமைச்சர்கள், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து கலந்துரையாடினோம்.

ஜனாதிபதி செயலகத்தில் இந்த சந்திப்பு ஒன்றரை மணிநேரம் வரை இடம்பெற்றது. வடக்கு மாகாணத்திலுள்ள அன்றாட, உடனடிப்பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுததப்பட்டது. இதன்போது இராணுவம் தொடர்ந்தும் பொது இடங்களில் நிலைகொண்டுள்ளமை தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் இராணுவம் நிலைகொண்டுள்ள பொது இடங்கள் பற்றி ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்தேன். படிப்படியாக இராணுவத்தை பொது இடங்களிலிருந்து அகற்றுவதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

முதற்கட்டமாக பூந்தோட்டம் கூட்டுறவு பயிற்சிப்பாடசாலை மற்றும் குடியிருப்பு கலாசார மண்டபம் என்பவற்றிலிருந்து உடனடியாக இராணுவத்தை விலக்க சம்மதம் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தின் ஒரேயொரு கூட்டுறவு பாடசாலை பூந்தோட்டத்தில் அமைந்துள்ளது. 2009ற்கு பின்னர் இராணுவத்தால கையேற்கப்பட்ட இந்த கட்டிடமானது முன்னாள போராளிகளுக்கான புனர்வாழ்வு நிலையமாக இயங்கி வருகின்றது.

அதேபோன்று குடியிருப்பு கலாசார மண்டபம் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இராணுவ முகாமாக இயங்கி வருகின்றது. மக்கள் செறிந்து வாழுகின்ற நகரப்பகுதியில் கோவில், சிறுவர் பூங்கா, பாடசாலைக்கு மத்தியில் இந்த முகாம் இயங்கி வருகிறது.

இவற்றிலிருந்து இராணுவத்தை விலக்கி இயல்பு நிலையை ஏற்படுத்த வேண்டுமென கேட்டுக்கொண்ட நிலையில் மேற்படி விடயம் தொடர்பில் கவனமெடுப்பதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாக சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார். (செ-250)

# புதுடில்லி சென்ற...

ப்பது தவறான செயற்பாடு என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

நீர்வேலியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒருவருக்கு, மருத்துவ சிகிச்சையென்பது முக்கியமானது. ஆனால், தமிழர்களின் தலைமையான கூட்டமைப்பின் தலைவர் என்று கூறப்படுபவர், முக்கியமான மக்கள் பிரச்சினையொன்று இங்கு காணப்படும் வேளையில், மருத்துவ சிகிச்சைக்குச் செல்வது அநாகரிகமானது.

இப்பிரச்சினையைத் தீர்த்த பின்னர், தனது மருத்துவ சிகிச்சைக்கு அவர் சென்றிருக்கலாம். கடந்த 7ஆம் திகதிக்கு முன்னர் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்ததாக சம்பந்தன் சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளுக்குக் கூறியிருந்தார்.

ஆனால், அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. 31 கைதிகளுக்குப் பிணை வழங்கியுள்ளதாக கூறப்படுகின்றது. அப்படியென்றால் மிகுதிப் பேர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்படவுள்ளனரா?

5, 10 மற்றும் 20 வருடங்கள் எனச் சிறையில் இருப்பவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். ஆயுட்காலச் சிறைத்தண்டனை என்று கூறப்படுபவர்கள் கூட, 14 வருடங்களில் வெளியில் செல்ல முடியும். ஆனால், பல வருடங்களாக சிறைகளில் உள்ளவர்களுக்கு விசாரணைகள் நடைபெறாமல் உள்ளன என்றார். தற்போது மீண்டும், அரசியல் கைதிகள் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர். முழுமையான பதில் வேண்டும் என அவர்கள் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

அவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்படவேண்டும். கைதிகள் உண்ணாவிரதம் இருக்கக்கூடிய உடல்நிலையில் இல்லை. அவர்கள் வாழ்வா, சாவா என்னும் நிலையில் உள்ளனர். ஆகவே, சம்பந்தன் உடனடியாக இந்தியாவிலிருந்து நாடு திரும்ப வேண்டும் என குறிப்பிட்ட சுரேஷ் பிரேமச்சந்திரன், கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்று கூறிய தமிழ்த் தலைமைகள் எவரும் தற்போது நாட்டில் இல்லை என்பதையும் சுட்டிக்காட்டினார். (செ-12)

# கைதிகளின் விடு...

தெரிவிப்பதாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன மற்றும் வடமாகாண அமைச்சர்களான பொ.ஐங்கரநேசன், ரி.குருகுலராஜா, டாக்டர் பி.சத்தியலிங்கம், பி.டெனீஸ்வரன் ஆகியோர் நேற்றுக் காலை 11.00 மணியளவில் ஜனாதிபதி மாளிகையில் சந்தித்துப் பேசினார்கள். ஜனாதிபதியுடன் அவரது ஆலோசகர் கருணாரட்ணவும் இந்தப் பேச்சுக்களில் கலந்துகொண்டிருந்தார்.

வடமாகாண சபை எதிர்கொள்ளும் பிரச்சினைகள், தேவைகள், மத்திய அரசாங்கத்தினால் எதிர்கொள்ளப்படும் தடைகள் என்பவற்றை விளக்கும் விரிவான அறிக்கை ஒன்றை முதலமைச்சர் சந்திப்பின் ஆரம்பத்திலேயே ஜனாதிபதியிடம் கையளித்தார். இதிலுள்ள விடயங்கள் தொடர்பாகவும் விளக்கமளித்த முதலமைச்சர், தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினை தொடர்பில் முக்கியமாக ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

இலங்கையில் இரண்டு தடவைகள் ஆயுதந்தாங்கிய கிளர்ச்சியில் ஈடுபட்ட ஜே.வி.பி. யினருக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு அவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள் என்பதை சுட்டிக்காட்டிய வடமாகாண முதலமைச்சர், அதேபோல தமிழ் அரசியல் கைதிகளும் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினார். அதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் கோரினார்.

முதலமைச்சரின் கருத்தை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, அனைத்துக் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற கருத்தை தான் ஏற்றுக்கொள்வதாகவும், இருந்தபோதிலும் இந்த விடயத்தில் அரசியல் ரீதியாக சில பிரச்சினைகள் இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார். இருந்தபோதிலும், இதனை தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்த முதலமைச்சர், ஜனாதிபதி தனக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி கைதிகளின் விடுதலைக்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

தமிழ்க் கைதிகளை தொடர்ந்தும் தடுத்துவைத்திருப்பதால் பாதிக்கப்படுபவர்கள் அவர்கள் மட்டுமல்ல எனத் தெரிவித்த முதலமைச்சர், கைதிகளுடைய குடும்பத்தினரும் இதனால் சொல்லமுடியாத துன்பங்களை அனுபவித்துவருவதாகவும் சுட்டிக்காட்டினார். தினசரி தன்னைச் சந்திக்கும் கைதிகளின் உறவினர்கள், இது தொடர்பில் எழுப்பும் கேள்விகளுக்கு தான் பதிலளிக்க வேண்டியிருப்பதாகவும் முதலமைச்சர் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

இதனையடுத்து கைதிகளின் முழுமையான கோவைகளையும் தனக்கு அனுப்பி வைக்குமாறு சட்டமா அதிபரைப் பணித்த ஜனாதிபதி, எதிர்வரும் 16-ம் திகதி திங்கட்கிழமை இந்த விவகாரத்துக்கு தான் பதிலளிப்பதாகவும் முதலமைச்சரிடம் உறுதியளித்ததார்.

இதனையடுத்து வடமாகாண சபை எதிர்கொள்ளும் பிரச்சினைகள், மீள்குடியேற்றத்துக்காக எனக்கூறி காடழிக்கப்படுவது போன்ற விடயங்கள் முதலமைச்சரால் சுட்டிக்காட்டப்பட்டது. இவை தொடர்பில் தான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசுவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (செ-12)

# பரீட்சைகள் நாளை நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தால் நடத்தப்பட்டு வரும் உயர்தர மாணவர்களுக்கான பரீட்சைகள் யாவும் இன்று இடம் பெறமாட்டாது எனவும் இன்று இடம் பெறவிருந்த பரீட்சைகள் நாளை நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# தொடர்கிறது...

ஒரு சிலர் சிகிச்சைக்காக வைத்திய சாலைகளிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு மயக்கமடைந்தவர்கள் மகசின் மற்றும் வெலிக்கட சிறைச்சாலைகளில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளே என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் மயக்கமடைந்த கைதிகள் மருத்துவ உதவியினை பெறுவதற்கு மறுப்பு தெரிவித்து வருவதாகவும் இதனால் அவர்களின் உடல் நிலை மேலும் மோசமடைந்து செல்வதாகவும் அறிய முடிகின்றது.

தம்மை பொது மன்னிப்பில் விடுதலை செய்யக்கோரி அரசியல் கைதிகளினால் கடந்த மாதம் முன்னெடுக்கப்பட்ட உணவு தவிர்ப்பு போராட்டம் ஐந்து நாட்களாக முன்னெடுக்கப்பட்ட போதும், சிலரின் தலையீடுகளால் அத்தொடர் உண்ணாவிரத போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. இவ் உறுதியளிப்பின் பிரகாரம் கடந்த ஏழாம் திகதிக்கு முன பாக தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

அது நடைபெறாத நிலையில், இருபத்தி ஆறு தமிழ்க்கைதிகள் மட்டும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர். எனினும் பிணை நிபந்தனைகள் கடுமையாக உள்ள காரணத்தினால் அவர்களால் விடுதலை பெற்று வெளியே வர முடியாத நிலையே காணப்படுகின்றது. இந்நிலையில் தாம் ஏமாற்றப்பட்டதனை உணர்ந்த கைதிகள் மீண்டும் உணவு தவிர்ப்பு போராட்டத்தினை ஆரம்பித்து ஐந்தாவது நாளாக உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் ஐந்தாவது நாளாகவும் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் உடற்சுக வீனமான நிலையிலும் ஈடுபட்டுள்ளதனால் அவரகளது உடல் நிலை கடுமையாக மோசமாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-4-9)


யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக SIKARAM HOTEL SCHOOL

UK – SWISS – AUSTRALIA – SINGAPORE – MALAYSIA

விரும்பிய எந்த நாட்டுக்கும் சென்று இலட்சக்கணக்கில் பணம் சம்பாதிக்க

உள்நாட்டு, வெளிநாட்டு தொழில் & விசா ஏற்பாட்டுடன்



UK Certified Hotel Management Leading to University of Sunderland UK

வெளிநாட்டுப் பிரதிநிதியை நேரில் சந்தித்து அனுமதி பெற

SPOT ADMISSION

| | |
|---|---|
| 16-11-2015 திங்கள் 2 மணி | யாழ் சிகரம் விரிவுரை மண்டபம் |
| 17-11-2015 செவ்வாய் 9 மணி | மன்னார் YMCA மண்டபம் |
| 18-11-2015 புதன் 9 மணி | வவுனியா நெல்லி ஸ்ரார் ஹொட்டேல் |
| 18-11-2015 புதன் 2 மணி | கிளிநொச்சி சோலைவனம் விடுதி |

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள்

பதிவுகளுக்கு 0773 616 798

SIKARAM HOTEL SCHOOL

275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 021 222 0011

(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)

web: www.sikaram.lk (சி-2708)

Green Grass

19-11-2015

வியாழன் 2.00 மணி

யாழ் கிறீன் கிறாஸ்

வலம்புரி ஹொட்டேலில்

GRAND HOTEL SHOW

ஹொட்டேல் கற்கை விளக்கச் செயலமர்வு

Special Workshop on Hotel Management

முற்பதிவு அவசியம்



அன்பொளி கல்வியகம்

யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2015

சித்தியடைந்த மாணவர்களுக்கான

பரிசளிப்பு நிகழ்வு

எமது கல்வியகத்தில் கற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு 14.11.2015 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நாச்சிமார் கோவிலடி (ராஜா கிறீம் ஹவுஸ்) சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும். மாணவர்களைத் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(C-2659) இயக்குநர்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.11.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.